அறிஞர் அண்ணாவின்

கடவுள் தண்டிப்பார்

சீதை பதிப்பகம்

அறிஞர் அண்ணாவின்

கடவுள் தண்டிப்பார்

NATIONAL INSTITUTE OF LEADERSHIP TRAINING
#AP.508,, 22nd Street, TNHB Colony,
Korattur, Chennai - 600 080.

சீதை பதிப்பகம்
சென்னை - 600 005.
☎ 9790706549 / 9790706548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9 செயிண்ட் ஜான் சர்ச் வணிக வளாகம் ,ராக்கின்ஸ் சாலை,
திருச்சிராப்பள்ளி-1 ☎ : 99520 34876 / 0431 2419584

விலை : ரூ. 40

* 4ஆம் பதிப்பு : 2012
* முதற் பதிப்பு : 2008
* © உரிமை : பதிப்பகத்திற்கே
* பதிப்பாசிரியர் : **எஸ். கௌமாரீஸ்வரி** M.A., M.L.I.S.,
* நூலின் பெயர் : கடவுள் தண்டிப்பார்
* பக்கங்கள் : 104
* ஒளி அச்சு : ஜெய் ஜீனா
* வெளியீடு : சீதை பதிப்பகம்
10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
* அச்சிட்டோர் : கிளாசிக் பிரிண்டர்ஸ் செ - 2

CODE : **644**

கௌரா ஏஜென்ஸீஸ்

10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
☎ : 044-2844 3791 / 97907 06548 / 97907 06549
www.gowrabookfair.com. E-mail : gowra09@gmail.com

அம்மாவுக்கு...

அண்ணாவின் பிற நூல்கள்

1.	கம்பரசம்	30.00
2.	வேலைக்காரி	20.00
3.	ஓர் இரவு	25.00
4.	ஆரிய மாயை	20.00
5.	அருணோதயம் - கட்டுரைகள்	40.00
6.	கல்வி நீரோடை - கட்டுரைகள்	40.00
7.	கிளி நிறம் பெற்ற கழுகு - கட்டுரைகள்	40.00
8.	தேவையற்ற திருப்பணி - கட்டுரைகள்	40.00
9.	காதல் ஜோதி	40.00
10.	அண்ணாவின் பொன்மொழிகள்	20.00
11.	நிலையும் நினைப்பும்	20.00
12.	வர்ணாசிரமம்	20.00
13.	தீ பரவட்டும்	20.00
14.	கலிங்கராணி	60.00
15.	அப்போதே சொன்னேன்	20.00
16.	குமாஸ்தாவின் பெண்	25.00
17.	பெரியார் - ஒரு சகாப்தம்	20.00
18.	மணமக்களுக்கு உறுதிப்பாடு	20.00
19.	அமுத மொழிகள்	25.00
20.	ஏ! தாழ்ந்த தமிழகமே!	20.00
21.	திராவிடர் நிலை	
22.	விடுதலைப் போர்	
23.	திருமலை கண்ட திவ்யஜோதி, இரும்பாரம்	
24.	கடவுள் தண்டிப்பார்	
25.	நீதி தேவன் மயக்கம்	
26.	கனவும் காட்சியும்	

பெரிய பிரச்சினை

மிகப்பெரிய பிரச்சினை - ஓயாமல் விவாதிக்கப்பட்டு **வரும்** ஒப்பற்ற பிரச்சினை - **கடவுள்** சம்பந்தப்பட்ட பிரச்சினை.

இதுபற்றி பலருக்குத் தோன்றும் எண்ணங்களை நான் கண்டறிந்த அளவில் இந்தத் தொகுப்பில் எடுத்துக்காட்ட முற்பட்டேன்.

இவை வெவ்வேறு நேரங்களில் எழுதப்பட்டன என்றாலும் தொகுப்பாகப் படிக்கும்போது, இந்தப் பிரச்சினை பற்றி ஓரளவு தெளிவான கருத்து எழலாம்.

அதற்கே இந்த ஏடு! பிரச்சினையின் முழு சிக்கலையும் விளக்கிட அல்ல.

அண்ணாதுரை

கடவுள் தண்டிப்பார்

உள்ளே....

1. ஆறுமுகம் 1

2. கடவுள் விஷயம் 5

3. குமாரி சூர்யா 18

4. கதிரவன் கண்ணீர் 31

5. கடவுள் தண்டிப்பார் 50

6. கனவில் கீரதர் 59

7. வள்ளிநாயகியின் கோபம் 67

8. அரோகரா! கோவிந்தா! 72

9. சமயபுரத்தம்மன் மான நஷ்ட வழக்கு 81

கடவுள் தண்டிப்பார்

1. ஆறுமுகம்

"சுகம், துக்கம் இரண்டும் வாழ்க்கைத் தேரின் இரு உருளைகள். கவலையைவிடு, கடவுளை நம்பு. அவன் ஆணைப்படியே அனைத்தும் நடக்கும், அவனைத் தொழு, கஷ்டம் நீங்கும், சுகம் பிறக்கும்"

சஞ்சலப்பட்டு, கூப்பிய கரத்துடன் நின்று, குமுறுகிற நெஞ்சுக்கு ஆறுதல் தேடும், ஏழைக்கு, வேதாந்தி கூறும் உபதேசம் இது.

கடவுளின் முகத்திலே, களிப்பு பிறந்தது. இந்த ஏழை, எங்கே தன் கஷ்டத்தினால், நம்மை மறந்து விடுவது, அல்லது மனம் நொந்து தூற்றுவது என்ற மனப்போக்கு கொண்டுவிடுகிறானோ என்று எண்ணினோம். நல்ல வேளையாக, வேதாந்தி, நமக்கு வக்கீலானான். சுகம், துக்கம் இரண்டும் இருக்கத்தான் செய்யும் என்று உபதேசித்தான். ஏழையின் மனம் சாந்தி அடையும் என்று கடவுள் கருதிக் களிப்படைந்தார்.

"ஆட்டுக்கும் அளவறிந்துதானே, ஆண்டவன் வால் வைக்கிறார். உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா, பயல், இப்போதுதான், படுகிறான். வேண்டும் அவனுக்கு."

ஏழையின் கஷ்டத்துக்குக் காரணமாக இருந்தவன், ஆண்டவன் ஏழையைத் தண்டித்தான், அது தக்க காரியம் என்று கூறிக் களிக்கிறான். ஆண்டவனின் முகம் கோபத்தால் சிவந்தது. கொடியவன்! ஏழையைக் கெடுத்ததுடன் இல்லை, என்னையுமல்லவா, நடுச்சந்திக்கு

இழுக்கிறான். அந்த ஏழை படும்பாடு, என் ஏற்பாடு, அதுவும் சரியான ஏற்பாடு என்று தைரியமாகக் கூறுகிறான். எவ்வளவு துணிவு! ஏழையைக் கெடுத்ததுமின்றி, ஏழையை என்மேலே ஏவுகிறானே, இவ்வளவும் என் ஏற்பாடு என்று பேசி. எவ்வளவு வன்னெஞ்சம் இவனுக்கு என்று எண்ணினார், கோபம், பொங்கிற்று ஆண்டவனுக்கு.

"அட ஏண்டா தம்பி! ஆண்டவன் ஆண்டவனென்று, அடிக்கொரு தடவை பிதற்றுகிறே. அந்த அக்ரமக்காரன் செய்த கொடுமையாலே நீ அவதிப்படுகிறே. ஆண்டவன் ஏன் இதைச் செய்யப் போகிறார்?"

ஏழையைக் கொடுமை செய்தவனின் கெட்ட குணத்தை அறிந்த ஒரு நண்பன், ஏழைக்கு வந்த இடருக்கு ஆண்டவன் பொறுப்பாளி அல்ல என்று கூறுகிறார்.

கடவுளின் கோபம் இந்தப் பேச்சினால் குளிர்ந்துவிட்டது. வேதாந்தி கஷ்ட காலத்திலும் என்னை மறக்கக் கூடாது என்ற உபதேசம் செய்தான், அதற்கு நேர்மாறாக ஏழையைக் கெடுத்த கொடியவன், என்மீது ஏழையை ஏவிவிடப்பார்த்தான். நல்ல வேளையாக இந்த நண்பன் வந்தான், என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். இடர் விளைவித்தவனைப்பற்றி யோசி என்று கூறி, ஏழையின் கண்ணையும், கருத்தையும் அந்தப்பக்கம் திருப்பிவிட்டான்; அது மிக நல்லதாயிற்று, என்று எண்ணி ஆண்டவன் நிம்மதியடைந்தார். முகத்திலே கோபம் போய் தெளிவு பிறந்தது.

"ஆண்டவனே! எங்களை ஏன் இப்படித் தவிக்க வைக்கிறாயோ தெரியவில்லையே. அந்தப் பாவிக்குப் பக்கத்துணை யாகவா இருக்கிறாய்? நியாயமா? நாங்கள் என்ன குற்றம் செய்தோம்? தெய்வமே! இது அடுக்குமா?" என்று ஏழையின் மனைவி ஆண்டவனிடம் முறையிட்டு, நீதி வழங்கும்படிக் கேட்கிறாள்.

ஆண்டவனின் கண்களிலே இருந்து அவரையும் அறியாமல் நீர் வழியலாயிற்று. "இந்த அபலை, என்னை நீதி வழங்கும்படிக் கேட்கிறாளே. அவள்படும் கஷ்டம் அக்ரமக்காரனால் உண்டானது என்கிறாள், அது வரையிலே சந்தோஷந்தான், நான்தான் கொடுமைக்குக் காரணம் என்று அம்மை குற்றம் சாட்டவில்லை. ஆனால், என்மீது உடந்தையாக இருக்கும் குற்றத்தைச் சுமத்துகிறார்களே, நான் என்ன செய்வேன்? என் கடமையை நான் செய்யவேண்டுமென்று எனக்குக் கவன மூட்டுகிறாள் அந்தக் காரிகை. முறையிடுகிறாள். தூற்றிவிடக்கூடாதா? துயர் நேரும் போது, மனதிலே சாந்தி வருவித்துக் கொள்ளாமல், தெய்வத்தை நிந்தித்தாய், ஆகையால் உனக்கு அருள்பாலிக்க முடியாது என்றாவது சொல்லித் தப்பித்துக்கொள்ளலாமே? இந்தப் பெண்மணி, தன் கஷ்டத்தை என்னிடம் முறையிட்டு அல்லவா, நீதி வழங்கச் சொல்கிறாள். ஐயோ! அந்தக் கண்ணீருக்கு நான் சமாதானம் சொல்லியாகவேண்டுமே என்ன செய்வேன்." என்று கூறினார், ஆண்டவன். கண்களிலே இருந்து நீர், தாரை தாரையாகப் பெருகிற்று.

"ஆண்டவனறிய நான் ஒன்றும் தவறு செய்யவில்லை. வீணாக என்மேல் சந்தேகப்பட வேண்டாம். அவன் பொய் பேசுகிறான். நான் அவன் சொத்தை அபகரிக்கவில்லை. சாட்சி உண்டா கேளுங்கள். என்னை அவமானப்படுத்த வேண்டாம். ஆண்டவன் சாட்சியாக, நான் அந்த ஏழையின் சொத்தை அபகரிக்கவில்லை" என்று, ஏழையைக் கெடுத்தவன் அலறினான், ஏழையின் பக்கம் சிலர், சேர்ந்து கொண்டு, அடித்து உதைத்து, ஏழையிடமிருந்து அபகரித்த சொத்தைக் கொடுக்கும்படி வற்புறுத்தும்போது இந்தக் குரல் கேட்டதும், ஆண்டவன் கண்களைத் துடைத்துக் கொண்டார். முகத்திலே, உறுதி பிறந்தது. ஊரார் நியாயம் கேட்கத் தொடங்கி விட்டார்கள்! ஏழையின் சார்பிலே

பரிந்து பேசவும் ஆட்கள் உள்ளனர், இனி நமக்குத் தொல்லை இல்லை, என்று எண்ணினார். உறுதி காட்டும் முகத்துடன் நின்றார்.

ஏழையின் சொத்து திரும்பக் கிடைத்த பிறகு, அவன் களிப்புடன் காணப்பட்டான். எல்லாம் அவன் செயல்! என்று கூறி நின்றான். அவனுக்கு உதவியாக வந்தவர்கள், "அதுசரி அப்பா! அந்தக் கொடியவனிடமிருந்து, உன்னை மீட்டோமல்லவா? என்றனர். அப்பப்பா! எவ்வளவு கடினமான காரியம்!" என்றனர். "அநீதி நிலைக்குமா? ஆண்டவன் அக்கிரமக்காரனை விட்டு வைப்பானா?" என்றான் களிப்புடன் அந்த ஏழை. "சரி! நேரமாகிறது எங்கள் சிரமத்திற்குத் தரவேண்டியதைக் கொடுங்கள்" என்றனர் உதவி புரிந்தோர். "நான் தருவதா? ஆண்டவன் உங்கட்கு நீண்ட ஆயுளும், நோயற்ற வாழ்க்கையும் குறைவற்ற செல்வமும் தருவார்" என்று ஏழை கூறினான். உதவி புரிந்தவர்களுக்குப் பொறுமை இல்லை. கொஞ்சம் கோபத்தோடு கேட்டனர், "இருக்கட்டுமப்பா! ஆண்டவன் கொடுக்கட்டும், நீ எடு" என்றனர். "கொடுப்பது பற்றித் தடை இல்லை. ஆனால், ஆண்டவனின் அருஞ்செயலை நான் மறுத்ததாக முடியுமே என்பது பற்றியே கவலைப் படுகிறேன், அவனன்றி ஓர் அணுவும் அசையாதே!" என்றான் அந்த ஏழை. உதவி புரிந்தவர்கள் கோபம் தாங்க முடியாமல் ஒரு பலமான அறை கொடுத்தனர். 'அவனன்றி இந்த அறையும் கிடைக்காது' என்று கொக்கரித்தபடி; ஆண்டவன், தன் முகத்தைச் சுளித்துக் கொண்டார். வேகமாகத் தேவியாரின் அறைக்குச் சென்றுவிட்டார். அன்று மட்டும் ஆண்டவன், ஆறு திருக்கோலம் கொண்ட அருமையை வியந்து என் குறிப்பேட்டில் ஆறுமுகம் என்ற தலைப்பிலே, அன்னைய நிகழ்ச்சியை எழுதி முடித்தேன்.

❋ ❋ ❋

2. கடவுள் விஷயம்

கடவுள் இருக்கிறார்!

கடவுளுக்குத் தெரியும்!

கடவுள்விட்ட வழிப்படி நடக்கட்டும்!

கடவுளுக்குப் பொதுவாக நட!

கடவுள் சாட்சியாகச் சொல்கிறேன்!

கடவுள் கொடுத்தது இவ்வளவுதான்!

கடவுள் கைவிடமாட்டார்!

கடவுளின் மீது பாரத்தைப் போடு!

☆ ☆ ☆

கடவுளை கண்டவர் இவர்- பெரிய ஞானி-மூடுடா வாயை!

கடவுளா பொறுப்பாளி, நீ செய்கிற தவறுக் கெல்லாம்?

கடவுளா கொடுத்தார்-கொள்ளை அடித்துவிட்டு, கடவுளையா சாட்சிக்கு இழுக்கிறே!

கடவுளையே நம்பிக்கொண்டு, கிடடா-காரியம் நடந்துவிடும்-மூடா, உன் கடமையைச் சரியாகச் செய்யாமே, கடவுளைக் கூப்பிடறயா, எதற்கு எடுத்தாலும்!

கடவுள் காப்பாற்றுவார் போடா- ஏன் என் எதிரே பல்லைக் காட்டிக்கிட்டு நிற்கவேணும்-போ, போ- கடவுளைக் கேளு தரச் சொல்லி-தருவார் - போ.

☆ ☆ ☆

கடவுள் எப்படித்தான் இந்த அக்ரமத்தைப் பொறுத்துக் கொண்டாரோ தெரியவில்லை.

கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று துளியாவது பயந்தா நடக்கிறான் அந்தப் பாவி.

கடவுள் கூடத்தான் பயப்படுகிறார் இப்படிப்பட்டவர்களிடம்.

கடவுள் என்ன செய்துவிட்டார் அவனை-கண்ணைக் குருடாக்கிவிட்டாரா-கைகாலை ஒடித்துவிட்டாரா-கொழுத்துத் தான் கிடக்கிறான்.

கடவுள் கொடுத்தார்னுதான் 'ஜம்பம்' பேசுகிறான், அந்தக் கள்ளன்.

கடவுள், அவன் பக்கமா இருப்பது -அடுக்குமா?

கடவுள் கண் பார்த்தா, நமக்கா இந்தக் கஷ்டம் வரும்?

கடவுளே! உனக்குக் கண்ணில்லையா?

கடவுள் இருந்தா இப்படியா செய்வார்?

கடவுள், கடவுள் என்று நாம்தான் கதறுகிறோம்-காரியவாதி கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை மறந்துதான் வேலை செய்கிறான்-கடைசியிலே அவன் பக்கம் தான் கடவுள் இருக்கிறார்.

கடவுளே நான் என்ன பாபம் செய்தேன், இந்தப் பாடு படுத்துகிறாயே!

கடவுளே! ஏனோ இப்படி என்னைச் சோதிக்கிறே?

கடவுளே! இனி என்னாலே சகித்துக்கொள்ள முடியாது!

☆ ☆ ☆

கடவுள் தண்டிக்காமல் விடமாட்டார்-அரசன் அன்று கொன்றால் கடவுள் நின்று கொல்லும்.

கடவுள் 'பேர்' சொல்லி ஊரை ஏய்க்கிறானப்பா, அந்த எத்தன்.

கடவுள் காப்பாத்துவார்னு கிடந்தான் அந்த ஏமாளி, கடைசி வரையிலே.

☆ ☆ ☆

கடவுள், என்ன செய்யச் சொல்வார் என்பது எனக்கும் தெரியும் -நீ ஒரு உபதேசமும் செய்ய வேண்டாம், உன் வேலையைக் கவனி.

கடவுள் கேட்டாரா உன்னை, ஊர்த்தாலியை அறுத்து உற்சவம் செய்யடான்னு?

கடவுள்தான் தின்கிறாரா! பொங்கலையும் புளியோ தரையையும்?

☆ ☆ ☆

கடவுள் எங்கும் நிறைந்தவர்-எல்லாம் அறிந்தவர். கடவுள் கோயிலைக் கேட்கவில்லை, கும்பாபிஷேகம் கேட்கவில்லை, உன் மனசைத் தாண்டா கோயிலாகத் தரவேணும்; அன்புதான் அவருக்குப் பிரியமான அபிஷேகம்.

கடவுள் காரியம் இது, முணு முணுக்காமல், உன் சக்தியானு சாரம் கைங்கரியம் செய்.

கடவுளுக்காக நீ வக்கீல் வேலை செய்யவேண்டாம், எனக்கும் தெரியும், கடவுள்.

கடவுளே! கடவுளே! நல்ல கடவுளடா இது! நயவஞ்சகனை வாழவிட்டு வேடிக்கை பார்க்கிற கடவுள்!

கடவுள் 'மனசி'லே என்ன எண்ணிக் கொண்டிருக் கிறாரோ, யார் கண்டாங்க?

கடவுளைக் காணவா முடியும்! கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்!

☆ ☆ ☆

கடவுள்-என்ற சொல்லைக் கலந்து பேசுவதிலே, இப்படிப் பலவகை உண்டு. பேசுவோரின் சுபாவம், அவர்

பேசும்போது அவருக்கு உள்ள நிலைமை, அவருடன் உரையாடுபவரின் தன்மை, ஆகியவைகளுக்கு ஏற்றபடி, இந்த 'வகை' இருக்கும். எல்லோரும் ஒரே மனப்பான்மை கொண்டவர்களல்ல-எனவேஅனைவரும் பலவகையாகத் தான் இருக்கும். இதிலே ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் ஒரே 'ஆசாமி' கடவுள் சம்பந்தமாகப் பேசும்போது ஒரு வேளை ஒரு வகையாகவும் மற்றோர் வேளை மற்றோர் வகையாகவும் பேசுவார்-ஆச்சரியம் அதிலேதான் அதிகமிருக்கிறது. வேளைக்கோர் வகையாக இந்தப் பேச்சு மாறுவதை, பேசுபவரே கூடச் சரியாக உணருவதில்லை-சுட்டிக் காட்டும்போதுகூட, அவர் சிரிப்பார் அல்லது சீறுவார்-விளக்கம் தரமாட்டார்.

கடவுள் என்ற சொல்லைக் கலந்து பேசாதவர்கள் மிகக் குறைவு; கடவுள் என்ற சொல்லை எப்போதும் ஒரே விதமான மனப்பான்மையுடன் பேசுபவரோ, அதைவிடக் குறைவு! சிலர் சில வேளைகளில் பேசும்போது பார்த்தால், அவர்களை நாயன்மார் வரிசையிலே வைக்கலாம் போல் தோன்றும்; சிலர் பேசும்போதே அவர்கள் நாத்திகர்களோ என்று கேட்பவர்களை ஐயுறச் செய்யும்! விந்தை இதுகூட அல்ல. நாயன்மார் வரிசையிலே வைக்கலாம் என்று தோன்றக்கூடிய விதமாக ஒரு சமயத்தில் பேசியவரின் மற்றோர் வேளைப் பேச்சு, அவரையே, நாத்திகக் கூட்டத்திலே சேர்க்க வேண்டும் போல் காணப்படும்.

கடை முதலாளி கவலையுடன் உட்கார்ந்திருக்கிறார்-அவர் எதிரே, பார்வதிசமேதரின் படம், மலர்மாலையுடன் காட்சியளிக்கிறது-நீறுதான் நெற்றியில் -சந்தனமும் உண்டு. கவலையுடன் இருப்பவரிடம், பக்குவமாக நடந்துகொண்டு பழக்கப்பட்ட 'எடுபிடி', குத்து விளக்கைத் தூண்டிக் கொண்டே பேசுகிறான்.

எ:- சந்திரசேகர செட்டியார் சரக்கு பூராவும் விலையாகி விட்டதாம்...

• மு:- பூராவுமா?

எ:- ஆமாம்-யார் கிடைப்பானுங்களோ, தலையிலே மூட்டை கட்டலாம்னுதான் செட்டியார் காத்துக் கொண்டிருந்தாரே! கிடைச்சான் ஒரு ஏமாளி-பூராசரக்கையும் தள்ளிவிட்டார் அவனிடம்.

மு:- எவ்வளவு கிடைச்சுதாம்?

எ:- ஆறுக்குக் குறையாதாம்.

☆ ☆ ☆

கடை முதலாளி ஒரு நீண்ட பெருமூச்சுடன், "அம்பிகே!..." என்று ஒருமுறை கூறிவிட்டு, "ஆறு இருக்கும்னு சொன்னாங்க?" என்று மீண்டும் கேட்கிறார். எடுபிடி, "ஆமாங்க! ஆறுக்கு மேலேயே இருக்குமாம்" என்று பதிலளிக்கிறார்-மீண்டும் ஒரு பெருமூச்சு, மறுபடியும் "அம்பிகே! என்று அழைக்கிறார், கடை முதலாளி.

இப்படிப்பட்ட நிகழ்ச்சி அன்றாடம் நடைபெறுகிறது - சர்வ சாதாரணமான நிகழ்ச்சி என்று கருதுகிறோம். ஆகையினாலேதான், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றிச் சிந்திக்காமலேயே இருக்கிறோம்."

☆ ☆ ☆

சந்திரசேகருக்கு ஆறாயிரம் ரூபாய் இலாபம் கிடைத்தது-முடங்கிக் கிடந்த சரக்கு விற்பனையாகி விட்டது. இந்தச் 'சேதி'யைக் கேள்விப்படும், கடை முதலாளியின் கிடங்கிலே சரக்கு அடைபட்டுக் கிடக்கிறது-ஏட்டிலே இலாபம் குறிக்கப்படவில்லை-இந்நிலையில், வேறொருவர், வியாபரத்திலே வெற்றி பெற்றார் என்று கேள்விப்பட்டதும், பெருமூச்சுடன், அம்பிகா! அம்பிகே! என்று அழைக்கிறார்! அவ்விதம் அவர் அழைக்கும்போது, அவர் மனப்பான்மை என்ன? பக்திப் பரவசத்திலே, அவ்விதம் கூவி அழைத்தாரா? பாராட்டுதலுக்காக

அழைத்தாரா? துணை செய் என்று கூப்பிட்டாரா? அவன் அடித்து விட்டானே கொள்ளை, எனக்குக் கிடைக்க வில்லையே, நான் உன்னைப் பூஜை செய்தவண்ணம் இருப்பவனாயிற்றே, என்ன செய்தாய் எனக்காக, அதோபார் சந்திரசேகரன் இலாபம் சம்பாதித்து விட்டான்,உன் சக்தியை என் பக்திக்காக மெச்சி என் பக்கம் திருப்புவாய், எனக்கும் இலாபம் கிடைக்கும் என்று தானே நம்பி உனக்கு நெய்விளக்கு ஏற்றினேன், இருந்தும், என்னைக் கவனிக்காம லிருக்கிறாயே,-என்று அம்பிகை யிடம் குறைபடுகிறாரா, மிரட்டுகிறாரா? அம்பிகையை அவர் அந்தச் சமயம் அழைத்த போது, எந்த விதமான மனப்பான்மையுடன் இருப்பதாக எண்ணுகிறீர்கள்? எண்ணிப் பாருங்கள்-எண்ண, எண்ணவேடிக்கை வளரும். அவரையே கேட்டுப் பாருங்கள்-அவர் சாதுவாக இருந்தால்-அதைவிட வேடிக்கையாக இருக்கும்.

☆ ☆ ☆

கடை முதலாளியின் பெயரைக் கந்தப்பன் என்று கொள்வோம்-அவர் துணைவியாருக்கு, சின்னம்மா என்று பெயரிடுவோம். இருவரும் சந்திக்கின்றனர். அவரைச் சந்திப்புக்கு முன்பே, சந்திரசேகரர் 'சேதி' அம்மைக்குத் தெரிந்துவிட்டிருக்கிறது. சமயமறிந்து கேட்கிறார்கள், "அவர் கடையிலே சரக்கு பூராவும் விற்று விட்டாராமே" என்று. "ஆமாம்" என்று சுருக்கமாக, சோகத்துடன் கூறுகிறார் கந்தப்பர். "கடவுள் அவருக்கு நல்ல வழி காட்டினார்"-என்று சின்னம்மா கூறுகிறார்கள், எப்போதும் போல். கந்தப்பரை நாம் பார்த்திருக்கிறோம் முதலிலேயே, கவனமிருக்கிறதல்லவா? நீறு பூசியவர்!! எனவே, சைவர், பக்தர்! எனினும் சீறுகிறார், சின்னம்மா வின் பேச்சைக் கேட்டதும்; "கடவுளு காட்டினாரா, கடவுளு! பய, ஆள் விழுங்கி..... வாடிக்கைக்காரன்களை வலை போட்டு பிடித்து, அண்டப்புளுகு, ஆகாசப்புளுகு

பேசி, கொள்ளை அடித்துக்கிட்டான். கடவுளு கொடுக்கிறரா, கடவுளு! இவனுக்கா! மாதத்திலே மூன்று தடவை கூட நிஜம் பேசமாட்டானே, அவனுக்குப் போய், கடவுள் உதவி செய்யறாரா? தரகு தர்மலிங்கம் இல்லே, நம்ம கடைக்கு வருவானே முன்னே எல்லாம், அவனுக்கும் நமக்கும் கொஞ்சம் தகறாரு. அதனாலே அந்தப்பய, நம்ம கடை வாடிக்கையைச் சந்திரசேகரன் கடைக்குத் திருப்பிவிடுகிறான்-அதனாலே ஒரு 'சான்சு' அடிச்சுது... கடவுளு, போய்க் கூட்டிக்கிட்டு வந்து சொன்னாரா," "போடா, போய் சந்திசேகரன் கடை சரக்கை வாங்கு-அவன் அநியாய விலை வைத்துத்தான் விற்பான், இருந்தாலும் அவனிடமே வாஞ்குன்னு சொல்வாரா-அதுதானா கடவுளுக்கு வேலை....."- என்று மடமடவெனப் பேசுகிறார். அந்தச் சமயத்திலே, அவர் யாராக இருக்கிறார்? பக்தராகவா? நாத்திகராகவா? - சிந்தித்துப் பாருங்கள்- வேடிக்கை வளரும். சின்னம்மாள், கணவரின் சீற்றம் அடங்கிய பிறகு, பேச்சைத் துவக்கி, "தரகு தருமலிங்கத்தோடு ஏன் தகராறு செய்துகிட்டீங்க? அவன் விஷமக் காரனாச்சே! நமக்கு ஏன் அவனோட விரோதம்? நஷ்டமும் கஷ்டமும் நமக்குத்தானே?" என்று கூறுகிறார்! கந்தப்பர் இதற்கிடையிலே ஏழெட்டு முறை, முருகா! முருகா! என்று அழைத்து விட்டார். ஆறேழு முறை அம்பிகையை அழைத்து விட்டார். கூடத்து மாடத்தில் உள்ள பிள்ளையாரைக் கும்பிட்டுக் கொண்டார். கந்தப்பரின் 'ஆத்திகம்' அப்பு அழுக்கின்றி நடந்து கொண்டே இருக்கிறது. எனினும் தரகு தர்மலிங்கத்தைக் குறித்துப் பேச நேரிட்ட உடனே அவர்மனம் புதுவிதமாகிவிடுகிறது. "தகராறு ஏன் வந்ததுன்னா கேட்கறே? தரகு, மற்ற கடைக்காரர் கொடுக்கிறதைவிட நான், அவனுக்குத் தாராளமாகத் தான் தருவது வழக்கம் - பிள்ளைகுட்டிக்காரன் பிழைச்சிப் போகட்டும்னு. அப்படி

இருந்தும், அவன் தைரியம், பேராசை, போன வெள்ளிக்கிழமை, 'நூறு ரூபாய்' கொடுன்னுகேட்டான். ஏம்பா என்று கேட்டேன். அவரு, கோயில் கட்டறராம் அவர் தெருக்கோடியிலே-அதுக்கு, 'தர்மம்' கொடுக்க வேணுமாம் நானு. தர்மலிங்கம்! காலம் இருக்கிறதைக் கவனிக்காமே இப்படி நூறுகொடு, ஐம்பது கொடுன்னு கேட்டா என்னப்பா செய்யறது. கோயிலுக்கும் குளத்துக்கும் கொட்டிக் கொடுக்கிறபடி யாகவா இங்கே இலாபம் குவியுது-அப்படின்னு. சமாதானமாகத்தான் சொன்னேன். உடனே, "கடவுள் காரியமாக நான் கேட்கிறேன், என் வீட்டுக்கலியாணம், சீமந்தத்துக்கு அல்ல-கொடுத்தா, அதுக்கான பலன், உங்களுக்குத் தான், கொடுக்காவிட்டாலும் சரி, உங்க இஷ்டம்-கடவுள் காரியத்துக்கு, பத்துப்பேரும் உபகாரம் செய்வாங்க-நீங்க, முடியாதுன்னு சொல்கிறீங்க-சரி-நான் என்ன சொல்ல இருக்குது-ஏதோ என்னாலே, உங்களுக்கு எவ்வளவோ கிடைச்சிருக்கும்; கடவுள் காரியத்துக்கு அந்தக் காசு உபயோகப்படக்கூடாது போலிருக்கு-உங்க இஷ்டம் அப்படி இப்படின்னு, என்னமோ இவன்தான் கடவுளைக் கண்டுவிட்டான் போலவும், நாமெல்லாம் கடவுள் பக்தியே இல்லாதவங்க போலவும், என்னமோ கடவுள் இவனைக் கூப்பிட்டுக் கோயிலைக் கட்டச் சொன்னது போலவும், அளந்தான் அரைமணி நேரம்- அதுதான் தகராறுக்குக் காரணம்"-என்று விளக்குகிறார். சின்னம்மா, "என்னங்க, போனா போகுதுன்னு ஒரு பத்தோ இருபதோ தொலைத்து விடுவதுதானே. அவனும் கடவுள் காரியமாகத்தானே கேட்டான்" என்று கூற, சீறிய கந்தப்பர், "கடவுள் காரியமா! கடவுள் நேரிலேயே வந்தார், அவன் கிட்டே? ரூபாய்க்குக் கால்தரகு கேட்பாண்டி அவன். கடவுள் பேரைச் சொல்லிக்கிட்டு 'காசு' திரட்டக் கிளம்பி விட்டான் அவன். எனக்கா தெரியாது இவன் நடத்தை. கோயில் இருக்கிற

திக்குக்கூட இவனுக்குப் பிடிக்காது. காலையிலே தூங்கி எழுந்திருந்ததிலே இருந்து ராத்திரி படுக்கிறவரையிலே, பொய் பேசிப்பேசி பொழுதை ஓட்டுகிறான்-இவனுக்குக் கடவுள் பக்தி வந்துவிட்டதோ! கடவுள் காரியம்னு சொன்னா, கண்ணை மூடிக்கொண்டு அள்ளிக் கொடுப்பாங்க என்கிற தைரியம்" என்று பேசுகிறார். சின்னம்மாவுக்கு, என்ன சொல்வதென்றே தெரியவில்லை. கடவுள் காரியத்துக்காக என்று ஒருமுறை காட்டுப்பட்டி மிட்டாதாரர் வந்தபோது, கந்தப்பர், ஆயிரத்தொரு ரூபாய் கொடுத்திருக்கிறார். 'நம்பசக்திக்கு மீறின தொகை' என்று சின்னம்மா தடுத்துக்கூடக் கேட்கவில்லை காட்டுப் பட்டியார் நேரே நம்ம வீடுதேடி வந்துவிட்டபிறகு, ஆயிரம் கொடுக்காவிட்டா நல்லதா என்று வாதாடினார். கட்டுப்பட்டியாரிடம் காணிக்கைக் கொடுப்பது போலப் பணத்தைக் கொடுத்துவிட்டு, "கடவுள் காரியத்துக்கு உபயோகப்படாத படிக்கு வேறே எதுக்குத்தானுங்க பணம் இருக்குது" என்று பேசினார். இந்தக் காட்சிகள் சின்னம்மாவின் மனக்கண்முன் தோன்றின. தரகு தர்மலிங்கத்தின் 'கடவுள் காரியம்' கந்தப்பருக்குக் கடும் கோபம் கிளம்பிவிட்டது கேட்டு, சின்னம்மாளுக்குச் சிந்தனை குழம்பலாயிற்று. நமக்கு மட்டும் என்ன! சிந்தித்துப் பாருங்கள்-கந்தப்பர். யார்? அவருடைய மனப்போக்கு எத்தகையது? அவரை எந்த 'வகையிலே' சேர்க்கலாம். சின்னம்மா, சயனித்துக் கொண்டார்-சிவன் கோயில் தர்மகர்த்தா சீருடையப் பிள்ளை, எதிர் வீட்டுக்காரர் - அவரிடம் பேசிக் கொண்டிருக்கச் சென்றார் கந்தப்பர். அரைமணி நேரம், 'சத்விஷயம்' பேசிக் கொண்டிருந்தனர். வீட்டுக்குப் பிறகு திரும்பினார் பாலைப் பருகினார்-சின்னம்மாளைப் பார்த்தார். "பால்காரன், ஏன் இப்படி அக்ரமக்காரனாகி விட்டான்-கடவுளுக்குப் பொதுவாக நடக்கச் சொல்லு" என்று கூறிவிட்டு,

முருகனை மூன்று முறை அழைத்தார், அம்பிகையையும் அழைத்தார், படுத்தார், உறங்க. அந்த 'அழைப்பு' விடுத்த சமயம் அவருடைய மனநிலை என்ன? எதற்கு அழைத்தார் என்பனபற்றி எண்ணிப்பாருங்கள்- விந்தையாக இருக்கும்.

☆ ☆ ☆

கடவுள்விட்ட வழிப்படி நடக்கட்டும்-என்று சர்வசாதாரணமாகப் பேசுவர், பெரும்பாலோர், அவர்களுக்குள்ள ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையை இந்த வாசகம் காட்டுவதாகக் கருதப்படுகிறது.

இட்டமுடன் என் தலையில்...
இன்னபடி என்றெழுதி விட்ட
சிவனும் செத்துவிட்டானோ?
முட்ட முட்டப் பஞ்சமே
யானாலும் பாரம் அவனுக்கு.

என்று கூறிடும் கவிதை வடிவிலே உள்ள கருத்தும் இது போன்றதே. ஆழ்ந்த ஆத்திகத்தின், அசைக்க முடியாத கடவுள் நம்பிக்கையின் அடையாளமாக இக் கருத்துக்களைக் கூறுகிறார்கள். இத்தகைய கருத்துள்ள 'பேச்சு' யாரால் எந்தவிதமான நிலைமைகளின்போது கூறப்படுகிறது என்பதை ஆராய்ந்து பார்த்தால் தான், இந்த வாசகங்களின் முழு உண்மை துலங்கும். ஆராயு முன்பு, கடவுள் விட்ட வழிப்படி நடக்கட்டும் என்ற பேச்சு எப்படி, சர்வ சாதாரணமாக நாட்டிலே கேட்கப்படுகிறதோ, அதுபோலவே, கடவுள் காப்பாற்றுவாருன்னு, நம்பிக் கொண்டே இருந்தானப்பா அந்த ஏமாளி-கடைசி வரையிலே!

என்ற பேச்சும் நாட்டிலே கேட்கப்படுகிறது. ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையை முதல்வாசகம் காட்டுகிறது என்றால், அந்த நம்பிக்கையைக் கேலி செய்து கண்டிப்பதாக

இருக்கிறது இரண்டாவது வாசகம்-இந்த இருவகைக் கருத்துக்களை வெளியிட்ட இருவரில், ஒருவர் ஆத்திகர். மற்றவர் நாத்திகர் என்றும் அறுதியிட்டுக் கூறிவிட முடியாது - அவர்களின் நினைப்பு நடவடிக்கை ஆகியவற்றைக் கவனித்தால்.

☆ ☆ ☆

நெருப்புப்போலக் காய்கிறது-மூடிய கண்களைத் திறக்கவில்லை - சொட்டுப்பால்கூட உள்ளே இறங்கவில்லை-பார்க்கிறவர்களெல்லாம், ஐயோ பாவம்! என்று கூறிப் பரிதாபப்படுகிறார்கள், கண்ணீரைத் துடைத்தபடி தாயார் குழந்தையின் பக்கம் உட்கார்ந்திருக்கிறார்கள், பாண்டுரங்கனிடம், நண்பர்கள் வருகிறார்கள், குழந்தையின் நிலைமையைப்பற்றி விசாரிக்க.

☆ ☆ ☆

"டாக்டர் தாமோதரத்திடம் காட்டினாயோ?"

"ஆறுநாள் அவர்தான் மருந்து கொடுத்தார்....."

"ஊசி போட்டாரோ"

☆ ☆ ☆

"மூணு போட்டாரே!"

"கட்டுமாத்திரை கந்தப்பண்டிதரிடம் காட்டினா, ஒரே வேளையிலே காய்ச்சல் போயிடுமேப்பா! பாண்டு! அவரைக் கூப்பிட்டுக் காட்டிப்பாரேன்"

"அவர் நாலுவேளை மருந்து கொடுத்தாருங்களே-பிறகு அவரேதான் சொன்னார், இங்கிலீஷ் மருந்து கொடுத்துப்பாரு பாண்டுன்னு."

☆ ☆ ☆

இப்படி நண்பர்கள் கேட்கிறார்கள். பாண்டுரங்கன் தான் எடுத்துக்கொண்ட முயற்சியை எல்லாம் கூறுகிறான்; கடைசியாகத்தான் அவன் சொல்கிறான், மனக்

கஷ்டத்துடன், கடவுள் விட்ட வழிப்படி நடக்கட்டும்-என்று. பெரிய டாக்டர் ஒருவர் பெங்களூருக்கு வந்திருக்கிறாராம் சீமையிலிருந்து - அவர், 'பிராண வாயு'வையே நோயாளிக்குத் தருவாராம், எப்படிப்பட்ட வியாதியானாலும் குணமாகிவிடுமாம், ஆனால், பணம் அதிகம் கேட்கிறாராம், 500க்குக் குறைவாக வாங்குகிற வழக்கமே கிடையதாம்-என்ற ஒரு தகவலைத் தருகிறார் ஒரு நண்பர். பாண்டுரங்கனுடைய சக்திக்கு மீறிய காரியம் அந்த வைத்தியம்-அவனே கடனாளி-500 ரூபாய் கேட்கும் சீமை டாக்டரை நாடமுடியாத நிலை-எனவே ஒரு நீண்ட பெருமூச்சுடன் அந்தத் தகவலைக் கேட்டுக் கொண்டான்-பிறகுதான், கடவுள்விட்ட வழிப்படி நடக்கட்டும் என்றான். குழந்தை இறந்துவிட்டது-பெங்களூர் பெரிய டாக்டரைப் பற்றிய தகவலைத் தந்த நண்பர், வேறோர் நண்பரிடம் கூறுகிறார், "கடவுள் காப்பாற்றுவார் என்றே நம்பிக் கொண்டிருந்தான் அந்த ஏமாளி, கடைசி வரையிலே!" என்று - கேலியும் கண்டனமும் கலந்த குரலில். பாண்டுரங்கன் கடவுளின் மீது பாரத்தைப் போட்டது, அந்த நண்பருக்கு, ஆத்திரமாக, ஆழ்ந்த நம்பிக்கையின் விளைவாக, பாராட்டுதலுக் குரியதாகத் தோன்றவில்லை-ஏமாளித்தனத்தின் விளைவு என்றே அவர், அவன் பேச்சைக் கருதுகிறார்; கடவுளின் மீது பாரத்தைப்போடுவது என்பது ஆத்திகமானால், அதைக் கேலியாகப் பேசுவது நாத்திகம் தானே! ஆனால் அந்தக் கேலி பேசியவர், சோமவார விரதக்காரர், சொக்கநாதரிடம் பக்தி கொண்டவர், பழுத்த சைவர்!!

☆ ☆ ☆

கடவுள் விட்ட வழிப்படி நடக்கட்டும் என்ற ஆத்திக உரையாற்றிய பாண்டுரங்கன், அந்தப் பேச்சை முதலிலே கூறிக்கொண்டிருந்தவனல்ல. குழந்தைக்கு ஜுரம், என்ற உடனே மருந்து தரச்சொன்னான் மனைவியிடம்-பிறகு

குழந்தை வைத்தியம் குப்பிப்பாட்டியை அழைத்து வந்து காட்டினான்-பிறகு கட்டுமாத்திரை கந்தப்பண்டிதரை அழைத்து வந்தான்-பிறகு மிஷன் ஆஸ்பத்திரிக்குக் குழந்தையை எடுத்துச் சென்றான்- பிறகு டாக்டர் சோமு L.M.P. யை அழைத்தான், அடுத்தபடி டாக்டர் சுந்தரம் M.B.B.S. வந்தார், பிறகு டாக்டர் தாமோதரம் வந்து பார்த்தார்-இதற்கிடையே, மிளகு மந்திரிக்கும் மாரிசாமி, கோழி சுற்றிவிடும் கோலப் பிள்ளை, விபூதி தூவும் மாயாண்டி, இப்படிப் பல மந்திரவாதிகளின் துணையையும் நாடினான் - விளக்கு வைத்தான் கோயிலுக்கு - குலதேவதையை வேண்டிக்கொண்டான்- மஞ்சள் துணியால், குழந்தையின் கையிலே காப்புக் கட்டினான் - இவ்வளவெல்லாம் செய்தான். பிறகு, அலுத்துப் போய், பலன் காணாமல் பதைத்துப்போய், இனி என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப் போயிருக்கும் போதுதான், பாண்டுரங்கன், கடவுள் விட்ட வழிப்படி நடக்கட்டும், என்றான்! துவக்கத்திலே அல்ல- முயற்சிசெய்து பார்க்காத முன்பு அல்ல- வீட்டு வைத்தியம், டாக்டர், மந்திரம், பூஜை இவ்வளவுக்கும் பிறகு, வழக்கமான பல வழிகளையும் பார்த்தான பிறகு, சொன்னான், கடவுள்விட்ட வழிப்படி நடக்கட்டும் என்று! அப்படி அவன் சொன்னது ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையின் விளைவு என்று கூறப்படுமானால், குழந்தைக்குக் காய்ச்சல் ஏற்பட்டதும், அவன், பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டானே, அப்போது அவன், யாராக இருந்தான்- ஆத்திகனாகவா? நாத்திகனாகவா? சிந்தித்துப் பாருங்கள் - சிக்கலாக மட்டுமல்ல, சுவை தருவதாகவும் இருக்கும்.

❋❋❋

3. குமாரி சூர்யா

குமாரி சூர்யா! எந்தப் படத்து விந்தைக் கதாநாயகி, களிப்பிலாடும் மயிலோ, கானம்பாடும் குயிலோ, கண்டாரைக் கொல்லும் கட்டழகியோ, என்றெல்லாம் கேட்டுவிடாதீர்கள். நமக்கு தினத்தந்தி செய்யத் தெரியாது. படஉலகப் பாவையல்ல. நான் குறிப்பிடும் குமாரி, பாவிகளை வதைத்தொழித்து, புண்ணியவான்களை ரட்சிக்கும் கடவுளர் வரிசையில் ஒருவர்-மாஜி கடவுள்!

'மாஜி கடவுள்கள்' என்ற ஏடு கண்ட நண்பர் பலர் மேலும் சில தகவல்கள் கேட்டனர்.

நானும் வேறு சில ஏடுகளைப் படித்தேன்.

குமாரி சூர்யாவைச் சந்தித்தேன்.

குமாரி சூர்யா, ஜப்பானியக் கடவுள்-இன்றல்ல-தெளிவு பிறந்துவிட்டதே ஜப்பானில்! அங்கு என்ன, ஆச்சாரியாரா இருக்கிறார், அழுகலை அங்காடியில் வைத்து விற்பனை செய்ய! ஜப்பான்நாடு, வேறுபல நாடுகள் போல, எண்ணற்ற கற்பனைக் கடவுளரைத் தொழுதுவந்த நாட்களில், கோலாகலமாகக் கொலுவீற்றிருந்த 'தெய்வம்' குமாரி சூர்யா.

பொங்கற் புது நாளைக்கூட, வைதீகம் பேசி வஞ்சக வாழ்வு நடாத்தும் வன்கணாளர்கள், சந்திராந்திப் பண்டிகையாக்கி, சூரிய பகவானுக்குப் பூஜை செய்து வைக்கிறோம். அவர், ஏழு குதிரை பூட்டிய இரதத்தில் செல்பவர், இந்நிறத்தான் இவ்வண்ணத்தான் என்று கூறுகிறார்களல்லவா-அதே 'சூரிய பகவான்' ஜப்பானில் சூரிய குமாரி! இங்கு தேவன்! அங்கு தேவி! இப்போதல்ல! எத்தர் தீட்டியதை ஏற்றுக்கொள்ள ஏமாளிகள் ஏராளமாக

இருந்த நாட்களில்! சூரியன்-பல்வேறு நாடுகளிலும், 'தெய்வம்' என்று கொண்டாடப்பட்ட போதிலும், அனேகமாக எங்கும் ஆண் வடிவமே தந்தனர்-ஆனால் ஜப்பானியப் புராணீகன், பெண் வடிவு தந்தான். பெண் என்று கூறியிருப்பானே தவிர, அந்த நாட்டுப் புராணீகன், கற்பனைத்திறமும் கவர்ச்சியும் மிகுந்த கதை புனைந்திருக்க மாட்டான். அதற்கு அலாதியான அறிவும் கலைத்திறனும் இருக்கவேண்டுமே. அந்தத்திறன் 'பாரத் வர்ஷ'த்துக்கு மட்டும்தானே உண்டு, என்று பேசிடும் பழைமை விரும்பி, தெரிகிறார்!

ஜப்பான் புராணீகன், எந்த வகையிலும், நமது பூராணீகர்களுக்குச் சளைத்தவனல்ல. அவனும் அள்ளி விட்டிருக்கிறான், அண்டப் புளுகுகளை, கொண்டமட்டும். உலகை உணரவும், உள்ளத் தெளிவு பெறவும் பக்குவம் பெற்ற பிறகுதான், ஜப்பானியர், அவைகளைக் 'கட்டுக் கதைகள்' என்று ஒதுக்கித் தள்ளினர்; அதற்கு முன்பு அவர்களும் அக்கதைகளை 'இராமாயண மகாபாரத மாக'க் கொண்டு, பாராயணம் செய்து வந்தனர். பூஜா முறைகள் வகுத்துக் கொண்டனர். புனித விழாக்கள் நடாத்தி வந்தனர். படித்தாலும் படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும், பாபம் போகும் புண்ணியம் வந்து சேரும் என்று கூறிக் கொண்டாடினர். தெளிவு பிறக்கும் வரையிலே அவை 'தேவமாக் காதைகள்'-பகுத்தறிவு வென்றது. குமாரி சூர்யாவுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டார்கள். இங்குபோல் அல்ல. அங்கு குமாரி சூர்யா மாஜி கடவுள்.

இங்கு? எதை விட்டனர். - எதை மறந்தனர்! புதுப் புது 'வரவுகளுக்கு' அல்லவா தவம் கிடக்கிறார்கள்.

கற்பனைத் திறத்துடன்தான் ஜப்பானியப் புராணீகன் கடவுட் காதை தீட்டினான்!

☆ ☆ ☆

"அன்பா! என் இதயத் துடிப்பை
அறியாயா? ஆவி சோருது, கண்ணாளா!
ஆரத்தழுவி எனக்கு ஆனந்தம் ஊட்டமாட்டாயா!
இதோ பார்,
என் கண்கள் வெளியிடும்
தாபத்தை
விரகதாபத்தால் என்
உடல், எப்படி நெருப்பாகக்
கொதிக்கிறது பார்! என்னை
வாழ்விக்க வல்லவனே! வசீகரம்
மிக்கவனே! ஆடிப்பாடி
மகிழலாம்! ஜோடிப் புறாவாகலாம்!"

அணங்கு அழைக்கிறாள் ஆணழகனை! அவள் துயரம் அவளன்றி யாரறிவார்!

ஆணழகன், இணங்கவில்லை.

முறையல்ல என்றான்!!

என் செய்வாள், காதலால் தாக்குண்ட காரிகை. "என் செய்வேன், எவ்வாறு உய்வேன்! உன்னைக் கூடினாலன்றி உயிர் நில்லாது-என் உள்ளத்தில் மூண்டுள்ள காதல் தணியாது-நான் என்ன அழகாகயில்லையா-பருவ கருவத்தைக் காட்டிடும் என் அங்கங்களைப் பார்த்துமா, இந்தத் தயக்கம்! பாகு, என் மொழி! பங்கஜம், என் விழி!பழகினால் தெரியும், நான் தரும் தேனின் சுவை!" என்றெல்லாம், மீண்டும் பேசிட வேண்டிய 'தொல்லை' அந்த முல்லைக்கு ஏற்படவில்லை. அவன் அவளை மறுக்கவில்லை! இன்பம், பெறக்கூடாது, என்பதல்ல, அவன் எண்ணம்! அவனுக்கு ஏதும் 'தவம்' இல்லை-அவளைக் கண்டால், ஐயனைக் காண முடியாதே, அவர் அருள் பெற இயலாதே என்ற சிக்கல் ஏதும் இல்லை.

அவன், முடியாது என்று கூறவில்லை-முறையல்ல என்று மட்டுமே கூறினான்-அதாவது ஆணழகனிடம் பெண்ணரசி, வலியச்சென்று காதல்மொழிபேசி, அழைப்பது முறையல்ல, அந்த 'உரிமை' ஆடவனுக்குத் தான், எனவே காதலை வெளியிடும் வேலை தன்னைச் சார்ந்தது என்றான்.

ஒருபுறம் சென்றிரு!-என்றான்.

அவள் ஒதுங்கி நின்றாள்-விருந்து கிடைத்திடும் என்ற உறுதியை அவன் கண்கள் வெளியிட்டதால் பெற்ற மகிழ்ச்சியுடன்.

ஆணழகன் துவக்கினான்!

"பாகுகனி மொழிமாதே! என்னைப் பார்த்துப்
பேசிடின், என்னதீதே! சோலைப்
பசுங்கிளியாளே! என்னைச் சேர்ந்து
சுகம் தாராய், மானே! புத்தம் புதிய
நறுமலரே! சித்தமிரங்கி எனை
ஏற்பாய்! சத்தியம், நான் உன்னைப்
பிரியேன், சந்ததம் இன்பம் தருவேன்,
மெத்தவும் வாடினேன், காதல், என்
மேனி அழிக்குது, மானே!"

இருவரும் இன்பபுரிக்குப் பயணமாயினர்,

புண்ய கதை-மலைக்காதீர்கள்-புதிய சினிமாப் படமல்ல!

சினிமாப் படத்திலேகூட, இப்படிக் காட்சியும் உரையாடலும் சுலபத்திலே புகுத்திவிட முடியாது-பண்பு காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக உள்ள கத்தரிச் கோலினர், கடுங்கோபம் கொள்வர்!

வலியச்சென்று, அழைத்த ஆரணங்கும், அது முறையாகாது, நான் அழைக்கவேண்டும் என்று முறை அறிவித்த ஆணழகனும், மானிடரல்ல, கடவுளர்!!

இசனாகி-ஆண் கடவுள்.

இசனாமி-பெண் கடவுள்.

கடவுளர் உலகத்துக் காதற் காட்சி-சாமான்யர்களுடையதல்ல.

தேவலோகத் திருவிழா! பூலோக விஷயமல்ல! பூலோகமே, அப்போது இல்லை!

கடவுளர் உலகில், இசனாகி, இசனாமி எனும் இருவர். ஆதிப் பரம்பொருள்கள்!

அவர்கள் துவக்கிய 'ஆனந்தம்' தான் உலக அமைப்புக்கே காரணமாக அமைந்தது.

இந்தக் கடவுளர், நமது நாட்டுக் கடவுளரைவிட மெத்தச் சமர்த்தர்கள்!

இவர்கள் பெற்றெடுத்தவை, குழவிகள் அல்ல, நாடுகள், தீவுகள்!!

ஆமாய்யா, ஆமாம்! இசனாகி, இசனாமி கலவியின் விளைவாகத்தான், ஜப்பான் பிறந்தது!! வேறு பல தீவுகளையும் இக்கடவுளர் பெற்றெடுத்தனர்.

ஒரு நாடு-பிறக்கிறதா! செச்சே! இப்படி ஒரு பைத்தியக் காரத்தனமான 'கதை'யா-இதுவா புண்ய கதை!! தூ! தூ!!

நாடு என்றால், சாமான்யமா!

எவ்வளவு நிலப்பரப்பு-ஆறுகளென்ன, ஏரிகளென்ன மலைகளென்ன மடுவுகளென்ன, ஊர்களென்ன வெட்ட

வெளிகளென்ன, சாலைகள், சோலைகள், வயல்கள் வாய்க்கால்கள்-இவ்வளவும், பெற்றெடுத்தது ஒரு பெண் தெய்வம் என்றால், பொருத்தமிருக்கிறதா! புராணமாக இருந்தாலும், துளியாவது, அதிலே 'இப்படியும் நடந்திருக்கக் கூடும்' என்று கூறத்தக்க தன்மை இருக்க வேண்டுமே- என்று கேலி பேசுவோரைக் காணமுடியும், இங்கு-இன்று!

ஜப்பானியர், இவ்வளவு மந்தமதி படைத்தவர்களா - நாடு பிறந்ததா, கடவுளின் கருவில்!! என்று ஏளனம் செய்வர்.

அவர்கள் இன்றும் வணங்கும், கண்ணன், பாலகனாக இருந்தபோது, தாய் அடித்திட வாய்திறந்து அழுதபோது, ஜப்பான் மட்டுமல்ல, பிரபஞ்சமே வாயில் தெரிந்தது-புண்ய கதை! வியாசர் விருந்து!!

நாடு, கடவுள் மூலம் பிறந்தது என்று வேறு நாட்டான் கதை கூறும்போது, கேலி செய்ய முடிகிறது.

இங்கே, கடவுள், குழந்தை வடிவுடன் இருந்தபோது, அவர் வாயிலே, பிரபஞ்சமே தெரிந்ததாகப் 'புண்ய கதை' இருக்கிறது. அதை நம்பமுடியவில்லையே என்று விநயமாகக் கூறினாலும், ஆச்சாரியாருக்குக் கோபம் கொப்பளிக்கிறது, கோல் எடுக்கிறார்-எழுதுகோல்!!

ஜப்பானியர், இசனாகி ஜப்பானைப் பெற்றெடுத்த கதையைக் கடவுட் காதையாகக் கொண்டிருந்த காலத்தில், இன்று இல்லை. இங்கு,

"பாலன் வாயைத் திறந்தான்

கோபாலன் வாயைத் திறந்தான்"

என்று நவீன விஞ்ஞானக் கருவியான ரேடியோவில் இசை அரசிகள் பாடுகின்றனர் - பக்தர்கள் சொக்கி நிற்கின்றனர்!!

ஜப்பானியர்களிடம் புத்தறிவு பிறந்துவிட்டது-குமாரி சூர்யாவைக் கடவுளாகக் கொண்டில்லை.

தேவ கதை என்று கூறிவிட்டால், அதுபற்றித் துளியும் சந்தேகம் கொள்ளலாகாது, காரணம் விளக்கம் கேட்பது கூடாது, கேட்பது பாபம், நாத்திகம் என்று ஜப்பானிய மக்கள் நம்பிக்கிடந்த வரையில், இதுபோன்ற புராணங்கள், பூஜாமாடத்தில் இருந்துவந்தன-மக்கள் உள்ளத்தில் அரசோச்சின. மூடநம்பிக்கை கப்பிக்கொண்டிருந்த காலத்தில், புராணீகன், ஜப்பான் நாட்டின் உற்பத்திக்கு இப்படி ஒரு கதை கட்டினான். இத்துடன் விட்டானா!

விடுவானா? புராணீகனாயிற்றே!!

ஜப்பான் முதலிய தீவுகளை ஈன்றெடுத்தான பிறகு, இசனாமி, அக்கினிதேவனைப் பெற்றெடுத்தாள், அக்னிதேவன், சாமான்யமானவனா! பிறக்கும்போதே தாயைக் கருக்கிவிட்டான்.

இசனாமி இறந்துபட்டாள்!

கடவு[illegible]தான்!! ஆனால் கடவுளருக்கும் பிறப்பும் இறப்பும் உ[illegible]டன்றான் புராணீகன்-ஆமாம், சாமி! என்றனர் ம[illegible]-பக்தர்களாக இருந்ததால்! இப்போதும் இங்கு, எதைத்தான் புராணீகன் சொல்லாமலிருக்கிறான்-நம்பத் தகாதது என்று எதைத்தான் 'பக்தர்கள்' ஒதுக்கித் தள்ளிவிடுகிறார்கள்! மகேசன் செயலால், மலம், மலர் மணம் வீசும் என்று புராணீகன் சொன்னால், ஆமாம்! ஆமாம்! நமது 'பாபம்' காரணமாகத்தான் நமக்கு மலத்திலிருந்து மலர்மணம் வீசவில்லை, இதை வெளியே கூறுவதும் அவமானம், எனவே நாமும் 'நாலுபேருடன்' ஒத்துப் பேசுவோம் என்று எண்ணிக்கொண்டு, "ஆஹா! என்ன மணம்! என்ன மணம்! என் அப்பன் அருள்அல்லவா இது!" என்று கூறிட இன்னும் இங்கு பக்தர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்!

பக்தகோடிகள் மிகுந்திருந்த காலம்-பகுத்தறிவு கிளம்பாத காலம், பச்சைப் புளுகுகளைப் பாராயணத்துக்கு ஏற்ற புராணம் என்றான்-நெஞ்சு நெக்குருகக் கேட்டு ரசித்தனர்!

இறந்துபட்டாள் இசனாமி என்றதும், இசனாகி பதறினான், கதறினான். "அவளன்றி நான் உயிர்தரியேன்! எங்கு சென்றாலும், உடன் செல்வேன்! உயிர் பிரிந்த பின் உடல் எதற்கு, என் உள்ளத்தின் ஒளி விளக்கு அணைந்தபின் எனக்கு வாழ்வு எதற்கு!" என்றெல்லாம் உருகிக் கூறினான், ஓடினான், ஓடினான், காதற் கிழத்தியைக் கண்டு பிடித்திட.

பாதாள லோகம் சென்றான்!!

ஜப்பானியப் புராணீகனும், விண்ணிலே கடவுளரையும், மண்ணிலே மானிடரையும், மண்ணுக்கு அடியிலே, இறந்தோரையும் இருக்கச் செய்தான்-புராண மூலம்!

இசனாகி, பாதாளலோகத்தில் கண்டான் இசனாமியை.

இசனாமி இறந்துபட்டாள்-எத்தனை கனிவுடன் கணவன் அழைத்தாலும் உயிர் பெற்றிட முடியாதபடி, உடலும் உருக் குலைந்து போய்விட்டிருந்தது.

கண்டான், கண்ணீர் உகுத்தான்!

அழிந்தோரின் அவனியிலே, அழகரசி கூழாகிக் கிடக்கிறாள்.

இன்பம் தந்தாள்! எனக்கு வாழ்வின் இரகசியம் இதுவென்று அறியும் வாய்ப்பு அளித்தாள்!

நாடு, பல பெற்றாள், நாரிமணி.

நாசகாலன் பிறந்தான், என் நளினி மாண்டாள் நான் நடைப் பிணமானேன்.

எங்கே அக்கொடியவன்?

என் கோமளவல்லியின் சாவுக்குக் காரணமாக இருந்தவன் எங்கே!

அவனை அழித்தொழித்தாலொழிய, என் கொதிப்பு அடங்காது.

இசனாகி இவ்வாறு புலம்பினான். கோபப்பொறி பறக்கும் கண்ணினனானான்-அக்னிதேவனைக் கொன்றே போட்டான்!

அக்னி தேவன் இறந்துபட்டான் - அவனுடைய இறப்பின் மூலம், எண்ணற்ற புதுக் கடவுளர் பலர் பிறந்தனர்.

கோபம் ஓரளவு தணிந்த நிலையில், இசனாகி, தன்னைச் சுற்றிலும் கிடந்த பிணக்குவியலைக் கண்டான்.

என்ன கோரம்! என்ன கோரம்!!

எங்கும் அழிவு! எப்பக்கமும் நாசம்!!

இந்தக் கோரத்தைக் கண்ட, என் கண்கள், கேவலம் புண்களன்றோ! என்று சோகித்தான்.

இக்கோரக் காட்சியைக் கண்டதால் ஏற்பட்டகறை போக கண்களைக் கழுவிக்கொண்டான்.

அப்போழுது அவனுடைய இடது கண் வழியாகச் சூரியா பிறந்தாள்! வலக்கண்ணிலிருந்து, சந்திரன்!!

கண்ணிலிருந்து கடவுளா? - என்று கேட்டுக்கை கொட்டிச் சிரிக்கத் தோன்றுகிறதா - ஜப்பான் எத்தன் மட்டுமல்ல, இங்கு முன்னாளில் இருந்த எத்தர்களும், இதுபோலக் கதைகள் கட்டினர்.

தும்மலிலிருந்து இங்கு 'தேவதை' பிறந்த கதை உண்டு!

கொட்டாவி விட்டபோது, குட்டிக் கடவுள் பிறந்ததுண்டு.

இவ்வளவு ஏன்? ஆறுமுகப் பெருமானின் திருஅவதாரக் கதையைப் பாருங்களேன்-நாடகம் கூட நடக்கிறது, இந்த நாட்களில். கைலைவாசன் நெற்றிக் கண்ணிலிருந்து கிளம்பிய ஆறு பொறிகள், சரவணப் பொய்கை சேர்ந்து, ஆறுமுகன் பிறக்கிறானல்லவா!

இன்றும் இது இங்கு புண்ய கதையாயிற்றே!

நவநாகரீகத்தின் சுவைமிக்க சாறு பருகி, வாழ்வில் இனிப்புப் பெற்றிருப்போர்கூட அல்லவா, நாடக மேடையில் இக்காட்சி காட்டப்படும்போது மெய்சிலிர்க்கிறது என்று கூறுகிறார்கள்.

ஜப்பானில், இன்று, குமாரி சூர்யாவின் பிறப்புப்பற்றி நாடகமாடிட நாடகக் கேசரிகள் இல்லை. இங்கு இருப்பது மட்டுமல்ல, நாடு ஆள வந்துவிட்டு, ஏடுதூக்கி ஆடும் போக்கினர், நாவாரப் புகழவும் செய்கின்றனர்.

நாவாரத்தான்!!

சூரியச் சந்தரர் பிறந்தான பிறகு, மூக்கிலிருந்து வருணன் (மழைக்கடவுள்) பிறந்தானாம்.

அழுதால் கடவுள்! சிந்தினால் கடவுள்!

அப்பப்பா! ஜப்பானியப் புராணீகன், போட்டி போட்டுக் கொண்டு புரட்டுகளைக் கொட்டுகிறான்-பூஜாரிகள் பாடு, கொண்டாட்டம்.

ஜப்பான்நாட்டு வருணன் பெயர், சூசான்!

இந்தக் கடவுள், நமது கண்ணன்போல, கோலாகலத்தில் ஈடுபாடுடையவன்!

'கூடப்பிறந்தவர்களுக்கே தொல்லை தரத் தொடங்கி னான். குமாரி சூர்யாவுக்குக் கடுங்கோபம் பிறந்தது- செச்சோ! இப்படிப் பட்ட துடுக்கர் மத்தியில் இருந்தாலும் 'பாபம்' என்று கருதிக் கொண்டு, ஒரு குகைக்குள்ளே சென்று ஒளிந்துகொண்டாள்-வெளியே வர மறுத்தாள்.

நமது நாட்டுப் புராணத்திலும் இப்படிச் சம்பவங்கள் உண்டு.

கோபம் காரணமாக, அடிக்கடி, கடவுளர் வேலைநிறுத்தம் செய்வர்.

கொண்டாடி, புகழ்பாடி, கோரிக்கையை நிறை வேற்றி, மீண்டும் பழையபடி அக்கடவுளரை அழைத்து வருவர், மற்றக் கடவுளர்.

குமாரி சூர்யா-ஒளிமாதா-உயிரளிப்போள்-உலகின் விளக்கு -தேவதீபம்-இல்லையென்றால், நிலைமை என்னாகும்.

திகைத்த கடவுளர், எப்படியேனும் சூர்யாவை குகையை விட்டு வெளியே வரச்செய்தாக வேண்டும் என்று யோசித்தனர். மானிடர்களா-யோசனை உதிக்காமலிருக்க கடவுளர்களுக்கு-அறிவுக் கூர்மைக்கு என்ன பஞ்சம்.

யுக்தி கண்டறிந்தனர்.

குகைவாயிலில் நின்றுகொண்டு, நாட்டியமாடினர்.

நாட்டியம் என்றால், சாதாரணமாக, கண்வெட்டு, கழுத்துவெட்டு, இடைநெளிவு, உடல் துவளல், கைகாட்டல், காமமூட்டல், என்பவைகள் மட்டும் என்று எண்ணுவீர்கள்.

இல்லை! கடவுளரின் நாட்டியம், இந்த அளவோடு நின்று விடவில்லை.

நிர்வாண நாட்டியம்! கோணல் சேட்டைகளுடன்!

சிரித்தனர், ஆடல் கண்ட மற்றக் கடவுளர். சிரிப்பொலி கேட்டு, குமாரி சூர்யா, என்னவென்று அறிய, குகையைவிட்டு வெளியே வந்தாள்.

கண்ணாடி ஒன்றினை அவள் எதிரே காட்டி, கடவுளர் கூறினராம், "கோபம் கொண்ட குமாரி! நீ குகைக்குள்ளே ஒளிந்துகொண்டால் குடியா முழுகிப் போய்விடும்-இதோ பார்த்தாயா, எமக்கு வேறோர் சூர்யா கிடைத்துவிட்டாள்-என்று கூறினராம்.

ஏதேது விபரீதம் விளைந்துவிடும் போலிருக்கிறதே. நம்மை இவர்கள் உதாசீனம் செய்துவிடுவார்கள் போலிருக்கிறதே என்று பயந்த குமாரி சூர்யா, மீண்டும் கடவுளர் உலகில் இருக்கச் சம்மதம் தந்தாளாம்!

எப்படி, கடவுளர் சமர்த்து! கோபம் கொண்ட குமாரியை, எவ்வளவு தந்திரமாக வழிக்குக் கொண்டு வந்தார்கள் பார்த்தீர்களா!!"

குமாரி சூர்யாவுக்கு, கண்ணாடியும் தெரியாது-தன் உருவத்தை அதிலே காட்டி ஏய்க்கிறார்கள் என்பதும் தெரியாது!

அவ்வளவு தெளிவு தேவிக்கு! ஜப்பானில், குமாரி சூர்யாவின் மக்களே மன்னர்களாயினர், என்கிறான் புராணீகன்.

அந்த மன்னர்கள், அவ்வப்போது, கடவுளர் பட்டியலே தருவார்களாம், மக்களுக்கு.

இன்னின்ன தெய்வங்களைத் தொழலாம் என்று உத்தரவு பிறப்பிப்பார்களாம் - மக்கள் பூஜை செய்வர்!

பூஜையைப் பெற்றுக்கொண்டு வந்த கடவுள் சிலரை, மன்னர்கள், பதவியிலிருந்து நீக்கியும் விடுவதுண்டாம்.

இனி, இன்னின்ன கடவுளரைக் கும்பிடக்கூடாது, என்று அரசன் ஆணையிடுவானாம். மக்கள், பூஜை போடுவதை நிறுத்திவிடுவராம்!

இப்போது, மன்னன் பிறப்பித்த உத்தரவால் அல்ல, மதிபெற்றதால், மறுமலர்ச்சி ஏற்பட்டதால் கலைக்குதவாத கற்பனைகளைக் கடவுட் கதைகள் என்று நம்பிக் கொண்டிருந்த ஏமாளித்தனம் ஒழிந்ததால், ஜப்பானியர் குமாரி சூர்யாவை மாஜியாக்கிவிட்டனர்.

கோயில்களில் கொலுவீற்றிருந்த எண்ணற்ற கடவுளர், மாஜிகளாயினர்!

ஜப்பானும், வேறு பல நாடுகளும், அறிவுத் துறையிலே கண்ட உண்மைகளை இங்கு, ஏற்க மறுக்கிறார்கள் - இருளன் காட்டேரியிலிருந்து இரவிகுலச் சோமன் வரையிலே 'கொலு'வைத்து குழந்தை விளையாட்டு நடத்திக்கொண்டு, ஆதியை அறிந்து விட்டோம், அய்யனைத் தெரிந்துகொண்டோம்; அருளைப் பெற்றுவிட்டோம்; ஆத்திகத்தை வளர்த்து விட்டோம் என்று பேசி மகிழ்கின்றனர். ஜப்பானிலோ, குமாரி சூர்யா; மாஜி!!

❋ ❋ ❋

4. கதிரவன் கண்ணீர்

இது ஒரு மனிதனின் கதை அல்ல. கடவுளின் கதை. கடவுளின் மனைவி கதையுங்கூடத்தான். கடவுளின் கதை என்றால், நாம் காணாத, கேட்டு மட்டும் இருக்கும் புராணமல்ல. நிஜமாக நடந்த கதை.

மனிதர்களுக்கு வாழ்வும், தாழ்வும் சகஜம். சுகமும் துக்கமும் பகலும் இரவும்போல மாறி மாறித்தானே வருமென்பார்கள். குப்பை மேடு உயரும், கோபுரம் தாழும், குசேலர் குபேரராவர், குபேரர் குசேலராவர். இது சகஜம். ஆண்டவனின் திருவிளையாடல் என்பர். ஆனால் கடவுள்களின் கதி பற்றிய கதை இது!

☆ ☆ ☆

"காத்தாயி! நாம் நேரே சூரியபகவானிடம் போய் நமது குறையைக் கூறுவோம் வா" என்றார் சடையப்பர்.

"வா, போகலாம். ஆனால் சூரியபகவானுக்கு நமது குறையைக் கேட்க நேரமேது. ஓயாது ஓடிக்கொண்டிருக்க வேண்டுமே, சற்று நின்று செய்தி விசாரித்து, ஆறுதல் கூற அவருக்கு அவகாசம் இராதே" என்றாள் காத்தாயி.

"அதுவும் உண்மைதான். என்றாலும் நமது குறையை யாரிடமாவது கூறிக்கொண்டால்தான் மனம் நிம்மதியாகும்" என்று சடையப்பர் கூற, 'போய்த்தான் பார்ப்போம், வாரும்' என்று காத்தாயி சம்மதிக்க இருவரும் கிளம்பினர்.

☆ ☆ ☆

"ஐய்யோ! அட பாவிகளே! இது என்ன அக்கிரமம். வேண்டாமடா, நிறுத்துங்களடா. என் முகமெல்லாம் இரத்தமடா, முதுகெல்லாம் வீக்கமடா. ஆயிரக்கணக்கான பேர்வழிகளாகக் கூடிக்கொண்டு இப்படி கற்களால் அடித்து இம்சிக்கிறார்களே. ஆண்டவனே! கேட்கக் கூடாதா! இப்படியும் நடக்கவேண்டுமா"- என்று சூரியபகவான் கூறி அழுது கொண்டிருந்தார், கண்களிலே நீர் தாரை தாரையாகப் பெருகிற்று. அந்த நீர் கீழே வீழ்ந்த பிறகே, கல்லால் அடித்த ஆயிரக்கணக்கானவர்கள் கற்களைக் கீழே போட்டுவிட்டு, ரகுபதிராகவ ராஜாராம் பதீதபாவன சீதாராம்-என்று பாடி, ஆடிக் களித்தனர். தங்கள் குறையைக் கூறிக்கொள்ள வந்த காத்தாயியும், சடையப்பரும், சூரியபகவான் அழுத கண்களுடன் நிற்பதையும், முகத்திலும் முதுகிலும் உடலிலும், கல்லடிக்காயம் இருப்பதையும் கண்டு திடுக்கிட்டு, தங்கள் விஷயத்தைக் கூறாது, முதலிலே சூரியபகவானை துக்கம் விசாரிக்கத் தொடங்கினார்கள்.

சூரிய பகவான், "சற்றே பொறுங்கள், சனியன்கள் தொலைந்தார்களா என்று பார்த்துவிட்டுப்பிறகு பேசுவோம்" என்று கூறிவிட்டு, கிழே பார்த்தார். மக்கள் கும்பல் கும்பலாக குதூகலத்துடன் போகக் கண்டு, "தொலைந்தது பீடைகள்" என்று கூறி பெருமூச்சு விட்டுக் கொண்டே தன் உடலில் இருந்த தழும்புகளைத் தடவலானார்.

☆ ☆ ☆

"ப்ரபோ! இதென்ன கோலம். ஏன் இந்த அழுகை! இதென்ன காயங்கள்?"- என்ற காத்தாயி கேட்க, சூரிய பகவான் கூறினார்.

"என் விதியை எண்ணித்தான் காத்தாயி, நான் அழுதேன். நான் அழுத பிறகுதானே அந்தப் பாவிகள் என்னை அடிப்பதை நிறுத்தினார்கள். என்ன பலமான

அடி! என்ன அடி! போறாத காலம் எனக்கு" என்று மனம் நொந்து கூறினார்.

"என்னதான் நடந்தது?" என்று சடையப்பர் கேட்டார்.

"என்ன நடந்ததா? ஏன் கேட்கிறீர்கள் அந்த வேதனையை! மகா புண்ணிய க்ஷேத்திரமாகிய காசிக்கு வந்தும் கர்மம் தொலையவில்லையே என்பார்கள். எனக்கோ காசிக்கு வந்ததாலேயே இந்தக் கர்மம் வந்தது. நான் வராமல் எப்படி இருக்க முடியும்? காசி ராமேஸ்வரம், ரங்கூன், சிங்கப்பூர், லண்டன், பாரீஸ், பெர்லின், பக்தாது, மாஸ்கோ, மிலான், அங்காரா, அஜோர்ஸ், நியூயார்க், ஆட்டவா, நியூஜிலந்து முதல், எந்த இடத்தைத்தான் நான் போய்க்காணாமல் இருக்கிறேன், காடுமேடுகளையும் காண்கிறேன், காதலர்கள் கொஞ்சிடும் வீட்டையும் பார்க்கிறேன், சகாரா பாலைவனத்தில் சஞ்சரிக்கிறேன், மூடுபனிப்பிரதேசங்களில் நுழைகிறேன். மன்னாதி மன்னர்களும் என் வரவை எதிர்நோக்கி நிற்கக் காண்கிறேன், மகாபாதகம் புரிவோரும் என் வரவுக்கு மகிழக் காண்கிறேன். யாரிடமும் பேதங்கொண்டு இன்ன வருக்கு இவ்வளவு என்று இராமல், எதிர்ப்பட்டோரிடம் எள்ளளவும் பாரபட்சமின்றித்தான் நடக்கிறேன். என் கடமையைச் செய்யத் தவறவேயில்லை. முதுகு வளைய மூட்டை சுமந்து செல்லும் வறியவனைக் கண்டு, அவனது காலும் தலையும் காயுமே என்று சிறிது மனதில் ஈவு இரக்கம் தோன்றியபோதிலும் நாம் என்ன செய்வது, அது அவன் விதி, அவன் மீது காய்வது நம்விதி" என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு கடமையைச் செய்கிறேன். அன்ன நடை அணங்குகள் என்று ஆயிரமாயிரம் கவிகள், கூறக் கேட்டுத்தான் இருக்கிறேன். என்றாலும், அந்த மாதர்கள், கால் கொப்பளிக்க நடந்து செல்லக் காணும்போது, அவர்களின் கைக்குழந்தைகள், தவிக்கும் போது கஷ்டமாகத்தான் இருக்கிறது, ஆனாலும் நான் என்ன

செய்வது, நான் தயை தாட்சணியம் காட்டுவதற்கில்லை. அச்சம் கொண்டு கடமையைச் செய்யத் தவறியதில்லை. அப்படிப்பட்ட எனக்குத்தான் இந்தக் கதிவந்தது" என்றுகூறி சோகித்த சூரிய பகவானை நோக்கி, காத்தாயி, கண்ணீர் உதிர்த்து "பகவானே! உமக்குமா இந்தக்கதி வந்தது?" என்று பரிவுடன் விசாரித்தாள்.

"ஆமாம் காத்தாயி! என் கதை கிடக்கட்டும். நீங்கள் பசியோடு இருப்பீர்களே," ஏதேனும் சாப்பிடலாமே என்று சூரிய பகவான் கேட்டார்.

சடையப்பர், சம்பிரதாயுத்துக்காக, "பசி இப்போது இல்லை. முதலிலே உமது கதையைக் கூறும்" என்றார்.

"ஆமாம், உங்களுக்கு பசி ஏன் இருக்கப் போகிறது. ஆடு கோழியும், அன்னமும், பாலும், பழமும், பட்சணமும், பக்தகோடிகள் படைக்கிறார்கள். தின்று தெகிட்டிவிட்டு இருக்கும்" என்றார் சூரிய பகவான், ஆறுநாட்கள் அன்னாகாரமின்றி காத்தாயியும் சடையப்பரும் அலைந்தது அவருக்குத் தெரியாது.

☆ ☆ ☆

இந்தக் காசி க்ஷேத்திரத்திலே, கங்கையில் மூழ்கி எழுந்து, கைகூப்பி என்னைத் தொழுதோர் கணக்குண்டா? எனது செந்நிறமேனியைப் புகழ்ந்து பூசித்தவர்கள் கோடானுகோடி பேர். கண்கண்ட தெய்வமே! காசினியின் விளக்கே! காரிருளை அகற்றும் கருணாமூர்த்தி! என்று கவிதைகள் பாடுவோர் எவ்வளவோ பேர்? அப்படிப்பட்ட கங்கைதான் இது!

அவ்விதமாக வெல்லாம் பூஜித்து வந்த புண்ணிய க்ஷேத்திரத்தில்தான் அதே பக்த கோடிகள் என்னை, சபித்து, பைத்தியக்காரனைச் சுற்றிச் சிறுபிள்ளைகள் நின்று கொண்டு கற்கள் கொண்டு அடிப்பதுபோல அடித்து, இவ்வளவு காயங்களை உண்டாக்கினார்கள். எவ்வளவு

கூட்டம் தெரியுமோ! என்ன ஆத்திரத்தோடு அடித்தார்கள் தெரியுமோ, ஆயிரக்கணக் கானவர்கள்; கற்களை வாரி வாரி வீசினார்கள். "அடபாவி, பாதகா, பழிகாரா" என்று தூற்றினார்கள் என்றார் சூரிய பகவான்.

ஏன்? என்றார் சடையப்பர்.

"ஏனோ! ஏன் இப்படிக்காய்ந்து தொலைக்கிறாய் என்று கேட்கிறார்கள். கோபிக்கிறார்கள். அடிக்கிறார்கள்" என்றார் சூரியர்.

"காய்வதுதானே கதிரவன் கடமை" என்றாள் காத்தாயி.

"ஆமாம்! கடமையும் அதுதான். விதியும் அதுதான்" என்றார் சூரியன்.

"மக்கள் பிறகு கோபிப்பானேன்?" என்றாள் காத்தாயி.

"மக்கள்! கேட்கிறாயே காத்தாயி. அவர்களின் கோபத்துக்குக் காரணம் வேண்டுமா! எதற்குத்தான் அவர்கள் காரணம் பார்க்கிறார்கள்" என்று சடையப்பர் வெறுப்புடன் கூறினார்.

காத்தாயியும் "ஆமாம்! அதுகளுக்கு, எதுதான் தெரிகிறது" என்று சோகத்துடன் கூறிவிட்டு, "இப்படி வெறிப்பிடித்தவர்கள் போல், உம்மைக் கல்லால் அடித்த பேர்வழிகள் இப்போது ஏன், ஆனந்தமாக ஆடுகிறார்?"கள் என்று கேட்க. "அதைத்தான் நான் ஆண்டவனிடம் கேட்கப்போகிறேன். இந்த அக்ரமம் உண்டா என்று கேட்கவேண்டாமா" என்று சூரியன் கோபத்துடன் கூறிவிட்டு, "இரு! இரு! காத்தாயி, அதோ அந்த மக்கள் ஏதோ கூறுகிறார்கள் கேட்போம்" என்றார். மூவரும் உற்றுக் கேட்டனர்.

“அனாதரட்சகா! ஆபத்பாந்தவா! அடியார்களாகிய, எங்கள் குறையைத் தீர்க்க முன் வந்ததற்காகத் தங்களுக்கு ஆயிரங்கோடி வந்தனம் செலுத்துகிறோம். கதிரோன், காய்ந்து, காய்ந்து, ஊரிலுள்ள நீர் நிலையங்கள் காய்ந்து போயின, பயிர் பச்சைகள் தீய்ந்துபோயின, எங்கள் வயிறு எரியத் தொடங்கிற்று. சூரிய பகவானுக்கு நாங்கள் ஒரு குறையும் செய்யவில்லை. கண்ணால் காணும்போதே “பகவானே!” என்று கூறி துதிக்கிறோம். பரிசுத்தமான கங்கையில் குளித்தானதும், கைகூப்பி, “கண்கண்ட தெய்வமே” என்று பூஜிக்கிறோம். பாற்பொங்கல் படைக்கிறோம். சிரித்த முகத்துடன் கிளம்பி, எங்கள் பூஜையை ஏற்றுக் கொண்டானதும், சீற்றத்துடன் எங்களை முறைத்து முறைத்துப் பார்த்துவிட்டு,, நாங்கள் படுக்கைக்குப் போகுமுன்னம், எங்களைநோக்கி கேலி செய்வதுபோல் புன்சிரிப்புடன் மறைகிறார். பிரதிதினமும் இதே கதிதான். எவ்வளவோ தீட்சணியம், உக்கிரம்! எங்கள் பூஜையைப் பெற்றுக்கொண்டு தரும்பலன் இதுதானா? இப்படிச் செய்தால் எமக்குக் கோபம் வராதா? மழை இல்லை. மக்களுக்கு உணவுக்கு வழியில்லை. மாடு கன்றுக்கு புல் இல்லை. உமது பூஜைக்கு மலர் இல்லை. மனதிலே மகிழ்ச்சியில்லை. எவ்வளவோ வேண்டினோம், துதித்தோம், சூரியனுக்கு மனம் இரங்கவில்லை. கடைசியில் பார்த்தோம் அடியாத மாடு படியாது என்பார்களல்லவா? எடுத்தோம் கற்களை, விடுத்தோம் சரமாரியாக, சக்கை போடு போட்டோம். பிறகுதானே, மழை பெய்தது. உமது கருணையே கருணை.

நாங்கள் சூரியனை இம்சித்தோம் என்று உமக்குக் கோபம் வருமோ என்று முதலில் பயந்தோம். இப்போது தெரிந்துவிட்டது. சூரியனை நாங்கள் கல்லால் அடித்ததைத் தாங்கள் தவறாகக் கொள்ளவில்லை என்று. தயாநிதே! தாங்கள் அனுப்பிய மழைக்காகத் தங்களுக்கு எங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று. காசி

க்ஷேத்திரவாசிகள், விஸ்வநாதர் ஆலயத்திலே வந்தனை வழிபாடு செய்துகொண்டு, ஆண்டவனைத் துதித்துக் கொண்டிருந்தனர்.

"கேட்டாயோ காத்தாயி! நான் அழுத கண்ணீர், அவர்களுக்கு மழையாயிற்று. அதற்காக ஆண்டவனுக்கு பூஜை செய்கிறார்கள். கல்லடி எனக்கு, பூஜை அவருக்கு! கஷ்டம் எனக்கு; சுகம் அவருக்கு! இதுவும் என் விதிதானே," என்று சூரியபகவான் சோகித்துவிட்டு, 'என் விஷயம் இது. உங்களைப்போல் எனக்கும் நிம்மதியான வாழ்வு கிடைத்தால் போதும், இந்த உத்தியோகத்தை ராஜிநாமாக் கூடச் செய்துவிடுவேன் என்றார்.

அதுவரை, பொறுத்துக்கொண்டிருந்த காத்தாயி யால், அதற்குமேல் தாளமுடியவில்லை. கண்களில் நீர் கசியக் கசிய, முந்தாணையால் துடைத்துக்கொண்டே, "எங்கள் கதையைக் கேட்டால்தானே தெரியும். அதைக் கூறத்தான் இங்கு வந்தோம். வந்த இடத்திலே இந்தச் செய்தி கேட்டோம்" என்று விம்மினாள்.

'உங்களுக்கு வந்த கஷ்டமென்ன?' என்று சூரிய பகவான் உருக்கத்தோடு விசாரிக்க, காத்தாயி தனது கதையைக் கூறினாள்.

"நீங்கள் மறந்துவிட்டீர்களோ என்னமோ! நாங்கள் மஞ்சப்பட்டினத்தில் உத்தியோகம் ஏற்று 15 வருடமாகிற தல்லவா! நாங்களாகவா போனோம்? இல்லையே! எவ்வளவு வேண்டினார்கள். கூத்தாடினார்கள், கொண்டாடிக் கும்பிட்டார்கள். அதை நினைத்துக் கொண்டால்தான் நெஞ்சு பகீரென்கிறது. மஞ்சப்பட்டி னம், காசிபோல் பூர்வகால பெருமையுள்ள ஊருமல்ல, கல்கத்தா பம்பாய் போல் நவீன நாகரிகப்பட்டினமும் அல்ல. ராமநாதபுரம் ஜில்லாவிலே பரமக்குடி தாலுக்காவிலே, அது ஓர் பட்டிக்காடு. அங்குபோய் வாசம் செய்ய எங்களுக்கு இஷ்டம் இல்லை. துளிக்கூடக்

கிடையாது. கிராம வாழ்க்கையின் சிறப்புபற்றி. பட்டினத்துப் பிரசங்கிகள் பன்னிப்பன்னிப் பேசியும் எமக்கு மஞ்சபட்டினம் போக மனம் வரவில்லை. ஆனால் மஞ்சப்பட்டினத்து மக்கள் எங்களுக்கு அனுப்பிய மனு அவ்வளவு உருக்கமாக இருந்தது.

எங்களை வரவழைக்க வேண்டுமென்ற எண்ணம், மஞ்சப்பட்டின மக்களுக்கு ஏன் வந்ததோ தெரியவில்லை. நாங்கள் இல்லாமல் என்ன குறைவு இருந்தது அந்த ஊரிலே? மக்கள், உழைத்து வந்தார்கள். குடும்பக் காலட்சேபத்தை நடத்திக்கொண்டு தான் வந்தார்கள், எங்கள் மீது ஏன் அவர்களுக்கு ஆசை பிறந்ததோ தெரிய வில்லை. சடையப்பர் சொன்னார் யாரோ ஒரு பாரதப் பிரசங்கியாம் அவன் தனது பிழைப்புக்காக பாரதப் பிரசங்கம் செய்து முடித்துவிட்டு, கதை கேட்டு காசு கொடுத்தவர்களுக்கு உபதேசம் செய்தானாம், காத்தாயி கோயில் கட்டினால், கலியுகத்திலே கைமேற் பலன் கிடைக்குமென்று, அவன் பேச்சை நம்பின மக்கள், கோயில் கட்டி, அங்கு என்னையும் சடையப்பரையும் குடிபுக வைத்தால் ஏதேதோ கிடைக்கும், வரண்ட நிலத்திலே திரண்ட கதிர் உள்ள பயிர் வளரும், ஆற்றில் கரைபுரள ஓடும், தோட்டத்தில் காய்கறி குவியும், குடும்பத்தில் பிள்ளை குட்டிகளும் தோன்றும், சுபீட்சமாக இருக்கும் என்று ஆசைப்பட்டிருப்பார்கள். அவர்கள் நாக்கில் ஜலம் சொட்டச் சொட்ட அந்த புராணிகன் சொல்லியிருப்பான். அவனுக்கென்ன, புளுகத் தெரியாதா? அவன் படித்த புராணங்களிலே அந்தச் சரக்குதான் அமோகமாச்சே! அவன் தம்பிக்கு பூஜாரி வேலை வரும் வருடந்தோறும் கோயிலிலே பாரதப் பிரசங்கம் நடத்தலாம் என்பது அவன் எண்ணம். அவன் பேச்சை "ஆமா அண்ணே" என்று ஏற்றுக் கொண்டவனுக்கு, கோயில் கட்டி குளம் வெட்டி, தேர் திருவிழா நடத்தினால், அதற்காக வசூல் செய்யும் தர்மப் பணத்திலே தனக்குக் கொஞ்சம் கிடைக்கும் என்ற

ஆசை. தேனை வழிக்க யாருக்குத்தான் இஷ்டமிராது. "ஊரிலே ஏழை எளியவர்கள், செய்யவேண்டியதுதான்!" என்று ஒப்புக் கொண்டார்கள். இல்லையானால் காத்தாயி கண்ணைப் பிடுங்கிக் கொள்வாள் என்று புராணிகன் புளுகி மிரட்டி விட்டான். மேலும் காத்தாயி செலவுக்கு கால்ரூபாய் கொடுத்தால், காலா காலத்துக்கும் நல்லது என்று நம்பினார்கள், அவர்கள் எதைத்தான் நம்பவில்லை. ஊரிலே இருந்த பணக்காரர்கள், இந்தப் பயல்கள் இப்படிக் கோயில் கட்டிக் கொண்டிருந்தால் நல்லதுதான் என்று எண்ணினார்கள். ஏனெனில், கோயில் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தால், தமது நிலையைப் பற்றிக் கவனிக்க ஏழைகளுக்கு நேரமிராது, ஆகவே பணக்காரருக்குத் தொல்லை இராது. கோயில் கட்ட கொஞ்சம் பணம் கொடுத்து விட்டால், "தருமப் பிரபு, கர்ண மகாராசா" என்று பெயர் வரும் மற்றவகைகளிலே பணம் சம்பாதிக்க மார்க்கம் இருக்கும். ஆகவே அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். ஒன்றுமில்லை என்றாலும். கோயில் கட்டினால், வேலையாவது கிடைக்காதா என்று எண்ணி, வெகுபேர், கட்டத்தான் வேண்டும் என்றார்கள். கட்டியும் விட்டார்கள்!

☆ ☆ ☆

கட்டிய கோவிலுக்கு, நாங்கள் வந்துசேர எவ்வளவு காரியம் நடந்தது தெரியுமோ. ஊரெங்கும் உற்சாகம், வீடெல்லாம் விளக்கு. வீதிக்கு வீதி தோரணம், மூலைக்கு மூலை பூப்பந்தல், முச்சந்திகளில் கொட்டு முழக்கு கொண்டையிலே பூ அணிந்த கன்னியர்கள், இடையிலே புது வேட்டியுடன் ஆடவர்கள், உடுக்கை சத்தமும், "ஓங்காளி" கோஷமும், ஊர்முழுதும் கேட்டது. அபிஷேகம், மந்திர உச்சாடனம் செய்ய, தேர்ந்த பூஜாரிகள், அவர்களுக்குத் துணைசெய்ய வேறுபலர் விதவிதமான வாத்தியங்கள், விண் அதிர வெடி வேட்டு! அன்று மஞ்சப் பட்டினம், தேவேந்திரப்பட்டினந்தான்.

எவ்வளவு வைபவத்தோடு நாங்கள் வரவேற்கப் பட்டோம் என்பதை வர்ணிக்க முடியாது. கோயில் அழகும், கோபுரத்தின் அழகும் சொல்லமுடியாது. நான் தங்கியிருந்து தரிசனம் தர நல்ல சிலை. அதிலே சிற்பி தன் சமர்த்தைக் காட்டியிருந்த நேர்த்தியை என்னென்பேன். சடையப்பரின் இருப்பிடமாக இருக்க அமைக்கப் பட்டிருந்த சிலை எட்டடி உயரம்! பட்டாடையும் பவள மாலையும் எனக்கு! சடையப்பருக்கும் விசேஷ அலங்காரம். அதாவது, நாங்கள், மக்களின் பூஜையைக் கண்டு மனம், இளகி, சென்று தங்கிருந்த அந்த சிலைக்கு, மக்கள் அவ்வளவு அலங்காரங்கள் செய்து, விளக்கேற்றி, விழுந்து கும்பிட்டு விதவிதமான பண்டங்களைப் படைத்து பால்காவடி மீன் காவடி புஷ்பக்காவடி எடுத்து, பூஜைகள் புரிந்தனர். சுற்றுப்பக்கத்து கிராம மக்கள் வந்து வேசித்தனர். இது 1926-ஆம் வருடத்திலே.

☆ ☆ ☆

1927-இல் எங்கள் மீது மஞ்சப்பட்டின மக்களுக்கு பழைய பக்தி இருந்தது. பூஜைகள் வழக்கப்படி நடந்து வந்தன. எங்களை வேண்டிக்கொள்ளத் தவறியதில்லை. எங்களின் வீரப்பிரதாபங்கள் பற்றி, பூஜாரி, வாய் நோகப் பாடிக்கொண்டிருந்தான். பூஜாரி கூறி வந்த புளுகுகள் எங்கள் காதுக்கு சலிப்பாகத்தான் இருந்தது. "ராத்திரி காத்தாயி, நடுநிசியிலே கனவிலேதோன்றி, கருப்பு ஆடு மூன்று காவு கொடுத்து, கருப்பு சிலை வைத்து கும்பிட்டால் நம்ம ஊர் கரும்புப் பயிர் செழிக்கும் என்று கூறினாள்." என்று ஒரே போடு போடுவான். அந்த மக்கள், "அதுக்கென்ன பூஜாரி அம்பாளுக்கு இல்லாமே வேறு யாருக்குச் செய்யப் போகிறோம். எல்லாம் அவ இட்ட பிச்சை. அவ வாக்கிற கஞ்சி, அவ கொடுக்கிற சொத்து" என்று கூறுவார்கள். ஆட்டுக் கறியும் சோறும், பூஜாரி குடும்பத்துக்குக் கிடைக்கும் அலமேலுக்கு கருப்புப் புடவையும், பூசாரிக்கு அபின் கஞ்சாகள்ளும், கிடைக்கும். இதற்கு நாங்கள் என்ன செய்வது?

இரண்டாண்டு, மூன்றாண்டு வரையிலும், இப்படி சுகமாகவே இருந்தோம். 1930 ஆரம்பத்திலே கொஞ்சம், கெட்ட காலம் ஆரம்பித்தது. மஞ்சப் பட்டினத்திலே, நாங்கள் குடி வந்ததும் இது நடக்கும் அது நடக்கும் என்று பூஜாரி புளுகினது நடக்கவில்லை. எது நடந்தாகணுமோ அது நடக்குமா, எங்களை வேண்டிக் கொண்டபடி நடக்குமா, நாங்கள் என்ன பிரம்மாவா? நினைச்சபடி நடக்காதுபோகவே, கொஞ்சம் வெறுப்புத் தட்டின மாதிரி ஜனங்கள் நடந்துகொண்டார்கள். அந்த வருடம் விளைச்சல் இல்லை. மழை கிடையாது. அதற்கு நாங்கள் என்ன செய்வது? நாங்கள் இந்திர பகவானா?

☆ ☆ ☆

சோர்ந்துபோன மக்களுக்கு, பூஜாரி தந்திரம் சொல்லிக் கொடுத்தான். "காத்தாயிக்கு ஊர்ப்பொங்கல் வைக்கணும், வைத்தால் மழை, குடங்குடமாக் கொட்டும்" என்று சொன்னான். ஊர்ப்பொங்கல் வைத்தார்கள். பூசாரியின் வீடு கொஞ்சம் பொங்கிற்று அவன் வயிற்றிலே கள் அதைவிட அதிகமாகப் பொங்கி வழிந்தது. மறுதினம் நல்ல மழை! "பார்த்தாயா, காத்தாயியின் மகிமையை" என்று சொல்லி மக்கள் துதித்தார்கள். எங்கள் பாடு கொஞ்சம் நிம்மதியாயிற்று. ஆனால் பாழாப்போன மழைவிடவில்லை. அன்றெல்லாம் பெய்தது ஆறு குளம் ரொம்பிற்று. கழனிகாடு முழுதும் வெள்ளம் மறுநாள் பெய்தது. மரங்கள் முறியும் பெருங்காற்று. வீடு வாசல் குளமாயிற்று. விடவில்லை மழை. மழை வந்ததே என்று சந்தோஷித்த மக்கள், "காய்ந்தா காயுது, பேய்ந்தா பேயுது. இது என்ன காத்தாயி அப்பா" என்று சலித்துக் கொண்டார்கள். மழையினால், ஊருக்கு நஷ்டம் எங்களுக்கும் மனக் கஷ்டம்தான்.

☆ ☆ ☆

மறுவருடம், மழை இல்லை. மக்கள் முகத்திலே மலர்ச்சி இல்லை. எங்கள் வாழ்கையில் குளிர்ச்சி இல்லை. பூசாரியை, ஜனங்கள் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். "என்ன பூசாரி! காத்தாயிக்குக் கடா வெட்றதில்லே குறைவில்லை. நீயும் உடுக்கை அடிக்க ஓய்றதில்லை. ஒண்ணும் காணோமே. ஊர், நாளுக்கு நாள் க்ஷீணிக்குதே. அம்மாவுக்கு மனம் இரங்கலியா?" என்று கேட்பார்கள்.

"அண்ணே! அவசரப்படாதீங்க, இதெல்லாம் அம்மா சோதனை. அடுத்த வருஷம் பாருங்க" என்று பூசாரி சமாதானம் கூறுவான். ஆனால் யாருமில்லாத நேரத்திலே, "காத்தாயிபாடும் நம்மபாடும் திண்டாட்டந்தான்" என்று மெள்ள முணுமுணுத்துக் கொள்வான்.

அடுத்த ஆண்டிலே பூஜாரி சுபீட்சம் வரும் என்று சொன்னான். ஆனால் வந்தது அதுவல்ல. காலரா! அது ஆரம்பமானதும், கொஞ்சம் பூஜைகள் அதிகரித்தது. ஆனால், பூஜை செய் வீட்டிலேயே பிணம் பொத்தென விழ ஆரம்பிக்கவே, பூஜை நின்றுவிட்டது. பூஜாரிக்கு சென்ற இடமெல்லாம் எதிர்ப்பு. "என்ன குறையைச் செய்தோம்! எங்கள் ஊருக்கு இந்த அவதி இதுவரையில் வந்ததே கிடையாதே" என்று கேட்கலாயினர். இளநீர் அபிஷேகம் செய்தால், அம்மையின் கோபம் தணியுமென்றான். அரைகுறை மனதுடன் செய்தார்கள். காலரா ஓயவில்லை. ஊரிலிருக்கும் வேப்ப மரங்கள், மொட்டைக் கொம்புகளாயின. பல குடும்பங்களிலே பரிதாபகரமான சாவுகள். ஒரு ஏழைக் குடும்பத்திலே, தாய் தந்தை, கணவன் மூவரும் இறந்துவிட்டனர். இளம் விதவை, அவளுக்கு ஐந்து வயதுப்பெண், அதற்கும் காலராக் கண்டுவிட்டது. அவள், கோயிலை வலம் வந்தாள். எவ்வளவோ வேண்டிக் கொண்டாள். அபிஷேக நீரைக் குழந்தைக்குக் கொடுத்தாள். அலைந்தாள், பதைபதைத்தாள், "காத்தாயி, ஆத்தே, கண்ணை திறந்து பாரேன்" என்று அழுதாள் அவளது

குழந்தை இறந்துவிட்டது. அவளுடைய மனம் எவ்வளவு பதறிற்றோ, "காத்தாயி கோயிலிலே இடி விழ, என் குடும்பம் போச்சேடி. உன்னை அல்லும் பகலும் துதித்தேனே! ஆருமற்ற பாவி ஆனேன். அருமைக் குழந்தையையும் இழந்தேனே" என்று வீறிட்டு அழுதாள். 'சீச்சீ! காத்தாயியைப் பழிக்காதே' என்று அவளை மற்றவர்கள் திட்டினார்களே தவிர, மனதிலே, "ஆமாம்! பாவம்! எவ்வளவோ வேண்டிக்கொண்டாள். காத்தாயிக்கு மனம் இரங்கவில்லையே. அவ்வளவு கல்மனதா? நாம் செய்த பூஜை வீணாகத்தானே போச்சுது" என்று விசாரப்பட்டார்கள்.

இந்த விசாரம் வளரத் தொடங்கிற்று. எங்களுக்குத் திகில் பிறந்தது. பூஜைகள் குறைந்தன. கோயிலுக்கு, யாரோ சிலர், ஒப்புக்கு வந்தார்கள், போனார்கள். ஆனால் பழைய ஆசை போய்விட்டது. இவ்விதம் சில வருடமாயிற்று. நாங்கள் ஏழைக் குடித்தனம் செய்தோம். எதுவோ நடக்கிற அளவு நடந்தாலும் போதும் என்று மனதைத் தேற்றிக்கொண்டுதான் வந்தோம். பூஜாரியும் இளைத்துத் தான் போனான்.

போன வருடம் எங்களைச் சனி பிடித்துக் கொண்டது. மஞ்சப் பட்டினத்து வாலிடர்கள், மாகாளி புராணம், மகேஸ்வரன் பிறப்பு முதலிய கதைகளைப் படிப்பதை மறந்துவிட்டனர். சும்மாவாவது இருந்தார்களா! இந்தப் புராணங்களைக் கேலி செய்யத் தொடங்கினார்கள். ஊரிலிருந்த பெரியவர்கள், அடக்கித்தான் பார்த்தார்கள், முடியவில்லை. காலத்தின் கோலம் என்று கூறிவிட்டனர்.

"தாத்தா! நமக்கு மட்டும் ஏன் ஆயிரக்கணக்கான சாமி, மற்ற நாடுகளிலிலே ஒரே சாமி இருக்கிறதே. அவர்களெல்லாம் நன்றாக வாழ்கிறார்களே, நாம் இப்படி வதைகிறோம். காத்தாயி. மாரியாயி, மூக்காயி என்று மூலைக்கு மூலை இருக்கிறது. ஓயாமல் பூஜை செய்கிறோம்.

ஒரு பலனும் காணவில்லையே. கஷ்டம் குறைய வில்லையே" என்று வாலிபன் ஆரம்பிப்பான்.

கிழவன், "அவனவன் தலையிலே எழுதினபடி தானேடா, நடக்கும் காத்தாயியைக் கும்பிட்டு, கால்படி அரிசி பொங்கிவிட்டா, அன்று அவன் எழுதினது அழிந்தா போகும்" என்று சாமர்த்தியமாகப் பேசுவார்.

"விதிப்படி காரியம் நடக்குமென்றால், நடுவிலே, இந்தக் காத்தாயி. கருப்பன் ஏன் தாத்தா? நடப்பது நடக்கட்டும் என்று நாம் சும்மா இருந்துவிடலாமே, இந்த வீண்செலவு ஏன்" என்று வாலிபன் கேட்பான்.

"போடா! பொல்லாத கேள்வி கேட்டுவிட்டே! நம்மைப் படைச்ச ஆண்டவனுக்கு நாம் பூஜை செய்ய வேண்டாமா?" என்பார் தாத்தா.

"தாராளமா தாத்தா! எரு போட்டால், விளைச்சல் காட்டணுமே! பூஜை செய்தால் பலிக்கணுமே. அறுவடை காணோமே. காத்தாயி கோயில்கட்டி 15 வருஷமாகிறதே! பஞ்சம் வருவது நின்றுவிட்டதா, காலரா போச்சா, நம்ம கஷ்டம் நீங்கிவிட்டதா" என்று வாலிபன் கேட்பான்.

"ஒன்றுந்தான் போகவில்லை. ஓயாத தொல்லை தான்" என்று ஒருவர் ஒப்புக்கொள்வார்.

"வாலிபன் தன் வாதம் கெலித்தது என்று எண்ணிக் கொண்டு போய்விடுவான். ஆனால் வேறோர் கிழவரைக் கண்டதும், அந்தக் கிழவர், நமது கஷ்டம் ஒரு பெரிதா, தலை எழுத்தின்படி தானே நடக்கும்" என்று பழைய பல்லவிதான் பாடுவார். மற்றக் கிழவர் "இது என்ன எந்தக் காலத்திலும் நடப்பதுதானே. அப்பேர்க் கொத்த ராமபிரான்..." என்று ஆரம்பிப்பார். இருவரும், ராமர், சீதையை விட்டுப்பிரிந்து தவித்தது சிவன் பிச்சை எடுத்தது, பிரமனின் தலைபோனது முதலிய கதைகளைப் பேசிக் கொண்டே, காலந்தள்ளுவர் இந்தக் கிழவர்கள், பேசும்

சக்திபெற்றிருக்கும் வரையிலே நாம் காலந்தள்ளலாம் என்று ஒருவாறு தைரியப்படுத்திக்கொண்டு வாழ்ந்து வந்தோம். ஆனால் இந்த வாலிபப் பிள்ளைகள் விடவில்லை. ஓயாமல் பேசினர். சுயமரியாதைச் சங்கமாம், தமிழர் கூட்டமாம், குடிஅரசுப் பத்திரிகையாம், ஏதேதோ ஆர்ப்பாட்டம் செய்தனர். வாலிபர்களின் பிரசாரம் வலுப்பெற்றது. 1940-லும் சுபிட்சம் இல்லை. 1941 பிறந்தும் பயனில்லை. வாலிபர்கள் மூட்டிவிட்ட கோபம் கிழவர்களையும் பிடித்துக்கொண்டது. என்ன சொல்வோம், எங்களைப் பூஜித்தவர்களே தூஷிக்கத் தொடங்கினர்.

"அரைக் காசுக்குப் பிரயோஜனமில்லை" என்றார் ஒருவர்.

"சுத்த தண்டம்" என்று ஒருபடி மேலேறினார் வேறொருவர்.

வீணான செலவு. மெனக்கேடு என்றார் இன்னொருவர்.

"காத்தாயியும் மூக்காயியும், இதெல்லாம் அந்தப் பசங்கள் சொல்றதுபோலே, கட்டுக் கதையப்பா என்றார்" நடுத்தர வயதுள்ள ஆசாமியொருவர். "அந்தக்கோயில் போனால் என்ன இருந்தால் என்ன" என்றார் வேறொருவர் வெறுப்பாக.

"மதில் சுவர் இடிந்து வருகிறதே தெரியுமா" என்றார் இன்னுமொருவர்.

"இடியட்டும் இந்தக் காத்தாயி கோயில் கட்டினதுனாலே நம்ம ஊரே நாசமாகி வருகிறது" என்றார் ஒருவர்.

"நல்ல வேளையிலே கோயில் கட்டவில்லை. அதனலே வந்த வினைதான் இவ்வளவும்" என்று

ஒருகிழவர், கோயிலைக் குறைகூறாது வேளையைக் குறை கூறினார்.

"தாத்தா, நேரம் சரியில்லை என்றால், இன்னும் அந்தக் கோயிலைக் கட்டி அழுவது ஏன்? இடித்துத் தள்ளுவதுதானே" என்று ஒரு வாலிபன் கேட்டான்.

"இடித்தால்தான் என்ன" என்றார். பல குரல்கள் கிளம்பின. நான் என்ன சொல்லுவேன், மண்வெட்டியும், கடப்பாரையும் எடுத்துக் கொண்டு கோயிலுக்கு வந்தனர். எவ்வளவு பக்தியோடு கட்டினார்களோ, அவ்வளவு ஆத்திரத்தோடு இடித்தார்கள். மதில் சரிந்தது, கோபுரம் இடிக்கப்பட்டது. பிரகாரம் பிளக்கப்பட்டது.

ஒரே கூக்குரல். இடி! பிள! அடி! என்ற சத்தம். பெண்களிலே சிலர், "இடிக்க வேண்டியதுதான். அவள் முன்னமேயே காத்தாயி கோயிலிலே இடி விழ என்று சாபம் கொடுத்துத்தான் போனாள்; பத்தினியாச்சேஅந்தப் பெண்" என்றனர்.

சிலர் கோயிலை இடித்தால் என்ன கேடு வருமோ என்று பயந்தனர். பூஜாரி, ஊரைவிட்டே ஓடிவிட்டதாகக் கேள்வி. இடிக்கும் படை நாங்கள் தங்கியிருந்த மூலஸ் நானத்துக்கே வந்தது. "சடையப்பரே" என்று நான் கூறுமுன்னம், 'கிளம்பு' என்றார் அவர்; இருவரும் சிலையை விட்டுச் சரேலெனக் கிளம்பி, அந்தரத்தில்; அவர்களின் கண்களுக்குத் தெரியாமல் நின்றோம்.

கண்ணைப் பாரடா காட்டுக்கோட்டான்போல! மூக்கைப் பாரடா மூணு முழ நீளம்! கையைப் பாரடா கலப்பையைப் போல! மீசையைப் பார், மீசை! இடுப்பிலே போட்டாஅடி, பாதியாகப் பிளக்கும்! என்று அந்த மக்கள் எங்களைத் தூற்றிக்கொண்டே சிலைகளை உடைத்தனர். எங்களைக் கண்ணாயிரம் படைத்தவளே! கபால மூர்த்திக் குகந்தவளே! கார்வண்ணன் தங்கையே! மலர்க் கண்ணி மாகாளி! என்று துதித்த வாய்கள், அன்று அப்படித் தூற்றின. சிலைகள் தூள் தூளாயின!

இனி இங்கிருப்பது ஆபத்து என்று எண்ணி, இவ்விதமாக எம்மை வரவழைத்து 15 ஆண்டு எமது பரிபாலனத்தின் கீழிருந்து, பிறகு எங்கள் கோயிலை உடைத்து, அவமானப்படுத்தி ஊரைவிட்டு நாங்கள் ஓடும்படி செய்த மக்களுக்குத் தக்க தண்டனையைத் தரவேண்டுமென ஆண்டவனின் முறையிட எண்ணினோம். முதலில் உம்மிடத்திலே சொல்லலாம் என்று வந்தோம். இங்கே, உமது நிலை இப்படி இருக்கிறது" என்று காத்தாயி தனது வரலாற்றைக் கூறிமுடிக்கச் சூரியன் "சரி வாருங்கள் ஆண்டவனிடம் சென்று முறையிடுவோம்" என்று கூறியவுடன்; அந்தரத்தில் இருந்து ஓர் ஒலி கிளம்பிற்று!

☆ ☆ ☆

"சூரியனே, காத்தாயி சடையப்பா, கேளுங்கள், நீங்களும் உங்களை ஒரு காலத்தில் பூசித்து இப்போது இம்சித்த மக்களும், இந்த வரலாற்றைக் கேட்டு நீதி வழங்குவார் என்றெண்ணி நீங்கள் வந்து அடுத்துள்ள நானும், எல்லாம் வேறுவேறு என்று எண்ணி வேதனைப் படுகிறீர்கள். வேறல்ல! எல்லாம் நானே! சோகிக்கும் சூரியனும் நானே, அவனைக் கல்லால் அடித்த காசிவாழ் பக்தர்களும் நானே, கோயில் கட்டிய மஞ்சப்பட்டின மக்களும் நானே, கோயிலை இடித்தவர்களும் நானே, காத்தாயி நானே, சடையப்பனும் நானே, உமக்கு யாராலோ தொல்லை நேர்ந்ததாக முறையிடுகிறீர்களே பேதைகாள்! நான் வேறு நீங்கள் வேறல்ல! எல்லாம் நானே! அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதை மறந்தீரோ!" என்று ஒலி கேட்டது!

☆ ☆ ☆

சூரியன் காயச்சென்றான். காத்தாயியும் சடையப்பரும், கூப்பிட்டால் போவோம் என்று உடுக்கை சத்தம் எங்கு கிளம்புகிறதென்று எதிர் பார்த்து இருந்தனர். காசிவாசிகள் 'கங்கையில் மூழ்கி எழுந்து கதிரவனை வணங்கினர். ஆண்டவன் தயையால் நம்மைப் பிடித்த சனி

இனித் தீர்ந்தது என்று மஞ்சபப்பட்டின வாசிகள் தொழுதனர். மற்றோர் கோயில் கட்டுவிக்க என்ன தந்திரம் செய்யலாம் என்று மதவாசி யோசித்துக் கொண்டிருந்தார்.

☆ ☆ ☆

"இது என்ன கதையப்பா! இப்படியும் ஒரு சம்பவமா? சுத்த - அபத்தம்" என்று கேட்பீர்கள். "காத்தாயி சூரியனைப் பார்ப்பதாவது! கல்லடிபட்ட சூரியன் கதறுவதாவது! கோயில் இடிவதாவது! இது யாரிடம் அளக்கிறாய்" என்று கேட்பீர்கள்.

காத்தாயி பேசினதோ, சூரியன் அழுததோ கிடக்கட்டும். சூரியனை கல்லாலடித்து மழைபெய்ய வைத்த சூரர்கள் காசியிலே இன்றும் இருக்கிறார்கள்.

இது 'தினமணியில்' வந்தசெய்தி.

"கதிரவனுக்குக் கல்லடி!"

காசி வாசிகள் கை வரிசை!

காசி, ஜூன், 28, 1947.

மழை பெய்யாததால், வெப்பத்தைத் தாங்க முடியாமல் ஆயிரக் கணக்கான மக்கள் மனங் கொதிப்படைந்தார்கள். ஆதலால் சென்ற சில தினங்களாக அவர்கள் சூரியன்மீது கற்களை வீசிக்கொண்டிருந்தனர்.

இன்று அந்த மக்களின் மனம் மகிழ்ச்சி யடையும்படி நீலவானத்தில் கருமேகங்கள் சூழ்ந்தன. காலையில் அரை மணி நேரமும் மாலையில் அரை மணி நேரமும் மழை பெய்தது. அதனால் இப்பொழுது காசி நகரம் வெப்பம் தணிந்து குளிர்ச்சியாக இருக்கிறது.

☆ ☆ ☆

காத்தாயி கோயிலை இடித்த செய்தி இதோ "சுதேசமித்திர" னில் இருக்கிறது:-

வைகைக் கரையில் விக்கிரங்கள்,

மஞ்சப் பட்டினத்தில் சம்பவம்

ராமநாதபும், ஜூன், 18, 1947

பரமக்குடி தாலுகா மஞ்சப்பட்டினத்தில் அக் கிராம வாசிகள் சென்ற பிரமோதூத வருஷம் வைகாசி மாதம் சுமார் 2500 ரூபாய் செலவில் ஸ்ரீ சடையப்ப ஸ்வாமி ஆலயத்துக்குக் கும்பாபிஷேகம் செய்தனர். மேற்படி கிராமவாசிகள் அவ்வருட முதல் க்ஷீணமடைந்து வருவதாகக் கருதினர். எனவே ஆலயத்தின்மீது வெறுப் புற்றுச் சென்ற ஞாயிறன்று அவர்கள் அந்தக் கோயிலைப் பின்னப்படுத்தி அதிலிருந்த மூலவர் 8 அடி உயரமுள்ள ஸ்ரீ சடையப்ப ஸ்வாமியின் மூல விக்ரகம் ஒன்றையும், சுமார் 5 அடி உயரமுள்ள ஸ்ரீ காத்தாயி அம்மன் விக்கிரகம் இன்னும் பல விக்கிரகங்களையும் அப்புறப்படுத்தி வைகை நதிக்கரையோரமாக வைத்துவிட்டனர். இப்பொழுது அவ்வாலயத்தில் பூஜை கிடையாது.

இது விஷயமாக கிராமத்தில் விசாரித்தால் அவர்களனைவரும் ஏகோபித்தே இக்காரியத்தைச் செய்தனரென்று கூறப்படுகிறது.

☆ ☆ ☆

இப்போது என்ன சொல்கிறீர்கள். இவ்வளவு பிரகஸ்பதிகள் இருக்கும் நாட்டிலே, காத்தாயி பேசுவதாகக் கூறியதுதானா அதிசயம்!

என்றையத் தினம் இந்தப் பேதைமை ஒழியும்? எப்போது இத்தகைய ஆபாசமான கருத்துக்கள் நமது மக்கள் மனத்தைவிட்டு அகலும்?

மௌனந்தான் பதிலா? வேறு பதில் கூறும் தீரர்கள் இல்லையா! இந்தக் கோர நிலைமையை மாற்றி அறிவு விளங்க, ஆராய்ச்சி ஓங்க மக்களை பகுத்தறிவாளர்களாகச் செய்ய வீரர்கள் இல்லையா?

❋ ❋ ❋

5. கடவுள் தண்டிப்பார்!

காத்தான் நல்ல பலசாலி. வம்புச் சண்டையை விலைக்கு வாங்குவதில், அவனுக்குத்தான் முதல் பரிசு தரவேண்டும். 'காத்தான் வருகிறான்' என்று சொன்னாலே போதும்; அழுத குழந்தையும் வாய்மூடிவிடும். அவ்வளவு பொல்லாதவன் காத்தான்-போக்கிரி! சட்ட புத்தகங்களிலே உள்ள விதிகள் அனைத்தும், காத்தான் விஷயத்தில் வெறும் எழுத்துக்கள் என்றுதான் சொல்லவேண்டும். அவன் பெயரை, அவனைக் காணாத நேரத்தில்கூட உச்சரிக்கப் பயந்து கொண்டிருக்கும் மக்களால், அவன் செய்யும் அக்கிரமங்களுக்கெல்லாம், ஒரு முடிவு காண, நீதியின் துணையை நாட எப்படித் துணிவு ஏற்படும்? அவனைக் கண்டாலே மூச்சுப் பேச்சு அற்றுப் போகிறவர்களால், அவனுக்கு விரோதமாகச் சாட்சியங்கூற, எவ்வாறு இயலும்? காத்தான் களவாடினாலும், கற்பழித்தாலும், அநியாயமாகப் பிறரை நையப் புடைத்தாலும், தீங்கு பல புரிந்தாலும், மற்றவர்கள், அதனைக் கண்டும் காணா தவர்கள் போல் இருந்துவிடுவர். எனவே, காத்தான் ஒரு தனிக்காட்டு ராஜாவாகக் காலங் கழித்து வர முடிந்தது. அவன் கண் சிமிட்டல் கட்டளையாகவும், அவன் வாய்ச் சொற்கள் நீதிக்கோவையாகவும், அவன் செயல்கள் நல்ல தீர்ப்பாகவும் அமைந்துவிட்டன!

காத்தான் முன்னிலையில்தான், அவனைப்பற்றி ஏதாவது கூற மக்கள் பயந்தனரேயன்றி, ஒருவரை ஒருவர் சந்திக்கும்பொழுதும், ஒன்றுகூடிப் பேசுகிற காலத்திலும், அக்கம்பக்கம் பார்த்து, காத்தானின் கொடுமைகளைக் குறித்து முணுமுணுக்காமல் இருப்பதில்லை. அதுசமயம்

அவர்கள் கண்களில் காணும் பரிதாபக் குறி, அவர்களின் நெஞ்சங்களில் சிறைவைக்கப்பட்டிருக்கும் காத்தான் பற்றிய பயங்கர நினைவுகளை உணர்த்தத் தவறுவதில்லை. உதடு வேறு கூறினாலும், உள்ளம் காத்தானின் அழிவுக்குச் சாபம் கொடுக்காமல் இருப்பதில்லை. அக்கிரமத்தை அறிந்தும், அதன் விளைவுகளைச் சொந்தத்தில் அனுபவித்தும், அதனைத் துடைத்துக்கொள்ள ஆற்றலற்றும், விடுபடுவதற்கான வழிவகை தெரியாமலும், அதற்கான துணிவு கொள்ளாமலும் இருந்தவர்கள், காத்தானைச் சபிக்க மட்டும் பின்வாங்கியதில்லை. 'எப்படி இருந்தாலும், என்றைக்காவது ஒருநாளைக்குக் காத்தானைக் 'கடவுள் தண்டிக்கத்தான் போகிறார்!' என்று நிமிஷம் தவறாமல் நினைத்துக்கொண்டுதான் இருந்தார்கள்.

"இதோ என் பணத்தைப் பார். அடுக்கடுக்காக உள்ள ஆடைகளைப் பார்-அதோ இருக்கும் அலங்கார அணிமணிகள் அனைத்தையும் பார்-அவ்வளவும் உனக்குத் தான்! அதற்கு ஈடாக உன்னை நான் செய்யச் சொல்வ தெல்லாம்-உன்னிடத்திலிருந்து நான் எதிர்பார்ப்ப தெல்லாம்-ஒன்றே ஒன்றுதான்!" இது காமுகனின் கனிவான வார்த்தை!

"உம்மிடத்தில் பணம் பாசிபடிந்து கிடக்கிறது! பட்டாடைகள் பல இருக்கின்றன. அறிகிறேன்! விதவிதமான நகைகள் வேண்டிய அளவிற்குமேல் வைத்திருக்கிறீர்கள், தெரிகிறது! இவ்வளவாலும் உங்க ளுக்குச் சுகமில்லை. நீங்களே சொல்கிறீர்கள் வாய்விட்டு! சுகத்தைத் தேடுகிறீர், சுகங்கொடுக்க காத்திருக்கும் சுந்தரியை மறந்துவிட்டு! நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கும் சுகத்திற்காக, அது எவளிடத்திலிருந்து பெறமுடியாதோ, அவளிடத்தில் எதிர்பார்க்கிறீர்,

அவளிடத்தில் தஞ்சம் புகுகிறீர் அதற்காக!" காமுகனின் கைப்பிடியில் சிக்குண்டு தவிக்கும் மங்கை கூறுகிறாள் இப்படி!

"மரியாதைக்கு இது காலமில்லை. மருள்விழி படைத்த மான்குட்டி என்று நினைத்துக்கொண்டு, கனிந்த வார்த்தைகளால், என் கருத்தை வெளியிட்டேன். அதற்கிசைய மறுத்து இதோபதேசம் புரிகிறாய். எனக்குத் தெரியாதா இவைகள் எல்லாம். என்னைவிட அதிகம் கற்றவள்போல்-எஜமான் இடத்தில் பேசுகிறோம் என்பதையும் மறந்து-நீட்டுகிறாய் உன் நெஞ்சில் உள்ளதை. எனக்குத் தேவை உனது உடல்-உபதேசமல்ல!" இவ்வாறு கோபமாகக் கூறிக்கொண்டே கன்னியை நெருங்குகிறான் காமுகன்.

கன்னிப்பெண் கதறுகிறாள். அவள் அபயக்குரல் காற்றில் கலக்கிறது-பிறர் காதுகளில் விழவில்லை. பெண்ணின் உள்ளமும் உதடும் சேர்ந்து பேசுகிறது, "உன்னுடைய அக்கிரமத்தைக் கடவுள் பார்த்துக் கொண்டுதான், இருக்கிறார். என்றைக்காவது, இதற்காக, கடவுள் தண்டிக்கத்தான் போகிறார்!"

☆ ☆ ☆

வட்டிக்கடை வரதப்பருக்கு 'வள்ளல்' என்ற பட்டத்தை அவரால், சொந்தத்தில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட கணபதி கோயில் திருப்பணிக்குப் பிறகு, சைவ மெய்யப்பன்பர்கள் மனமுவந்து தந்தார்கள். வள்ளலுக்குப் பணம் வந்து சேர்ந்த கதை, மனித வரலாற்றுக் கதையைக் காட்டிலும் நீளமானது- மனமுடைச்சல் நிரம்பியது. அவருடையப் பணப்பெட்டியிலே உள்ள ஒவ்வொரு தம்படியும், விதவிதமான கதைகளைக் கூறும், சரித்திரச் சின்னங்களாகும். அண்டிமாண்டு எழுதும்போது 500 ஆக இருப்பது! பைசல் ஆகும்பொழுது 1500 ஆக

வளர்ந்துவிட்டிருக்கும். கடன் பட்டவனுக்குத் தெரியாது இந்தச்செப்பிடு வித்தை. அடைபட்டுக் கிடக்கும் சிங்கம் போல் சீறுவான் கடன்பட்டவன், பலன் கிடைக்காது. பிறரின் அனுதாப வார்த்தைகள்கூட, அவனுக்கிருக்காது கேலியும்-கண்டனமும் அவனைச் சுட்டுத்தகிக்கும், 'வள்ளல்' என்ற பட்டம். வட்டிக் கடைக்காரருக்கு, அவர் வைத்திருந்த பணத்தின் சக்தியைக் காட்டிலும், புதிய பலத்தை-எத்தகைய தாக்குதலையும் எதிர்த்து நிற்கவும், அழித்தொழிக்கவுமான வன்மையைக்-கொடுத்து விடுகிறது. எனவே, ஏமாற்றமடைந்த ஏழை - கடன்-பட்டவன், 'இந்த அக்கிரமக்காரனைக் கடவுள் தண்டிக்கத்தான் போகிறார்!' என்று தீர்க்கதரிசனம் கூறுவதோடு ஆறுதல் பெற்றுவிடுகிறான்.

நடுநிசி. அமாவாசை தினம். வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் நன்கு உறங்கிக்கொண்டு இருக்கிறார்கள். கள்ளன் உள்ளே நுழைகிறான். இரும்புப் பெட்டியை உடைக்கிறான். விழித்துக்கொள்ளுகிறார்கள் வீட்டுக் குடையவர்கள், பணந்தேடி, தனது கண்முன்னாலேயே, வந்த பொருள்தேடி, தான் இதுவரையில் சேர்த்து வைத்ததை எல்லாம் ஒன்றுவிடாமல் எடுத்துக்கொண்டு, கம்பி நீட்டத் தயாராவதைப் பார்க்கிறார்-பதைக்கிறார். வாய்திறக்க முடியாமல் மிரள மிரள விழிக்கிறார். கள்ளனின் கையிலே உள்ள பளபளப்பான கருவி, பணந்தேடிக்கு அச்சத்தை மூட்டுகிறது. இதன் பலனாக வாய்தான் பேச்சொழிந்ததே ஒழிய, நெஞ்சு ஓய்வெடுத்துக் கொள்ளவில்லை. ஆத்திரமான சொற்களைக் கக்குகின்றன ஆரம்பத்தில். ஆனால், முடிவில், "இந்தக் கள்ளப்பயலை கடவுள் தண்டிக்கத்தான் போகிறார்" என்று கள்ளனுக்குக் கிடைக்கவேண்டிய நல்லதீர்ப்பை, கடவுள் தந்தாக வேண்டுமென நம்பிக்கையோடு கூறிநெஞ்சு திருப்தி கொள்கிறது.

காத்தான் - காமுகன் - வள்ளல் - கள்ளன் இவர்களுடைய நடத்தைகளால், கஷ்ட நஷ்டப்பட்டவர்கள், ஏற்பட்ட வேதனையைத் தாங்கமுடியாமல் ஆனால் கொடுமையை ஒழிக்கவேண்டும் - ஒழிக்கப்படவேண்டும் - என்னும் உறுதியான முடிவோடு- “தவறி நடப்பவர்களைக் கடவுள் தண்டிப்பார்” என்று தங்களுக்கு நீதி வழங்க-கொடுமையைக்களைய-குறைகளைப்போக்க-பாதுகாப்பு அனைத்தும் அளிக்க, தங்கள் சக்திக்கு மீறிய -அக்கிரமக்காரர்களின் சக்தியைக் கருவறுக்கும் ஆற்றல் உள்ள ஒரு சக்தியை-பல மிக்க ஒன்றைத் தேடுகிறார்கள்-அதுதேவையாகவும் இருக்கிறது-அது கிடைக்கவும் கூடும் என்றும் நம்புகிறார்கள். தேவை இருக்கிறது, வேதனை போக்கவேண்டிய அவசியம் தெரிகிறது, பாதுகாப்பின் முக்கியம் உணரப்படுகிறது, ஆனால் அதற்கான ஆற்றல் நிரம்பிய ஒன்று, மக்களால் உருவாக்கப்பட்டுப் பலகாலமாகப் பாதுகாத்து வளர்க்கப்பட்டுவரும் நம்பிக்கை, மக்கள்கோரிக்கைகளை நிறைவேற்றினது கிடையாது. மக்களில் சிறந்தவர்கள்-சிந்தனையாளர்கள்-எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவுதான் இன்று நாம் காணும் சாதனங்கள் அனைத்தும். சூதுமதியினர் கற்பித்துக் காப்பாற்றி வரும் வெறும் சொல்லால் ஆக்கப்பட்ட அற்புதம் அல்ல. இவைகளை இன்றைய உலகத்தில் இருந்து நமது பார்வையில் படாமல் அகற்றி-அழித்து விட்டால் நாடு காடாகும், மக்கள் மந்திக் கூட்டம் ஆவர்.

சுகவாழ்வு-சுதந்திரம்-உரிமை இவ்வளவும் தனி மனிதனுக்கு இருந்து தீரவேண்டிய சத்தான பண்களாகும். இவ்வளவையும், ஒவ்வொருவருக்கும் அமைத்துத் தருவதும் இவைகளைச் சின்னாபின்னமாக்காமல் ஒழுங்காகப் பாதுகாத்துத் தருவதுந்தான், மக்களாட்சி முறையின் மாண்பாகும். இத்தகைய தன்னாட்சி முறையை அழிந்துபடாமல் பாதுகாத்து வரவேண்டிய பொறுப்பு,

ஒவ்வொரு தனி மனிதனையுஞ் சார்ந்ததாகும். தனி நபருக்கு மட்டுமல்லாமல், தனிநபரின் உரிமைகளைக் கெடுத்து விடாமல், சமூக நலனையும் பாதுகாத்து வருவதால், அரசாங்கத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமை கொண்டவனாக ஒவ்வொரு பிரஜையும் இருந்து தீரவேண்டியதாக இருக்கிறது. ஒவ்வொருவனும் அனுபவிக்கும் உரிமையைப் பொறுத்துத்தான், அவனுடைய கடமைக் கோட்பாடும் அமைகிறது. இது தான் மக்கள் ஆட்சி முறையின் அடிப்படை அமைப்புத் தத்துவம். இந்த அடிப்படையை மறந்து, அரசாங்கத்தை நடத்தும் - எம்முறையிலாயினும்-பொறுப் பேற்றுள்ள வர்கள், நடந்து கொள்வார்களானால், அதன் பலனாக ஏற்படும் சீரழிவுக்குட்பட்ட மக்கள், வேதனையைப் போக்கிக்கொள்ள, சில பல நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டிய நினைப்பை-தாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்-பெற்றுவிடுகிறார்கள். நிலை கொள்ளாத தண்ணீரில் தள்ளப்பட்ட ஒருவன், ஒழுங்காக நீந்தத் தெரிந்தாலும் தெரியாமல் போனாலும், உயிர் பிழைத்துக் கரைசேர, கைகால்களை உதைத்துக் கொள்ளுவது இயல்புதானே?

ஒரு நேர்மையான அரசாங்கம், மக்களுக்குச் செய்து தீரவேண்டிய கடமைகளை உதறித் தள்ளிவிட்டு, மக்களை மட்டும், அரசாங்கத்தைப் பலப்படுத்தும் பணியில் அவர்களுக்குள்ள கடமையை முன்தள்ளிப் பேசுவது, மாசடைந்துள்ள மனத்தின் மதிப்பற்ற வார்த்தைகள் என்றுதான் கூறவேண்டும். மக்கள் நலம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டிருக்கும், அரசாங்கத்தை நடத்தும் எந்த நபரும், தான் தவறிய கடமையை, தான் மக்களுக்கு ஆற்றவேண்டிய பணியை, மறந்து மன்னித்துவிட்டு, தங்கள் தங்கள் கடமையை மட்டும் செய்யவேண்டுமென்று மக்களிடம் எதிர்ப்பார்ப்பது கூடாது - நடவாது!

தங்களுடைய நோக்கத்தை மக்கள் தெரிந்து கொள்ளாமல் இருக்க அல்லது தங்களின் தகுதியற்ற நிலையை மக்கள் உணர்ந்துகொள்ளாமல் இருக்க, வேறு துறையில் மக்களின் கவனத்தைத் திருப்ப முயலுவர். இந்த அரிச்சுவடியை அறிந்து கொள்ளாதவருக்கு அரசியல் உலகில் இடம் கிடையாது.

இன்று, நாட்டின் நிலை என்ன? முக்கியமான உணவுப் பொருளும், ஏழை மக்களால் வாங்கக்கூடிய விலையில் இருக்கவில்லை. அந்த அளவிற்கு, அவர்கள் வருமானம் உயரவில்லை. இந்த வகையில், எதிர்காலத்தில் நம்பிக்கையுடன் இருப்பதற்கும் ஏற்பாடில்லை. ஆனால் இதே நேரத்தில், மக்களின் தேவையை மறந்து பணம் பண்ணுவதில் சிலர் முனைதிருக்கிறார்கள். ஏற்கனவே, இத்துறையில் பணம் படைத்தவர்களின் பேராசைக்கு பல லட்சம் மக்கள் பிணமாயினர். இது நடந்தது வெள்ளையர் ஆட்சியில். ஆனால் பணம் பண்ணினவர்கள், 'நம்மவர்கள்!' கள்ளமார்க்கெட்காரர்களைத் தூக்கிலிடவேண்டும், என்று பேசினார் பண்டிதர் அன்று ஒருநாள், இழந்த நம்பிக்கையை மக்கள் பெற்றனர். மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்தான் பண்டிதர் போன்றார் என்ற நிலையும் ஏற்பட்டது. இது நீடித்து நிலைத்து இருக்க வில்லை. குருதிபாய்கிறது-தூக்கு மேடைகளில் அல்ல-நடுத்தெருக்களில்! கள்ள மார்க்கெட் கழுகுகளின் இரத்த மல்ல-துன்பம் துடைக்க வேண்டுமென்று கேட்பவர்களின் இரத்தம்! இவ்வளவும் நடப்பது பிறர் ஆட்சியில் அல்ல-சுயாட்சியில்!

"இன்று தேசமுள்ள நிலைமையில் உணவுப் பொருள் களைப் பதுக்கிவைப்பது அல்லது அது பொதுஜனங் களுக்குக் கிடைக்காமல் செய்வது, கொள்ளை லாபம் அடிப்பது போன்ற காரியங்களானவை மகாபாபமான

காரியங்கள் இதற்கு கடவுள் கட்டாயம் தண்டனை கொடுப்பார்."

இது 20-12-48 'தினமணி'யில் இருக்கிறது. இவ்வாறு கூறினது, சமயாச்சாரியல்ல! சதுர்மறை வேதியர் அல்ல! தத்துவசாஸ்திரி அல்ல! சர்வாதிகாரம் பெற்றுள்ள நிலையிலிருக்கும், காய்ந்தவர்களைக் கனல்கக்கும் கண்களைக்கொண்டு உருட்டிப்பார்க்கும், ஊராளவந்த 'இரும்பு மனிதர்' பட்டேல் பேசுகிறார் இவ்வாறு.

சமஸ்தானாதிபதிகளிடத்திலா-அவர்கள்தான் இவருக்கு சாரத்யம் செய்கிறார்களே-இல்லை! பிர்லா பஜாஜ்களிடத்திலா-அவர்கள்தான் இவருக்கு பின்பலமாயிற்றே-இல்லை! பின் எவர் இடத்தில்? பிளவுபடுத்தப் பட்டு, வாழ்விழந்து கிடக்கும் தொழிலா ளர்களிடத்தில், பட்டேல் பரமனைக் கூவி அழைக்கிறார், பொருள்களைப் பதுக்கும் பாதகர்களை தண்டிக்க! இவருக்கு இருக்கும் அதிகாரம், படைபலம், பதுக்கல் பாவிகளின் பக்கம்கூட எட்டிப் பார்க்க அஞ்சுகிறது போலும்! பரமனுக்குச் சமர்ப்பிக்கிறார், கைதேர்ந்த புரோகிதர் போல்!

தொழிலாளர் கிளர்ச்சியா, இதோ தடையுத்தரவு இருக்கிறது; எங்களுக்கு எதிரான கிளர்ச்சியா, இதோ இந்தியன் பினல்கோடில் ஏராளமான விதிகள் இருக்கின்றன-எச்சரிக்கை; இன்னோரன்னவற்றிற் கெல்லாம்; தாங்கமுடியாத வாழ்க்கைச் சுமையால் எடுத்துக் கொள்ளப்படும் செயல்களுக்கெல்லாம், தன்னம்பிக்கை யோடு, ஒரு துளியும் தயங்காமல், தயவு தாட்சண்யம் காட்டாமல், படையை ஏவிப் பாட்டாளியின் பசியைப் பறக்கடிக்கும் பட்டேல், அது சமயம் பரமனை மறந்துவிடுகிறார்-பரமார்த்திகத்தைத் துறந்துவிடுகிறார்! பாட்டாளியைத் தண்டிக்கத்தான் பட்டேலுக்கு முடிகிறது!

மக்களைப் பிணமாக்கிப் பணம் பண்ணும் பணமூட்டை களைத் தண்டிக்க ஒரு பரமன் தேவைப்படுகிறது!

கருத்தில் உரமும் கையில் அதிகாரமும் இல்லாத கோழையா பட்டேல்? கள்ளமார்க்கெட்காரரைத் தண்டிக்கக் கடவுளை ஏன் அழைக்கிறார்? ஊராளும் உத்தியோகம் பெற்றிருள்ளவர் பட்டேல். தமக்குத்தான், அந்தத் தகுதி உண்டு என்று தலைவீக்கம் கொண்டிருப்பவர். அவர் ஆதரவற்றவர்களை-அனாதைகளை, தேவைகளை வெளியிடும் குற்றத்திற்காக, தண்டிக்கத் தனக்குத் தகுதியும் கடமையும் இருப்பதாக எண்ணிக்கொண்டிருப்பவர். இதனைச் செயலிலே காட்டிக்கொண்டு இருப்பவர். இவர் போக்கினால், பாதகமடைந்தவர்கள், 'பட்டேலை கடவுள் தண்டிப்பார்' என்று, காலத்துக்குக் காத்திருக்க மாட்டார்கள்.

மந்திரவாதி-புரோகிதன்-கொடுங்கோலன்-மக்களை மயக்கக் கூறி வந்ததும், தன்னம்பிக்கையற்ற-கையாலாகா தவர்கள் சில நிமிஷ ஆறுதலுக்காக எதிர்க்காமல் ஏற்றுக் கொண்டதும், முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக இருந்ததுமான ஒரு சொல்லுக்கு, ஊராள வந்த பட்டேல் உயிர் தருகிறார்! பட்டேலின் போக்கை- கல்முள் நிறைந்த பாதையை-கடவுள் தண்டிப்பார்! என்னும் சொல்லின் துணைகொண்டு, மக்களின் கண்களுக்குப் படாமல் மறைத்துவைக்க முடியாது. மக்கள் சக்திக்கு 'கடவுள் தண்டிப்பார்' எனும் வார்த்தை இனியும் கேடயமாக இருக்காது!

❋ ❋ ❋

6. கனவில் கீரதர்

ஆனந்தத் தாண்டவமாடிக் கொண்டிருந்த, பரமசிவனாரின், செவியில், நாரதரின் தம்பூரும் நந்தியின் மிருதகங்மும் ஒலித்த சப்தமும், பக்தகோடிகள், அரகரா-அற்புதம் - என்று பஜிக்கும் சப்தமும், "ஆனந்த நடனமாடினார்!"- என்று பாடும் தேவமாதரின், கானமும் கேட்டுக்கொண்டிருந்த நிலையில் யாரோ விம்மி விம்மி அழும் சப்தமும் கேட்டது - ஐயன், ஆனந்தத் தாண்டவத்தை நிறுத்திவிட்டார்-யார் அழுகிறார்கள்-ஏன் இந்த விம்மும் குரல்? - என்று ஆச்சரியமடைந்தார்.

மானாட மழுவாட மங்கை சிவகாமி ஆட, ஆடிக் கொண்டிருந்த மகாதேவன், திடீரெனத் தமது தாண்டவத்தை நிறுத்திவிடக் கண்ட தேவர்களும் பூதகணங் களும், நந்தியும் நாரதரும், பயந்தனர்-ஏன் என்று கேட்கவும் அஞ்சியவர்களாய், கைலையை விட்டு நழுவினர்.

கைலைநாதன், மீண்டும், விம்மும் சத்தம் தமது செவியில் வீழ்கிறதா, என்று உற்றுக் கேட்டார்-ஆம் விம்மும் குரல் கேட்கிறது-பெண் குரல்! பெம்மான், திடுக்கிட்டுப் போனார்-குரல், தமக்குப் பழக்கமானதாகத் தெரியவே! சுற்றும் முற்றும் பார்த்தார்-மேலும் கீழும் பார்த்தார், ஒரு உருவமும் தென்படவில்லை-ஆனால் அழுகுரல் மட்டும் கேட்டது.

இதென்ன ஆச்சரியம் என்று கூறிய வண்ணம் உட்கார்ந்தார், புலித்தோல் ஆசனத்தின் மீது - சோகம் கொண்டு, கரத்தைச் சிரத்தருகே கொண்டு சென்றார். "போதும் உபசாரம்!" என்று கூறியபடி, கங்காதேவி, அவர் கரத்தைத் தள்ளிவிடவே, ஐயன், "ஓஹோ! மாதரசி! மறந்தே

போனேன்! கங்காதேவி! கதறியது நீயா? காரணம் என்ன? எந்தக் கயவனால், என்ன கேடு நேரிட்டது, கூறு? மனக்கஷ்டமடைய உமக்கு என்ன காரணம் கிடைத்தது! உமையவளே, என் உடலிற் பாதி மட்டுமே பெற முடிந்தது- நீயோ, என் உச்சியிலே உறைவிடம் பெற்றாய்! உன்நிலை இவ்வளவு உன்னதமாக இருக்கும் போது, நீ உள்ளம் நொந்து கிடக்கக் காரணம் என்ன? உலகோர், உன் மகிமையைப் போற்றிப் புகழக் கேட்டுப் புளகாங்கித மடைவது முறையாயிருக்க, புனிதவதி! நீ புலம்பக் காரணம் என்ன?" என்று பரமசிவனார் பரிவுடன் கேட்கலானார்.

கங்கா தேவியார், கைலைவாசனின் ஜடாபாரத்தை விட்டுக் கீழே இறங்கி வந்து, ஐயனின் அருகே அமர்ந்து கொண்டு, கண்களைத் துடைத்தபடியே பேசலானார்- கோபமும் சோகமும் கலந்த குரலில்.

"என்னை இந்த கதிக்கு ஆளாக விட்டுவிட்டு நீர் ஆனந்தத் தாண்டவமாடுகிறீரோ? ஆண்களின் சுபாவமே இப்படித்தானே? அழுத கண்களுடன் ஆரணங்குகள் இருந்த போதிலும் ஆடல் பாடலில், விருந்து வைபவத்தில் காலங் கழித்துவரும் கல்மனம் படைத்தவர்கள்தானே ஆண்கள்."

"கங்கா தேவி! மற்ற ஆடவர்களைப் போலவே என்னையும் எண்ணிக் கொண்டாயா? பெண் குலத்தைப் பழிக்கும் பேயன் அல்லவே நான். பெண்பாவாய்!ஏன் வீணாக மனதைக் குழப்பிக்கொள்கிறாய்? உன் மனக் கஷ்டத்திற்கு என்னதான் காரணம்? எந்தத் தீயவன் என்ன தீங்கிழைத்தான்? தேவி! தெரிவி இப்பொழுது! திரிபுரம் எரித்த எனக்கு அத்தீயவன் எம்மாத்திரம்."

"போதும் போதும் உங்கள் வீரப் பிரதாபம். யார் என்னை என்ன நிந்தித்தாலும் உமக்கென்ன. இவளுக்காகப் பரிந்துபேச யார் இருக்கிறார்கள் என்ற தைரியத்தில்

யாரார்ரோ என்னை இழித்தும் பழித்தும் பேசுகிறார்கள். என் கதி இப்படி இருக்கிறது, நீங்களோ ஆனந்தத் தாண்டவமாடுகிறீர்."

"ஆஹா, உன்னையா இழித்தும் பழித்தும் பேசினார்கள்? எங்கே இருக்கிறது அந்த நாஸ்தீகக் கும்பல்? கூப்பிடு ரிஷபத்தை! கொண்டுவா சூலாயுதத்தை! ஒரு நொடியில் துவம்சம் செய்துவிட்டு வருகிறேன்."

"நாஸ்தீக கும்பல் என்னைப்பற்றி இழித்துப் பேசினால், நானே அவர்களைச் சம்ஹரித்து விட்டிருக்க மாட்டேனா!"

"அங்ஙனமாயின், ஆஸ்தீகச் சிகாமணிகளா, உன்னை இழிவாகப் பேசினர்?"

"ஆமாம்-அதுதான், என் மனதைக் குழப்புகிறது."

"மாதர் திலகமே! என்ன கூறினர்-ஆஸ்திகரா யிருந்தால் என்ன-நாஸ்தீகராயின் என்ன-உன்னை நிந்தித்தவர், எவராயினும், என் விரோதிகளே ஆகின்றனர். யார் அவர்கள், கூறு?"

"தங்கள் ஜடாமுடியிலே தங்கும் தவப்பயன் பெற்ற, எனக்குள்ள மகிமை, இந்த ஈரேழு பதினாலு லோகத்திலும், போற்றப்பட்டு வருவதாகத்தானே, தாங்கள் கூறுகிறீர்கள்-தேவரும் கூறுகின்றனர்..."

"அதிலென்ன சந்தேகம்! மாந்தரும், ஒப்புக்கொண்ட உண்மையல்லவா அது. உன் பெருமையை அறியாதார் யார் உளர்? உன் புனிதத் தன்மையைப் புகழாதார் யார்? பாசுரங்கள் பல உள்ளன, உன் பெருமையைப் பாராட்ட."

"பழங் கதைகள் கூடத்தான் உள்ளன-பகீரதன் என்னைக் கொண்டு வரச் செய்த முயற்சி, என்னால் ஏற்பட்ட அற்புதம் ஆகியவைகளைப் பற்றி....."

"ஆமாம்-சகல பாபங்களையும் போக்கிக்கொள்ள கங்கையில் ஒருமுறை தலை முழுகினால் போதும். பாபம் கரைந்து போகும்-புண்யம் வந்து சேரும்-சர்வரோகமும் தீர்ந்துபோகும்-சௌபாக்யம் வந்து சேரும், என்று உன் பெருமையைப் பாரோர் புகழத்தானே செய்கிறார்கள். பரத கண்டத்து மக்கள், எந்தக் கோடியில் உள்ளவர்களாயினும், உன்னைத் தரிசிக்க வருகிறார்களே! கங்கா தீர்த்தம், மகா மகத்துவம் வாய்ந்தது என்று கூறுவார்களே! இதிலே, என்ன சந்தேகம்?"

"இவ்வளவு மகிமையும், பொய்-கங்கா தீர்த்தம் புனிதமானதல்ல, கங்கையிலே தலை மூழ்கினால், பாபம் ஒழிந்துபோகும், என்று கூறுவது தவறு, என்று கூறுகிறார்கள். என் மகிமையைப் பற்றி எவ்வளவோ சுவடிகள் இருந்து என்ன பயன்? கங்கா தீர்த்தத்துக்கு, 'சகலரோகங்களையும்' தீர்த்துவிடும் சக்திகூட இல்லை, என்று கூறிவிட்டார்கள்."

"ஆஹா! இவ்வளவு துணிவுடன் பேசினரா..."

"ஏசினர், என்றுதானே பொருள்!"

"ஆமாம்-உன் மகிமையை மறுப்பவர், மாபாவிகளே! என்ன கூறினர்?"

"அவர்கள், ஆராய்ச்சி செய்து பார்த்தார்களாம்-பாமரர் நம்புவதுபோல, கங்கா தீர்த்தத்திலே, ஒருவிதமான மகிமையும் கிடையாதாம். கங்கையிலே நீராடினால், நோய்கள் தீர்ந்துபோகும், ஆரோக்கியம் வரும் என்று கூறுவதுகூட, ஆராய்ச்சி செய்து பார்த்ததில், உண்மை அல்ல என்று தெரிந்துவிட்டதாம்."

"உன் மகிமையை, புனிதத் தன்மையை மறுப்பது மட்டுமல்ல, மாபாவிகள்! நீ, உற்பத்தியாகும் இடம், உன்னதமான இமயம், என்பதையும் மறந்து, கேவலம்

நோய்களைத் தீர்க்கும் அளவுக்குக்கூட உனக்கு வல்லமை இல்லை என்று கூறிவிட்டார்கள்."

"ஆமாம்-அது கேட்டது முதல், அடியாளுக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. பலபேர் முன்னிலையில் பச்சையாக இதுபோல் பேசினர்-எவ்வளவு பேர் பரிகசித்தனரோ, தெரியவில்லை; எவ்வளவோ, யுகயுகமாக இருந்துவந்த பெருமையை ஒரு நொடியிலே, அழித்து விட்டனர்."

"காலக்கோளாறு, இது, கங்கா! கங்கை என் ஜடாமுடியில் இருப்பவள் என்ற உண்மையைப் 'புராணம்' என்று, தள்ளிவிட்டாலும் கூட, கங்கா தீர்த்தம், விசேஷமானது, மலையிலிருந்து கிளம்பி, மூலிகைகளின் சத்துகள் நிரம்பி, உடலுக்கு வலுவூட்டும் தன்மையைப் பெற்றிருக்கிறது, என்ற முறையிலேயாவது, உன்னை பாராட்டக் கூடாதா? என்ன துணிவு! அந்த மகிமையும் கிடையாது என்றா கூறிவிட்டனர்."

"ஆமாம்! இதோ பாருங்கள்!!"

இவ்விதம் உரையாடல், பரமசிவனாருக்கும் கங்கா தேவியாருக்கும் நடைபெற்றது. கங்கா தேவியார், மார்ச் 17ந் தேதிய 'இந்து' இதழிலே இருந்து ஒரு செய்தியைப் படித்துக் காட்டினார்.

"கங்கைத் தீர்த்தத்துக்கு, சகலரோகங்களையும் குணமாக்கும் சக்தி இருப்பதாகப் பாமரர் நம்புவதை, விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த ஆற்றின் தண்ணீரை, விஞ்ஞான முறைப்படி, பரீட்சித்துப் பார்க்கப்பட்டது-1917-1923-ம் ஆண்டுகளில், பீகார் மாகாண சுகாதார இலாக்கா இந்த ஆராய்ச்சியை நடத்திற்று, அந்த ஆராய்ச்சிக்குப் பிறகு, கங்கா **நதித்தண்ணீர்** நோய்களைத் தீர்க்கும் சக்தி பெற்றது அல்ல என்ற உண்மை விளங்கிற்று,

என்று இன்று டில்லிபார்லிமெண்டில், சுகாதார மந்திரி, ராஜகுமாரி அம்ருத்கௌரி கூறினார்கள்."

இதனைக் கேட்ட கைலைநாதன், கோபமடைந்தார் - பிறகு, ஓரளவு சாந்தி அடைந்து, சமர்த்தாகப் பேசக்கருதி "கங்கா! ராஜகுமாரி சொன்னது கேட்டு, நாம் வீணாக வருத்தப்படக்கூடாது. அவர் சொன்னது, நோய் தீர்க்கும் சக்தி உனக்கு இல்லை என்றுதானே தவிர, பாபத்தைப் போக்கும் சக்தி கிடையாது என்று கூறவில்லையே-ஏன் அழவேண்டும், நீ!" என்றார்.

கங்காதேவி, முன்னிலும் அதிகமான கோபம் கொண்டு, "பேஷ்! அழுகிற குழந்தைக்கு வாழைப்பழம் தருகிற முறையிலே பேசுகிறீர் போலும்! கேவலம், நோய்களைத்தீர்க்கவே, எனக்கு சக்திகிடையாது என்று கூறிவிட்டபிறகு, பாபத்தைப் போக்கும் மகிமை எனக்கு இருப்பதாக, யார், இனி நம்புவார்கள்? பாமரர்கள், பல காலமாக நம்பி வந்ததை, பாழாய்ப்போன விஞ்ஞானம் அழித்துக்கொண்டு வருகிறது. நோய் போக்கும் நீரல்ல-பாபம் போக்கும் தீர்த்தமல்ல என்று கூறத் துணிவு கொண்டுவிட்டனர்-பாராள வந்தவர்கள். ஆஸ்தீகர்கள் என்றே கூறிக் கொள்கின்றனர்!"

"ஆமாம்-அரேராம்! ஜேசங்கர்! - என்றெல்லாம், பூஜிக்கிறார்கள்..."

"பூஜிக்கிறார்கள்-அதேபோது, என் மகிமை ஒரு கட்டுக்கதை, பாமரனின் மனமயக்கம், விஞ்ஞானத்தின் முன்பு நிலைக்கமுடியாதது, என்றும் நிந்திக்கிறார்கள்."

"ஆமாம்-சிக்கலாகத்தான் இருக்கிறது"

"அதுவும், டில்லி பார்லிமெண்டில், ஒரு மாது கூறுவதா, இப்படி!..."

"பாரேன் அக்ரமத்தை! ஒரு ஆரணங்கு கூறுவதா?"

"மூதாட்டி-சீமாட்டியுங்கூட...."

"இப்படிப்பட்டவர்கள் மந்திரிகளாக உள்ளனர்."

"மந்திரிகள் இவ்விதம் பேசினால், மக்கள் எவ்விதம் பேசுவர்!"

"கேவலமாகத்தான் பேசுவர்! உன் கங்கா தீர்த்தத்தின் யோக்கியதை தெரியுமா! அதைப் பரிசுத்தமானது என்று பெருமையாகப் பேசிக்கொண்டாயே, மந்திரி வேலை பார்க்கும் அம்மையே கூறிவிட்டார்கள், அப்படி ஒரு யோக்யதையும் கங்கா தீர்த்தத்துக்குக் கிடையாது என்று. இந்த உண்மை தெரியாமல். கங்கா ஜலம், கங்கா ஜலம், என்று நாம் இதுவரை காக்காய்க் கூச்சல் போட்டுக் கொண்டிருந்துவிட்டோம், என்றெல்லாம் கேலியாகத்தான் பேசுவார்கள்."

"என் வயிறு எரியாதா? மனம் பதறாதா?"

"ஆமாம்-ஆனால், ராட்சதப்பயல்களோ, நாத்தீகக் கும்பலோ, இவ்விதம் உன்னைப்பற்றிப் பேசினால், ஒரு நொடியிலே, துவம்சம் செய்துவிடுவேன்-பேசியிருப்ப வர்கள், ஆவதிகர்-ஆராய்ச்சிக்காரர்-விஞ்ஞானி-என்று கூறுகிறாயே!"

"இருந்தால் என்ன! விஞ்ஞானத்தின் மீது போர் தொடுத்து, அதனை ஒழித்துவிடவேண்டும்"-என்று கங்காதேவியார், கூறிவிடவே, கைலைநாதன் செய்யத்தான் வேண்டும்-கங்கைக்கு வந்த கதி, நாளைக்கு கைலைக்கும் வரும். என்று கூறிக்கொண்டே, போர்க்கோலம் பூண்டு கொள்ளலானார்.

"விஞ்ஞானத்தின் மீதாபடை எடுக்கப்போகிறீர்?" என்று கேட்டுக் கொண்டே கீரதர் வந்து சேர்ந்தார்.

ஆமாம்-என்றார் ஐயன்-அம்மையும் 'ஆம்' என்றார்.

"சிரமமான காரியமாயிற்றே! தாங்கள் ரிஷபவாகனம் ஏறிச்செல்லு முன்பு, விஞ்ஞானி விமான மேறிச் செல்வானே! சூலாயுதத்தை வீசுவதற்குக் குறிபார்க்கு முன்பு, விஞ்ஞானி, அணுகுண்டை வீசிவிடுவானே!-" என்று கீரதர் கூறினார்.

☆ ☆ ☆

என்னடா தம்பீ! கீரதர்-கீரதர்-என்று கூவினாய்-என்று கேட்டுக் கொண்டே, என் அண்ணன் என்னைத் தட்டி எழுப்பினார். கண்டது கனவு என்று அறிந்தேன்-பக்கத்திலே இருந்த பத்திரிகையிலே, கங்கைத் தீர்த்தம் கவைக்கு உதவாதது-மகத்துவம் இருப்பதாக மக்கள் நம்புகிறார்கள், ஆனால் அப்படி ஒன்றும் மகத்துவம் இல்லை-இது விஞ்ஞான ஆராய்ச்சியின் தீர்ப்பு, என்று, டில்லி பார்லிமெண்டில் சுகாதார மந்திரி ராஜகுமாரி அம்மையார், பேசிய 'செய்தி' காணப்பட்டது!

❋ ❋ ❋

7. வள்ளி நாயகியின் கோபம்

வள்ளி! இப்படி அடிக்கடி கோபித்துக்கொண்டால் என்ன தான் செய்வது. நான், உன் மனம் கோணும்படி, நடந்து கொண்டதுண்டா? ஏன், முகவாட்டம்? எவ்வளவோ, தொல்லைகளை நான் பட்ட வண்ணம் இருக்க நேரிடுகிறது. திருப்புகழ் பாடிப்பாடி அழைப்பவரை நாடிச்சென்று, அவர்கள் நாவில் உறையும் வார்த்தைகளுக்கும் நெஞ்சிலுள்ள எண்ணங்களுக்கும் பொறுத்தமிருக்கிறதா என்று கண்டறியவேண்டி பாடுபட நேரிடுகிறது. இனிய குரலிலே பாடுகிறார்கள்! என்னப்பனே! முருகா! என்று உருகும்போது, ஒரு விநாடி நானே மயங்கி விடுகிறேன். கூர்ந்து பார்க்கும் போதுதான், அந்த உருக்கமான குரல் எனக்கல்ல, பொன்னுருக்கு மேனியா ளாகிய ஒரு பாவைக்கு என்பது புரிகிறது! இப்படி பரீட்சை பலநடத்தி வரவேண்டி இருக்கிறது. அலுவலை முடித்துக்கொண்டு அலுத்து வீடு திரும்பினால் நீ, உன் அழகை மறைத்துக்கொண்டு என்மீது அனலை வீசுகிறாய். இது ஏன் என்று கேட்டாலோ புனலைச் சொரிகிறாய். வள்ளி! உள்ளதைச் சொல்லு! கள்ளத்தனமாக உந்தனை நான் அன்று காணவந்தேனே தினைப்புனந்தன்னில். அன்று இருந்த அன்பு, ஏன் இப்படிக் குறைகிறது? என்று ஆறுமுகனார், கண்களைத் துடைத்த வண்ணம் இருந்த, வள்ளிநாயகியைக் கேட்டார்.

"என் துக்கம் என்னோடு இருக்கட்டும். நீர் ஏன் வீணாக வேதனைப்படவேண்டும். உமக்கு என்னைப் பற்றி என்ன அக்கறை வாழுகிறது?" என்று, விம்மி விம்மிப் பேசலானாள் வள்ளிநாயகி.

"கையிலே அல்ல வள்ளி! வேல், இப்போது என் நெஞ்சிலே பாய்ந்து விட்டது" என்று சற்றுக் கோபமாகப் பேசினார் கந்தன்.

"விஷம் பாய்ந்தது! அப்பாவுக்கு!" என்று, கோபத்தினூடே கொஞ்சம் கேலியைக் கலந்து தந்தார் அம்மையார்.

"குறும்பு, வள்ளி! உனக்கு, இதோபார், என்ன குறை மனதில்" என்று கொஞ்சுமொழி பேசலானார் முருகன்.

"சொல்ல வேண்டாமென்றால் முடியவில்லை. பூலோகத்திலே, அதிலும், குன்றுதோறும் உமக்குக் கோயில் கட்டிக் கொண்டாடும் தமிழ் நாட்டிலே, நாத்தீகம் நாற்றமடிக்கிறதே, நீர், கவலையற்று இருக்கிறீரே, சரியா?" என்று வள்ளிநாயகி விளக்கமுரைக்க, வேலவன், அம்மையை நோக்கி அழகான ஓர் சிரிப்பருளிவிட்டு "ஆசைக்கினியவளே! நீ பேசுவது அந்த ஈரோட்டுப் பாசறையினரையோ!" என்று கேட்டார். "அல்ல! அல்ல! அவர்களை அல்ல! அவர்கள் ஆறுமுகமும் வேண்டாம், மும்முகமும் வேண்டாம், ஆண்டவன், அன்பர் நெஞ்சிலுறையட்டும் என்று கூறுகிறார்கள். அவர்களை அல்ல நான் கூறுவது-ஆறுமுகம்-முருகா-வேலவா-பழனியப்பா-என்று பரம பக்தர்கள்போல, உமது புகழைப் பாடி, காவடி தூக்கி ஆடுகிறார்களே, அவர்கள்தானே, தமிழகத்திலே பெரும்பான்மையினர், அவர்களைத்தான் கூறுகிறேன்-அவர்கள் உம்மைப் போற்றுவதும் புகழ்வதும் வெறும் சூது-பொய்-முகஸ்துதி-ஏமாந்து போகிறீர்! அவர்கள், உண்மையிலே, உம்மை, உமது நடைமுறையைக் கேலி செய்கிறார்கள்- கண்டிக்கிறார்கள்" என்றாள் நாயகி. வேலவன் உண்மையாகவே கோபமடைந்து, "ஆஹா! சூரபதுமன் முதலானோர் தோற்றோடினதை நீ அறியாயோ, பெண்பாவாய்! நம்மை நிந்திக்கவும், நமது

வாழ்க்கை முறையினைக் கண்டிக்கவும் முற்பட்ட மூர்க்கர் யார். எத்திக்கு உள்ளனர் கூறு-எறிகிறேன் வேலாயுதத்தை" என்று கூற, வள்ளி அம்மை சற்று களித்து "இப்படி நானாகச் சொன்னால் தானே உமக்கு விஷயம் புரிகிறது. இதோ பாருங்கள் நாதா! தாங்கள் என்னைக்கண்டு, காதல் கொண்டு.................." என்று விவரிக்கும்போது, வள்ளிநாயகன் இடைமறித்து, "வள்ளி! முழு உண்மைபேசு, நான் காதல் கொண்டதாகக் கூறுகிறாயே- உன் நிலையைக் கூறாமல்! இருவரும் கண்டோம் காதலித்தோம், என்று கூறு... என்று திருத்த, அம்மை அதனை ஒரு புன்னகையால் அங்கீகரித்துக்கொண்டு, மேலால் பேசலானார்."

"என்னைத் தாங்கள் தங்கள் தேவியாக ஏற்றுக் கொண்டீர். முதலில் தேவயானை-பிறகு நான். அல்லவா? இந்த இருதார மணத்தை, நீர் இடைவிடாமல் மயிலேறி வலம்வரும் இன்பத் தமிழ் நாட்டினர், கேவலம் அக்ரமம், அநீதி, என்று பேசி, ஏசி, இருதார மணம் செய்து கொள்வோர், கடின சித்தமுடையவர்கள், பெண்களின் இருதயத்தைப் பிளப்பவர்கள், என்றெல்லாம் கடிந்துரைத்து, ஒரு மனைவி உயிருடனிருக்கும்போது வேறோர் பெண்ணைக் கலியாணம் செய்வதைத் தடுத்தாலொழிய பெண்களின் வாழ்வு வதைபடும் என்று வாதாடி இருதார மணத்தைஇனி அனுமதிக்கப் போவதில்லை, சட்டம் செய்துவிடுகிறோம் என்று கூறி, சட்டசபையில் இதுபற்றிக் கண்டவர் கண்டபடி பேசி ஏசி, கடைசியில் ஏகதாரம்தான் சட்டப்படி செல்லும், ஏதேனும், தக்க காரணம் காட்டி முதல் மனைவியை சட்டப்படி விலக்கினால் மட்டுமே, வேறு ஓர் மங்கையைக் கலியாணம் செய்து கொள்ளலாம், என்று சட்டமே செய்துவிட்டனர்" என்றார் வள்ளிம்மை.

"சட்டமே செய்து விட்டார்களா? தமிழ் நாட்டிலா?" என்று கேட்டார் முருகர்.

"ஆமாம், ஆமாம்! அழகுக்குத் தெய்வம், தமிழுக்குத் தெய்வம் என்று உம்மை வழிபடுவதாகக் கூறும், அதே தமிழ் நாட்டில்தான், உம்முடைய வாழ்க்கை முறையையே குடும்ப அமைப்பையே, காதற் திருவிளையாடலையே கண்டிக்கும் போக்கிலே சட்டம் செய்துவிட்டார்கள். கேட்டது முதல் எனக்குப் பெரும் விசாரம். தேவயானை வீட்டிலே திருநாளாம்! நாதா! தேவயானை இருக்க என்னை நாயகியாகத் தாங்கள் கொண்டது, கேலிக்குரியதாக, சட்டப்படி முறையற்றதாக, உமது பக்தர்களாலேயே கருதப்பட்டு, பேசப்பட்டால், என் மனம் வேதனை அடையாமல் இருக்குமா? உமது பக்தர்களுக்கு இது அடுக்குமா? முறையா? இருதாரம் கூடாது என்று சட்டம் இப்போது! இது நிலைத்து விட்டால் அடுத்த தலை முறையினர், 'இரண்டு பெண்டாட்டிக்காரர்கள்' என்று முன்னவர்களைக் கேலி பேசுவரே! பிறகு இருதாரமுடைய உமக்கும் திருப்புகழ் குறையுமே! ஏனோ தாங்கள் இவை பற்றி யோசியாமல், மயிலுண்டு மலையுண்டு என்று இருக்கிறீர்?" என்று அம்மை விளக்கவே ஐயன், உண்மையாகவே கோபம்கொண்டு, "இருதாரம் கூடாது என்று சட்டம் செய்தவர்கள், உண்மையில் என் வாழ்க்கை முறையை இகழ்ந்தவர்கள் என்றுதான் பொருள். அவர்களைச் சும்மா விடக்கூடாது, கூப்பிடு மயிலை! கூறு, தமிழகத்திலா? இந்த அதர்மச் செயல் நடந்தது! வள்ளி! கோபிக்காதே, மறந்துவிட்டேன், யார் அங்கே மந்திரி? அங்கு அடிக்கடி மாறிவிடுவதால் கவனம் வைப்பது கஷ்டமாகிறது" என்று கேட்க, "சட்டம் இயற்றிய தமிழகத்துக்கு இப்போது முதல் மந்திரி ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்" என்றார். "ஓமந்தூராரா" அவர் நமது பக்தராயிற்றே! என்றார் முருகன்! "பக்தன் செய்கின்ற செயலா இது! மற்றவர்கள் ஏதேதோ காரணம் காட்டி, இருதாரம் கூடாது என்று வாதாடினாலும், அவர்

உண்மையாகவே, உமது பக்தராக இருந்தால் உன்னப்பன் முருகனே இருதாரம் கொண்டார் என்று எடுத்துக் காட்டித் தடுத்திருக்க மாட்டாரா, சட்டத்தை" என்று அம்மை கூறிட, வேலவன், "ஆமாம்! என் பக்தன் போல் வேடமிட்டு, என்வாழ்க்கை முறையையே கேவலமாக்கும் சட்டம் இயற்றிய ஓமந்தூராரை நேரிலேயே சென்று கேட்கிறேன்" என்று கூறிவிட்டு மயிலேறி மறந்தார்.

வள்ளி அம்மை, ஆனந்தமாக, பலகணி அருகே சென்று தெய்வானையின் மாளிகையை நோக்கிய வண்ணம், "குதிக்காதே தேவா! குமரன் போயிருக்கிறார் குறும்புச் சட்டத்தை நொறுக்க" என்று மெள்ளக் கூறியபடி இருந்தார்.

சிறிது நேரத்திற்கெல்லாம், மயிலேறும் பெருமாள், வந்தார், முகத்திலே வாட்டத்துடன்.

வள்ளி கோபக் குறியுடனேயே வரவேற்று, "ஏன்!உமது வாதம் ஏதும் பலன்தரவில்லையோ?" என்று கேட்க, முருகன் "வாதமா! ஓமந்தூரார் பேசவே இல்லையே என்னிடம்" என்று கூற, "ஏன்! பேசவே இல்லையா! இப்படி உம்மை அவமதிப்பவரை பக்தர் என்று நம்புகிறீரே! ஏன் பேசவில்லை?" என்று கேட்டார். முருகன் வேலாயுதத்தை ஒரு புறம் வீசிவிட்டு, மயிலை விரட்டியபடி, "கிருத்திகையாம் இன்று - கிருத்திகையன்று மௌன விரதம் இருக்கும் வழக்கமாம் ஓமந்தூரார். அதனால்தான் பேசவில்லை"-என்றார். வள்ளியின் கோபம் கரை புரண்ட வெள்ளமாயிற்று-நான், இந்தச் சமயம் இங்கிருத்தல் ஆகாது என்று பறந்து சென்றேன் பக்கத்துச் சோலைக்கு.

❋ ❋ ❋

8. அரோகரா! கோவிந்தா!!

இந்த வேடிக்கையை, என்ன காரணத்தாலோ, நாமும், சரியாகக் கவனித்ததில்லை, வைதீக நண்பர்களும் கவனித்தாகத் தெரியவில்லை; நாள் தவறாமல் இந்த வேடிக்கை என்னவோ நடைபெற்றுக்கொண்டேதான் இருக்கிறது.

☆ ☆ ☆

வேடிக்கையானதுதான் என்றாலும் இதிலே புதைந்துள்ள பொருளை ஆய்ந்தறிந்தால், கால மாறுதலும், தம்மையும் அறியாமலே பலர் 'கருத்தை' மாற்றிக் கொண்டிருப்பதையும் அறியலாம்; அறிந்த பிறகு சிலருக்கு ஆத்திரம்கூடப் பிறக்கக்கூடும்.

☆ ☆ ☆

தீபதரிசனம் காண ஆண்டுதோறும் பக்தகோடிகள் திருவண்ணாமலை செல்கிறார்கள். கார்த்திகைப் பண்டிகையின் பொருளற்ற தன்மையை விளக்கி விளக்கிக் கூறுகிறோம். எனினும், பக்தகோடிகள் அண்ணாமலையானைக் காணச் செல்கிறார்கள்; திருவண்ணாமலையில் தீபதரிசனத்தன்று, அண்ணாமலைக்கு அரோகரா என்ற முழக்கம் காது செவிடுபடக் கிளம்புகிறது; சுறுசுறுப்புமிக்க பக்தர்கள்,அண்ணாமலை செல்வதற்காக நடத்தும் இரயில் பிரயாணத்தின்போதே முழக்கமிடுவர். தீபதரிசன விழாக் கிழமை முழுவதுமே, அண்ணாமலைக்கு அரோகரா என்று முழக்கம் கேட்கும். பக்தர்கள் தாமும் பரவசமாகி, பிறரையும் பரவசமடையச் செய்யும் நோக்குடன் முழக்கமிடுகின்றனர். பாவம் போகும், பிறவிப் பிணிக்கு மாமருந்தான அருள் கிட்டும், அரோகரா என்று

முழக்கமிட்டால் என்று அவர்கட்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது; அரோகரா! அரோகரா! என்று முழக்க மிடுகிறார்கள்.

☆ ☆ ☆

திருப்பதி, பக்தர்களை திரட்டிக்கொள்ளும் காந்த சக்தியை இழக்கவில்லை; பெருங்கூட்டம் கூடுகிறது. ஆண்டு முழுவதும் பக்தர்கள் குவிகிறார்கள், என்றாலும் புரட்டாசி திங்களிலே, இலட்சக் கணக்கானவர்கள் ஏழுமலை ஏறி, திருமலையப்பனைத் தொழுகிறார்கள்; காணிக்கை கொட்டுகிறார்கள்; முடி தருகிறார்கள்; மொட்டை அடித்துக் கொள்கிறார்கள்; வீதியில் புரண்டபடி தொழுகிறார்கள்; வாயிலே தாள் குத்திக்கொள்கிறார்கள்; இப்படி வகை வகையாகத் தொழுதிடும் பக்தர்கள் யாவரும் கோவிந்தா! கோவிந்தா! என்று எழுச்சியுடன் கூவுகின்றனர்! திருப்பதியில் மட்டுமல்ல, தெருத் தெருவாக, வீடு வீடாகக்கூட! புரட்டாசித் திங்களில், இந்தக் கோவிந்தா கோவிந்தா! என்ற முழக்கம் கேட்போருக்கு மண்டைக் குடைச்சலும், போடுவோருக்குத் தொண்டை எரிச்சலும் ஏற்படும் அளவுக்குக் கிளம்புகிறது.

☆ ☆ ☆

அரோகரா! என்று பல்லாயிரவர் முழக்கமிடும்போது ஆண்டவனுக்குப் பிரியமான அருள் கிடைக்கத்தக்க, புனிதத் தொண்டு இது என்று நம்பித்தான் செய்கிறார்கள்.

தெரிந்தோ தெரியாமலோ, பிழப்பை ஓட்டவேண்டும் என்பதற்காகவோ பேராசை காரணமாகவோ தாம் செய்த அக்ரமங்கள், அநியாயங்கள் ஆகியவற்றினாலே கிளம்பக் கூடிய பாவம் தொலையும், 'அரோகரா'வால் என்று எண்ணுகிறார்கள்.

☆ ☆ ☆

'கோவிந்தா' கூறுபவர்களின் நோக்கமும் இதுதான் - தம்மைக் கவனிக்காமலிருக்கும் ஆண்டவனிடம் முறையிடுவதாகவே எண்ணிக் கொள்கிறார்கள்.

☆ ☆ ☆

அந்தந்த திருத்தலங்களுக்கும் திருவிழாக்களுக்கும் செல்லும்போது மட்டும் இவ்விதம் முழக்கமிடுவது என்று கூட இல்லை. சமயம் கிடைக்கும்போதெல்லாம், 'அரோகரா'வும், 'கோவிந்தா'வும் கூறுகிறார்கள்- பகவானை பூஜிப்பதாக நம்பிக்கொண்டு.

☆ ☆ ☆

எனவே, 'அரோகரா' 'கோவிந்தா' என்ற இரு சொற்களும், புனிதம் பக்தி, ஆகியவற்றினை எடுத்துக் காட்டும் தூயசொற்கள் எனக் கொண்டுள்ளனர் என்பதுதான், பொருளாகிறது.

☆ ☆ ☆

சிரிப்பு என்பது மகிழ்ச்சியையும், அழுகை என்பது துக்க நிலைமையையும், நடுக்கம் என்பது அச்சத்தையும் காட்டும் சொற்கள்; அதுபோலவே அரோகரா - கோவிந்தா - என்ற சொற்கள் பக்தியைக் காட்டும் சொற்கள்; அப்படித்தானே பொருள் கொள்ளவேண்டும்?

பக்தர்களின் அகராதித் துணையுடன் கூறுவதனால், இவை இரண்டும், பவித்திரமான சொற்கள்!

☆ ☆ ☆

அரோகரா! கோவிந்தா! என்று முழக்கமிடும் பக்தர்கள், முகமே புதிய கோலம் கொள்வதுண்டு. இந்த விதம் பூஜிக்கும்போது, இப்படிப்பட்ட தூய்மை, பக்தி இவைகளைக் குறிபபதும், அருள்பெறும் முறை என்று அமைந்துள்ளதுமான, இந்த இரு சொற்களும், மக்களால் பக்தர்களாலேயேகூட, சாதாரணமாக, எப்படி எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பார்த்தால், வேடிக்கை புலப்படும்.

ஊர் கண்டு மிரள வாழ்ந்தான் உலகநாதன். நடந்தே செல்லமாட்டான். காலைக்கடனை முடிக்கச் செல்வதற்குக் கூடக் கார் ஏறி, ஊர்கோடியில் அதற்கெனப் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள தன் தோட்டத்துக்குச் செல்லுவான் என்றால் ஆடம்பரம் பிறவற்றில் எப்படியெல்லாம் இருக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை. கப்பல் வியாபாரம். இலட்சக் கணக்கான இலாபம். அவன் செல்வத்தைக் கண்டு, செருக்கினைச் சகித்துக் கொண்டிருந்த மக்கள், அவனிடம் தமக்கிருந்த அச்சத்தைக் குழைவு ஆக்கிக் காட்டினர், அருவருப்பை மறைத்துக் கொண்டு பழகினர். ஏதோ ஓர் நெருக்கடி வந்துற்றது. நொடித்துப் போனான்; கப்பல் மூழ்கிவிட்டது; கடனாளியாகிவிட்டான்; அப்போது, அவனைப்பற்றி மக்கள் என்ன பேசிக்கொள்கின்றனர்? “தெரியுமா! தெரியுமா! உலகநாதன் அரோகரா!!-ஆகிவிட்டான்” என்கிறார்கள்.

☆ ☆ ☆

உலகநாதன், வாணிபம் கெட்டது, செல்வம் இழந்தான், சீர் இழந்தான், அந்தஸ்த்து அழிந்தது, வக்கற்றவனானான், வகை கெட்டொழிந்தான்-அவன் அவ்விதம் அழிந்தொழிந்ததை, விரிவாக, விளக்கமாகக் கூறுவதற்குப் பதில் இரத்தினச் சுருக்கமாக மக்கள், அவன் அரோகரா, ஆகிவிட்டான என்கிறார்கள்.

☆ ☆ ☆

அண்ணாமலையானுக்கு அரோகரா என்று கூறினர், பக்தியுடன்; அந்த அரோகரா என்ற சொல்லின் சக்தியே தமக்குச் சகல சித்திகளையும் பெற்றுத் தரும் என்று நம்புகின்றனர்; ஆனால் உலகநாதன் உருக்குலைந்து போனான், உள்ள செல்வம் ஒழிந்தது என்றதும், உலகநாதன் வியாபார விஷயம் தெரியுமா? அரோகரா ஆகிவிட்டான் என்று கூறுகிறார்கள்.

அப்படிக் கூறுபவர்கள், அடுத்த ஆண்டே கூடத் திருவண்ணாமலைக்கு செல்லக்கூடும், அண்ணா மலையானுக்கு அரோகரா! என்று பக்தி முழக்கமிட. இங்கே அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்தில், எதை விளக்கிட அந்த அரோகராவைப் பயன்படுத்தினர்? ஒருவன் கெட்டழிந்ததைக் குறிக்கப் பயன்படுத்துகிறார்கள்.

☆ ☆ ☆

தேன் போலக் கசப்பாக இருந்தது தேமாங்கனி!- என்று சொல்ல முடியுமா? சொல்வதில்லை. ஏன்? தேன் என்றாலே இனிமை என்பது விளங்கிவிடுகிறது;- அரோகரா என்ற சொல் அவ்விதம் இல்லை; பக்திப் பெருக்கைக் காட்டும் முழக்கமாகிறது, ஒருவன் ஏமாந்து கெட்டழிந்ததைக் காட்டும் குறிச் சொல்லும் ஆகிறது. ஏன்!

☆ ☆ ☆

கோபால்தாஸ், முன்பு கோபாலப்பிள்ளைதான். நாலுகாசு சேர்ந்ததும் நடை உடை பாவணைகளை மாற்றிக் கொண்டு, கோபால்தாஸ் என்று, வடநாட்டுப் பாணியில் பெயர் சூட்டிக்கொண்டு, வட்டி வியாபாரம் நடத்தி, இலட்சாதிப் பிரபு ஆகிறான். கோடீஸ்வரன் ஆகவேண்டும் என்ற ஆசை மனதைக் குடைகிறது; குறுக்கு வழி செல்கிறான் பொருள் திரட்ட; சிக்கிக்கொள்கிறான்; வழக்கு அவன் சேர்த்து வைத்திருந்த பணத்தைக் கரைத்துவிடுகிறது; வறியவனாகிறான்; அப்போது, அவனைக் குறித்து மக்கள்-பக்தர்கள் உள்பட-கூறுவது, அவன் 'கோவிந்தா' ஆகிவிட்டான்!- என்பது; ஏன்?

செத்தான் என்பதையே கூட ஆசாமி "கோவிந்தா! கோவிந்தா!" என்று கூறுகிறார்கள்!!

☆ ☆ ☆

அரோகரா! கோவிந்தா என்ற சொற்கள், அருள் பெற்றுத் தரத்தக்க புனிதம்வாய்ந்தவை என்ற நம்பிக்கை

ஆழ்ந்ததாகவும், பொருள் உள்ளதாகவும் இருந்திருந்தால் கெட்டுப்போன நிலையை, வீழ்ச்சி ஏற்பட்ட சம்பவத்தை அழிந்துபோனதை அறிவிக்கும்போது, அதே புனிதச் சொற்களை, அரோகராவை கோவிந்தாவைப் பயன்படுத்து வார்களா? இப்போது, கேட்டால் கோபம் வரும்; ஆனால் ஒவ்வொருவரும், இவ்விதம் அரோகராவையும் கோவிந்தா வையும் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

என்ன சுல்தான்! கபார்கான், அல்லாஹோ அக்பர் ஆகிவிட்டானாமே என்று முசுலீம்கள் பேசுகிறார்களா? இல்லை.

என்ன டேவிட்! ரிச்சார்டு சபாத் ஆகிவிட்டானாமே, என்று கிருஸ்தவர்கள் பேசுவரா? காணோம். ஆனால் இங்கு, இடிபட்டு மிதிபட்டு, இருப்பதை இழந்து இளித்தவாயராகிக் கொண்டேனும், அண்ணாமலை செல்வோரும் ஏழுமலை ஏறி இறங்கும் பக்தர் கூட்டமும், கெட்டுவிட்டான், ஒழிந்துவிட்டான், அழிந்துவிட்டான் என்பதைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தும் சொற்கள், தூய்மைக்கும் பக்திக்கும், அருள் பெருவதற்கும் உகந்தன என்று பூரித்து அவர்களே கூறும், அதே அரோகரா! அதே கோவிந்தா! இந்த வேடிக்கைக்கு, என்ன விளக்கம் தருகிறார்கள்?

☆ ☆ ☆

பகவானுடைய திருப்பாதம், திருநாமம். அதை நெற்றியில் அணிந்துகொள்வது, நாம் பகவானுடைய அடியார்கள் என்பதை எடுத்துக்காட்டும், பக்திச் செயலாகும் என்று கூறுகின்றனர், திருநாமம் தரிப்போர்.

பைத்யக்காரர்களே! திருநாமம் தரித்துக்கொள்வது என்பதை நமது பெரியவர்கள், விசேஷமான விஞ்ஞான அறிவோடுதான் ஏற்பாடு செய்தார்கள். திருநாமம், தரித்துக்கொள்வதால், நெற்றியிலே இருக்கும் சில நரம்புகளுக்கு ஒருவிதமான 'டானிக்' கிடைக்கிறது. அதன்

பயனாக மூளைக்கே சுறுசுறுப்பு கிடைக்கிறது என்றுகூடப் பேசுவோர் உளர். தெரியாமலா தேசிகாச்சாரியார் திருநாமம் தரித்துக்கொள்கிறார். அவர் என்ன தெளிவில்லாதவரா, சுருளிமலை கொலைக்கேசை நடத்திப் பெரும் புகழ் பெற்றவர்; திருநாமம் தரித்துக் கொள்வதிலே புத்தி தீட்சணியம் ஏற்படுகிறது என்பதை, வெள்ளைக்கார ஜட்ஜிகளிடமே எடுத்துப் பேசி, அவர்களே ஒப்புக் கொள்ளும்படி செய்திருக்கிறார் என்று பேசி, தம் அளவில், தேசிகாச்சாரியாகப் பார்ப்போரும் உள்ளனர்.

☆ ☆ ☆

இந்த அளவுக்கு வாதாடத் தெரியாவிட்டாலும், 'திருநாமம்' தரித்துக் கொண்டால்தான் 'களை' இருக்கிறது, 'மங்களகரம்' ஏற்படுகிறது; இல்லையானால் நெற்றி பாழ்க்கோலம் காட்டுகிறது என்றுகூற திருநாமம் தரிப்போர் அனைவருக்குமே தெரியும்.

பகவானுடைய திருப்பாதத்தை, நெற்றியில் தரித்துக் கொள்வதாலே, அருளைப் பெறுகிறோம்-நெற்றியிலே அது இருப்பதாலே குத்துகிறதா? குடைகிறதா? பாரமா? என்ன நஷ்டம் அதனாலே? இவ்வளவு சாமான்யமான காரியத் தாலே, பகவானுடைய அருளைப் பெற முடியும் என்று தெரிகிறபொழுது அதைச் செய்வதாலே, ஏனய்யா கிளறிக் கிளறிக் காரணம் பார்க்கவேண்டும், என்று அடித்துப் பேசும், அடியவர்களும் உள்ளனர்.

☆ ☆ ☆

பொதுவாக அவர்கள் அனைவர் மனதிலும், நாமம் தரித்துக்கொள்வது, புண்ய காரியம், அருள் பெறும் மார்க்கம், பகவானுக்குப் பிரியமானது என்ற எண்ணம் இருக்கிறது.

☆ ☆ ☆

கந்தசாமி, கரம்பாக இருந்த நிலத்தை, காண்ட்ராக் டிலே கண்மண் தெரியாமல் இலாபம் சம்பாதித்து

பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் எதெதற்கோ செலவிட்டுக் கொண்டுவந்த ஏகாம்பரத்திடம், சரியான இலாபத்துடன் விற்றுவிட்டான்.

"தெரியுமா? தெரியுமா? கந்தசாமி, ஏகாம்பரத்துக்கு, நன்றாகக் குழைத்து, பட்டை நாமம் போட்டனுப்பி விட்டான்" என்று கேலி செய்கிறார்கள்.

நாமம் போடுவது என்பது, ஏமாற்றிவிட்டான் என்பதைக் குறிக்கிறது-இங்கு.

☆ ☆ ☆

"நல்ல பக்திமான்! முகத்திலே எப்போதும் இலட்சுமி கரமாக, திருநாமம் பளிச்சென்று இருக்கும்" என்று பேசுகையில், திருநாமம் பளிச்சென்று இருக்கும்" என்று பேசுகையில், திருநாமம் தரித்துக்கொள்வது, சிலாக்கிய மான காரியம் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அதே 'நாமம்' ஒருவன் மற்றொருவனை ஏய்த்து விடுவதையும் ஒருவன் மற்றொருவனிடம் ஏமாந்து போவதையும் குறிக்கப் பயன்படுகிறது! முட்டாள்தனத்துக்கு 'நாமம்' அடை யாளமோ, என்று கேட்கத் தோன்றும் சரியானபடி குழைத்துப் போட்டான் பட்டை நாமம் என்று பேசுவது கேட்கும்போது.

தத்துவ ரீதியாகப் பேசும்போதோ, திருநாமம் தரித்துக்கொள்வது திருமாலின் அருளைப் பெறுகிற வழி என்று உபதேசிக்கப்படுகிறது.

☆ ☆ ☆

இதே முறையிலேதான், ஒருவன் மற்றொருவனை ஏமாற்றிவிடுகிறான் என்பதைத் தெரிவிக்கும்போது, 'மொட்டை அடித்து விட்டான்' என்று கூறுகின்றனர்.

'அரோகரா' ஆகிவிட்டான், 'கோவிந்தா' ஆகி விட்டான், நாமம் போட்டுவிட்டார்கள், மொட்டை

அடித்துவிட்டார்கள்-என்ற சொற்கள் கேவலத்தைக் குறிக்கப்பயன்படுகின்றன.

அரோகரா! என்று கூறும்போது ஐயன் அகங்குழையும், அருள் சுரக்கும் என்று மற்றவர்களுக்குக் கூறுகிறோமே, அதே சொல்லை ஒருவன் கெட்டொழிந்ததைக் குறிப்பிட, கேலி பேசப் பயன்படுத்துகிறோமே, இது சரியா? என்று யோசிப்பவர் உண்டா? கிடையாது! ஏன்? வேடிக்கை அதிலேதான் இருக்கிறது! அரோகரா! கோவிந்தா! என்று ஓசை கிளப்புகிறார்களே தவிர, எவரேனும் ஏன் என்று கேட்டால், கேட்போரின் வாயை அடைக்க, ஏதேதோ தத்துவார்த்தம் பேசுகிறார்களே தவிர, அவர்களுக்கே ஆழ்ந்த நம்பிக்கையோ, பொருள் அறியும் தெளிவோ இருப்பதில்லை! ஏமாளித்தனத்தை-சீர்கெட்டுப் போகும் நிலையைக் காணும்போது, அவர்களுக்கு சிரமமின்றி, சுவையுடன், சுரந்துகொண்டு, அரோகராவும் கோவிந்தாவும் கிளம்புகின்றன!

இந்த நிலை, இன்று நேற்றல்ல, நீண்டகாலமாக இருந்து வருகிறது.

நீண்டகாலமாகவே, அரோகரா-கோவிந்தா-நாமம் போட்டான் - மொட்டை அடித்தான் - என்ற சொற்கள் கேலியை வெளிப்படுத்தப் பயன்பட்டு வருகின்றன. ஏன் என்று பக்தர்களும், மற்றவர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆராய ஆராய வேடிக்கை புலப்படும்; நமது பக்தர்களின் 'நம்பிக்கை' எந்த அளவுக்கு காற்றில் பறக்கும் தன்மையினதாக இருக்கிறது என்பதும் விளங்கும்.

❋❋❋

9. சமயபுரத்தம்மன் மான நஷ்ட வழக்கு

காருண்யமுள்ள சர்க்காருக்கு,

சகல ரோக நிவாரணமளித்து, சகல சம்பத்தும் சௌபாக்யமும் அருளி, சாந்தி சந்தோஷம் தந்து, சகலருக்கும் அருள் பாலித்துவரும் சமயபுரத்தம்மன், அனுப்பிவைக்கும் மான நஷ்ட வழக்குக்கான துவக்கக் கடிதம் இது.

மதச்சார்பற்ற சர்க்கார் என்று சொல்லிக் கொண்டாலும், எந்த மத சம்பந்தமான திருவிழாவுக்கும், நல்ல நாளுக்கும், பூஜை நாளுக்கும் 'லீவ்' கொடுத்து, மக்களைக் கோயில் குளம் சென்று, பக்தியைக் காட்டிடும் சடங்கு சம்பிரதாயங்களைச் செய்யும்படித் தூண்டியும், காய்ந்த வயிறு படைத்த மக்கள் கோபத்துடன் எதிர்ப்புக் காட்டும்போது, பக்தி செய்யுங்கள், சகல கஷ்டமும் தீர்ந்துபோகும் என்று கூறிப் பஜனையின் மேம்பாட்டை எடுத்துக் கூறியும், கோபுரத்தைக் கோலோச்சுமிடத்துச் சின்னமாகக் கொண்டிருப்பதன் மூலம், மதத்தை மறந்து விடவில்லை என்பதைத் தெள்ளத் தெளியக் காட்டியும் வருகிற காரணத்தால், இந்தச் சர்க்கார், மதத்தை, குறிப்பாக இந்து மதத்தை, சிறப்பாக புராண மதத்தைக் கட்டிக் காத்திடும் வீரம் கொண்டது என்பது விளக்கமாகத் தெரிவதால், எனக்குத் தகுந்த நியாயம் கிடைக்கும் என்ற பரிபூரண நம்பிக்கையுடன் இந்த 'மகஜரை' அனுப்புகிறேன்.

காருண்யமிக்க சர்க்காரில் அங்கம் வகிக்கும் பாக்கியம் பெற்ற அமைச்சர்கள், அடிக்கடி மதத்தின் அவசியத்தையும், ஆலய வழிபாட்டினால் கிடைக்கும் மேம்பாட்டையும் மக்களுக்கு எடுத்துக் கூறிவருவது கேட்டு, நான் புளகாங்கிதமடைந்தேன். அதிலும் ஆச்சாரியார் செய்துவந்த அரிய சத்கதா காலட்சேபத்தைக் கேட்டு ஆனந்தத் தாண்டவமாடினேன். நாட்டை ஆளும் பெரும் தலைவர்களே இவ்வண்ணம் இதோபதேசம் செய்யும்போது, பகுத்தறிவு என்றும் விஞ்ஞானம் என்றும், முன்னேற்றம் என்றும் மூலகாரணத்தைக் கண்டறிவது என்றும் ஏதேதோ கூறிக்கொண்டு, காவியங்களைக் கட்டுக்கதைகள் என்றும், அந்தக் கட்டுக்கதைகள் கவைக்கு உதவா என்றும் வெட்டிப் பேச்சுப் பேசிக்கொண்டு, இதற்கென்ன காரணம், அது எப்படிப் பொருந்தும், இது எங்ஙனம் நடந்திருக்கும், இப்படிச் செய்வது அறிவுள்ள செயலா என்றெல்லம் கேட்டுக் கேட்டு விதண்டாவாதம் பேசியும் சில பலர், மதத்தின் செல்வாக்கை, புராண இதிகாசாதிகளின் ஆதிக்கத்தை எதிர்த்தொழிக்க முயற்சித்து, வெற்றி எப்படிக் காணமுடியும்! இதை எண்ணும்போதே எனக்கு,'ஆயிரம் இளநீர் அபிஷேகம்' செய்யும்போது ஏற்படும் ஆனந்தத்தைவிட அதிகம் உண்டாயிற்று, இவ்வளவு பக்திமான்களாக, இருப்பதால் தான் நான், நம்பிக்கையுடன், இந்த 'மனு' அனுப்பி வைத்திருக்கிறேன்.

வெளிப்படையாகக் கூறிக்கொண்டால், தவறு என்ன? முதலிலே எனக்குத் துளியும் விருப்பம் உண்டாக வில்லை-வெட்கமாகக்கூட இருந்தது. எங்கே கேலி பேசவும் கேவலமாகக் கருதவும், இது இடங்கொடுத்து விடுகிறதோ என்று அஞ்சினேன், பிறகு தீர்க்கமாக யோசித்ததில், நமது பக்தரிடம் முறையிட்டுக் கொள்வதிலே தவறு இல்லை, கேவலமும் இல்லை என்ற தைரியம் பிறந்தது; பிறகுதான் இதனை எழுதினேன். மறந்தே போனேன். இத்துடன்

வைத்திருக்கும் பொட்டலத்தில் ஆறு வேப்பிலைச் சருகு இருக்கும், குங்குமமும் இருக்கும்-மகா சக்தி வாய்ந்தது, எடுத்து உபயோகித்துக் கொண்டு இகபரசுகம் பெறக்கடவீர்களாக!

என்னைப்பற்றி விளக்கத்தான் வேண்டி இருக்கிறது.- ஏன் என்றால், வழக்கு அல்லவா தொடுத்திடவேண்டிய 'காலம்' வந்துவிட்டது. அதனால்தான், தற்பெருமை என்று தயவுசெய்து யாரும் எண்ணி விடாதீர்கள்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகே உள்ள 'தேவதை' நான்.

பெயர், சமயபுரத்தாள்-என் பெயரே ஊருக்குமாகி, சமயபுரம் என்று இருப்பதை உலகு அறியும்.

இந்தச் சமயபுரத்திலே, திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் என்னை, மஹாதேவி! மாதா! அம்மை! அருளும் தாய்! எவ்வரமும் அருளும் எங்கள் சமயப்புரத் தம்மை! எந்த ரோகமும் போக்கும் இறைவி! என்றெல்லாம் கூறுவர்.

கோயிலும், என் கோயிலின் செல்வாக்கும், மெள்ள மெள்ள, ஆனால் நிச்சயமாக வளர்ந்து வளர்ந்து, நான், சகலரும் போற்றும் சமயபுரத்தம்மை ஆனேன்.

என்னை நாடிடாத பேர்வழிகள் இல்லை, பாடிடாத திருவாயில்லை! எவ்வளவு உருக்கமான கீதங்களைக் கேட்டிருக்கிறேன். எப்படிப்பட்ட அருமையான அர்ச்சனைகள், அப்பப்பா! என் மெய்சிலிர்த்துவிடுகிறது, இப்போது எண்ணிக்கொண்டாலும்.

பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமன் ரங்கநாதன், மிக மிக நீண்டகாலமாக ஸ்ரீரங்கத்தில் 'ராஜாங்கம்' நடாத்திக் கொண்டு வருகிறான் என்றாலும் என்னுடைய ஆலயத்தின் புகழ், அவனையே எழுந்துவந்து பார்த்துவிட்டுப் போகச் செய்யுமோ என்று எண்ணவேண்டிய அளவிலே வளர்ந்தது.

தங்கச் சிலைபோன்ற என் குழந்தைக்கு, தாயே! கண்ணிலே 'பூ' விழுந்துவிட்டது-போடாத மருந்தில்லை, தேடாத டாக்டரில்லை, எதிலும் எள்ளளவு பலனும் கண்டேனில்லை, அம்மையே! உன் சன்னதியில் தான், இந்தப் பொற்கொடியைக் காப்பாற்ற வேண்டும், கோயில் கோயிலாகச் சுற்றிப் பெற்றெடுத்த குழந்தையம்மா இது! சமயபுரத்தாளே! உன் மகிமையைத் தெரிந்துதான் இங்கே வந்து அடைக்கலம் புகுந்தேன், உன் பாதத்திலே இந்தக் குழந்தையை வைத்துவிட்டேன், இனி நீயே துணை, நீயே கதி, உன் 'பிச்சை'தான் இந்தக் குழந்தை. நீ கண் திறந்து பார்த்தால்தான் குழந்தை பிழைக்கும்! தாயே! தங்கத்தாலே கண்மலர் செய்து காணிக்கை தருகிறேன்! வெள்ளித் தொட்டில் செய்துவைக்கிறேன்! ஆயிரம் இளநீர் அபிஷேகத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்! ஐயாயிரம் ஆரஞ்சு படைக்கிறேன்! பால் பாயசத்துடன்-பருப்பு வகையுடன், பரமான்னம்செய்து படைக்கிறேன்! உன் திருக்கோயிலை, ஒவ்வொரு வாரமும் சுற்றி வருகிறேன், திருவிளக்கு வைக்கிறேன், திருவிழா நடத்துகிறேன், தேவி! தயாபரி! தேனாபிஷேகம் செய்விக்கிறேன், சமயபுரத்தம்மே! சகலருக்கும் தாயானவளே! உன் அருளைத் தாருமம்மா. உன்னாலே ஆகுமம்மா! - என்றெல்லாம் பூஜிப்பார்கள்! நினைத்தாலே, பெருமூச்சு விடவேண்டும் போலிருக்கிறது!

ஆண்டு எட்டு ஆயிற்று, எனக்கான அதே நாளில் மணமான எதிர்வீட்டு ஏமலதாவுக்கு. நாலாவது குழந்தை- நாரும் நரம்புமாகத்தான் இருக்கிறது, என்றாலும் நாலாவது குழந்தை! என் பாழும் வயிற்றிலேயோ இதுவரை ஒரு பூச்சி புழுவும் இல்லை! சாப்பிடாத டானிக்கில்லை, பார்க்காத லேடி டாக்டர் இல்லை, டஜன் கணக்கில் லோத்ரா சாப்பிட்டாகிவிட்டது, சித்த வைத்திய செந்தூரமும் 'டப்பி டப்பி'யாகச் சாப்பிட்டாகிவிட்டது, ராமேஸ்வர முழுக்காயிற்று, ஊஹூம்! பலன் இல்லை, சமயபுரத்தம்மே!

நீதான் எனக்கு ஒரு குழந்தை அருளவேண்டும், என் குலம் தழைக்க அருள்பாலிக்க வேண்டும். சொத்து இருக்கிறது இலட்சக்கணக்கில், சுகம் இருக்கிறது பிறர் பார்த்துப் பொறாமைப்படும் வகையில், வாரி எடுத்து அணைத்துக் கொள்ள ஒரு குழந்தைதான் இல்லை. ஒரு பிள்ளைக்கனி அமுதை, தாயே! நீதான் தரவேண்டும்! பிறந்ததும், உன் சன்னதிக்குக் கொண்டு வந்து, குழந்தையின் எடைக்கு எடை வெள்ளி தருவேன், பெண்ணானால் சமயபுரத்தாள் என்றே பெயரிடுவேன், பிள்ளையானால் சமயபுரத்தரசன் என்று பெயர் சூட்டுவேன், இன்னமும் என்னைச் சோதிக்காதே என்னம்மே! உன் அருளைத் தாருமம்மா! - என்று உள்ளம் உருக உருக வேண்டிக் கொள்வார்கள்.

என்னமோ ஏதோ என்று இருந்துவிட்டேன்- சொரிந்ததால் ஏற்பட்ட கீறல் என்று எண்ணிக் கொண்டேன்; ஆனால் கீறல் வளர்ந்து வளர்ந்து, வாடைமிகும் நீர் கசியலாயிற்று, நாட்டு வைத்தியர் பார்த்தார், இங்கிலீஷ் மருந்தும் சாப்பிட்டாயிற்று, தேவீ! இது மறையக் காணோம், பார்க்கப் பயங்கர மானதாகிவிட்டது, பக்கம் சென்றால் நாற்றமடிக்கிறது என்று எனக்குத் தெரியாமல் என் மனைவியே, அடுத்த வீட்டுக்காரியிடம் பேசிக்கொள்கிறாள், என்ன கர்மமோ! என்னபாபம் செய்தேனோ! எனக்கு வந்தது இந்த நோய்! குஷ்டம் என்கிறார்கள், தேவீ! குஷ்டமாம் இது! யாருக்கு என்ன குறை செய்தேனோ, குலதெய்வமே! எனக்குக் குஷ்டம் ஏன் வந்ததோ, போகக்காணோம்! உன் கோயிலைச் சுற்றினால், தீராதரோகமில்லை என்று தெரிந்தவர்கள் சொன்னார்கள், உன்கண்பார்வை பட்டால்போதும் கடும் குஷ்டம் நொடியில் போய்விடுமே, பொன்நிற மேனியை, தேவீ! நீ நினைத்தால் தர இயலாதா! சகல சக்தியும் உன்னிடம் இருக்கும்போது, சமய புரத்தாளே! இந்தப் பாவியின் குஷ்டத்தைப் போக்குவதா

ஆகாத காரியம். என் சக்தியானுசாரம், நான் கைங்கரியம் செய்வேன் அம்மையே! வீடு வாசலை விற்றுக்கூட நான் உனக்குக் கைங்கரியம் செய்வேன்! இந்தத் தீவினையைத் துடைத்துவிடம்மா! தீராதவல்வினையைத் தீர்த்து வைக்கும் பேராற்றல் பெற்றவளே! சீராரும் சமயபுரத்தே செங்கோ லோச்சிப் பாராளும் மாதாவே, பாரம்மா என் கதியை!- என்று கண்ணீர் கசியும் நிலையில் கை கூப்பித் தொழுது நிற்பார்கள்.

பாலம் வேண்டும், பள்ளிக்கூடம் வேண்டும், பாதை வேண்டும், வேலை வேண்டும், பல பொருளின் விலை குறைய வேண்டும், பாரமான வரி குறைய வேண்டும், என்று பன்னிப்பன்னி எழுதிப் பாமரமக்கள் தொல்லை தருகிறார்கள், தெரியும் எனக்கு. அந்தத் தொல்லையுடன் சேர்த்து நானும் தொல்லை தருவதாக எண்ணிக் கொள்ளாதீர்-கடிதத்தின் அளவைக் குறைத்துக் கொள்கிறேன்-மனதிலே உள்ள கஷ்டம் மலை போலிருக்கிறது, அதனால், இவ்வளவு கூறவேண்டி வருகிறது. இனிச் சுருக்கிக் கூறுகிறேன், குழந்தை வேண்டியும், நோய் நீக்கச் சொல்லியும், பித்தத்தைப் போக்கச் சொல்லியும், பேய் பிசாசை ஓட்டச் சொல்லியும், பொருள் வேண்டியும் பிழைப்பு வேண்டியும், தக்க இடத்தில் வரன் வேண்டியும், விரோதியைத் தரைமட்டமாக்க வேண்டியும் என்னை நாடி பக்தர்கள் சாரை சாரையாக வந்த வண்ணம் இருப்பர்!

நடந்து வருவர், குடும்பம் குடும்பமாக வருவர், குளித்துக் குங்குமம் அணிந்து வருவர், இடுப்பில் குழந்தையுடன் வருவர். வைரத்தோடணிந்த வத்சலாவும் வருவாள்; வயிற்று வலிக்காரி வேலாத்தாளும் வருவாள்; காசநோய் பிடித்த கனவானும் வருவான்; மேகநோய் பிடித்த மைனரும் வருவான். இன்ன குலத்தார், இன்ன ஜாதியார் என்றில்லை; சகலரும் வருவர், சம்பிரமமாகப்

பூஜைகள் செய்வர்; சோடசோபசாரம் செய்வர்; சொர்ணா அபிஷேகம் செய்வர்; தோத்திரம் செய்வர்; துதிபாடுவர்; அபிஷேகம் நடக்கும்; ஆராதனை செய்வர்; ஓயாது நடக்கும். ஒரு குறையுமின்றி நான், ஈடு எதிர்ப்பின்றி எட்டுத்திக்கும் என் புகழ் பரப்பி, இலட்சோபலட்சம் மக்களின் 'இஷ்டதேவதை'யாகி, கெம்பீரமாகக் கொலுவீற்றிருந்து வந்தேன்- இப்போதோ...நெஞ்சு 'பகீர்' என்கிறது; நாளை நடப்பதை யார் அறிவார் என்று எண்ணி அழலாமா என்றுகூடத் தோன்றுகிறது. வந்தது பேரிடி! விபத்து, பெரும் விபத்து வந்திருக்கிறது! என் அரசுக்கு அபாயம், என் அந்தஸ்த்துக்கு ஆட்டம் கொடுத்திருக்கிறது, என் செல்வாக்கைச் சிதைக்கச் சதி நடைபெறுகிறது, என் கோலாகல வாழ்வுக்கு வேட்டு வைக்கக் கொடியவர்கள் கிளம்பியுள்ளனர், என் செய்வேன், எப்படி இதிலிருந்து தப்பிப் பிழைப்பேன் என்று எண்ணும்போதே, குலை நடுக்கமெடுக்கிறது.

செந்தமிழ் நாட்டிலே எனக்கென்று ஏற்பட்டு, தழைத்து வந்துள்ள செல்வாக்கைச் சிதைக்கும் சிறு செயலை மிகத் துணிவுடன் செய்கிறார்கள், சிறுமதியாளர்கள். அச்செயலைக் கண்டிக்காமல், சீரழிவான அந்தப் போக்கை எதிர்க்காமல் இருப்பது மட்டுமல்ல, மக்கள் அதனை ஆதரிக்கவும் செய்கிறார்கள்.

எடுத்துக்காட்டுக்காகக் கூறுகிறேன், கோபத்தால் சாபமிடுகிறேன் என்று தவறாகக் கருதிவிடவேண்டாம், மக்களிடம் செல்வாக்குப் பெற்று சட்டப்படி மந்திரிகளாகி சர்க்காரை நடத்திச் செல்கிறீர்கள், உங்கள் கண் எதிரிலேயே உங்களைத் துச்சமென்று மதித்து, உங்கள் ஆணையை மதியாமல், ஒரு கூட்டத்தார் 'போட்டி சர்க்கார்' அமைத்து, அதனைப் படாடோபமாக விளம்பரம் செய்து, பாமர மக்களின் ஆதரவைத் திரட்டி, எமது அமுலுக்கு அடங்கி நடந்துவாரீர் என்று

கட்டளைகள் பிறப்பித்தால் உங்களுக்குக் கடுங்கோபம் பிறவாதா, மனம் பதறாதா! சகல விதமான அதிகாரமும் பெற்று, 'கண்கண்ட தெய்வமாய்', 'காட்சியளிக்கும் தேவியாய்' அரசோச்சி வந்துகொண்டிருக்கிறேன். எனக்கு ஒரு 'போட்டி சர்க்கார்' அமைத்திருக்கிறார்கள். புல்லர்களின் செயலல்லவா, இது! புன்னகையா பிறக்கும் இதனைக் கண்டு! உங்களிடம் உண்மையை உரைப்பதிலே தவறென்ன, நான். உங்களுக்காக அனுப்பியுள்ள வேப்பிலையிலே என் கண்ணீர் கலந்திருக்கிறது! அவ்வளவு மனக்கஷ்டம்!

எப்படிப்பட்ட செல்வாக்கு எனக்கு என்று எண்ணுகிறீர்கள்? விரதமிருப்போர் எவ்வளவு! வீழ்ந்து வணங்கினோர் எவ்வளவு! என் சன்னதியை நாடிவந்த மோடார்கள் எவ்வளவு வகையானவை, என்னை பூஜித்த பூபதிகள் எவ்வளவு!! பூரித்துப் போகாமலிருக்க முடியுமா? ஆயுள் தண்டனை பெற்று, ஆண்டு இரண்டு சிறையில் அடைபட்டிருந்த ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர், வெள்ளைக்கார நாட்டு பாரிஸ்டரும், அவர் கண்டு மெச்சிப் பாராட்டத்தக்க அறிவாற்றல் கொண்ட சென்னை பாரிஸ்டர் எதிராஜும் காட்டிய திறமையால், விடுதலை செய்யப்பட்டார்-உடனே பாகவதர், என் சன்னதிக்கு வந்தார், பயபக்தி விசவாசத்துடன் தொழுதார்-பூஜைகள் செய்தார், இசையால் அபிஷேகம் செய்தார், என் செல்வாக்கு எவ்வளவு என்பதை விளக்க ஒரு சிறு எடுத்துக்காட்டு! இப்படிப்பட்ட என் செல்வாக்கு சீரழியும் காலமும் பிறந்ததே என்று எண்ணும்போது என் மனம் எரிமலையாகித்தானே தீரும். சலிக்காமல் என் கோயிலைச் சுற்றினர்- சளைக்காமல் என் நாமத்தை பஜித்தனர், என்னால் ஆகாதது எதுவுமில்லை என்று வாயராப் பேசினர் - அவர்கள் கேட்ட வரம் அவ்வளவும் கொடுத் தேனா, தீராத வல்வினையைத் தீர்த்துவிட்டேனா, கோரிக்கைகளை நிறைவேற்றினேனா என்று கேட்கவோ,

ஆராயவோ, என் 'பக்தகோடிகள்' எண்ணம் கொள்ள வில்லை. தொழுத வண்ணம் இருந்தனர், இப்போது நான் அழுதவண்ணம் இருக்கிறேன்! பழமலையைக் கண்டேன், பால் குளம் கண்டேன், பட்டாடை போர் போராக, பலகாரவகை குவியல் குவியலாக, பரிமள கந்தம் பலவகை புஷ்பம் பலகாததூரம் மணம் பரப்பும் அளவுக்குக் கண்டேன்! கண்ட பிறகு, எனக்குக் கலக்கமா பிறக்கும்? குறைகளைத் தீர்த்து வைத்தாலும், இயலாது போயினும், இந்தப் பக்தர்கள் நமக்கு ஒரு குறையும் வைக்கமாட்டார்கள் என்று எண்ணிக் களித்தேன்-இறுமாந்தும் கிடந்தேன். பாமர மக்கள் மட்டுமா, என் பக்தர்களாக இருந்தனர்! பாரிஸ்டரும், டாக்டரும், என்ஜினியரும், கலெக்டரும், போலீஸ் அதிகாரியும் போர்வீரரும், என் கோயிலை வலம்வரக் கண்டேன்! அவரவர் அவரவருக்கு ஆதிக்கம் இருக்கும் துறைகளிலே இருந்த மற்றவர்களை என்னிடம் அழைத்து வரும் தூதுவராயினர்! என் துரைத்தனத்துக்கு அடங்கி இருந்தவர்கள், சாமான்யமானவர்களல்ல! அப்படிப்பட்ட எனக்கு...!!

சமயபுரத்தம்மையைத் தரிசிக்கச் செல்கிறேன்-சமயபுரத்தாளுக்குப் பூஜை நடத்தினேன்-சமயபுரத் தம்மைக்கு வேண்டிக்கொண்டிருக்கிறேன்-என்று ஊர் மக்கள் பேசிடக் கேட்டு உள்ளம் மகிழ்ந்து இருந்து வந்த எனக்குக் காதிலே நாராசம்போல விழலாயிற்று, வேறோர் பேச்சு!

சமயமாவது, புரமாவது, பூஜையாவது வினையைத் தீர்ப்பதாவது-அருளாவது ஐஸ்வரியம் தருவதாவது-என்று பேசி, மதத்தை மடைமை என்றும், புராணத்தைப் புரட்டு என்றும், இதிகாசத்தைப் இழிவுப் பெட்டகமென்றும் சடங்குகளை மூடநம்பிக்கை என்றும், சாஸ்த்திரங்களைச் சூழ்ச்சிகளென்றும் பேசித் திரியும், புதுயுக ராட்சகர்களான, சுயமரியாதைக்காரர்களின் எதிர்ப்பு என்னை இழி

நிலைக்குக் கொண்டுவந்தது போலும்! அந்த ஆசாமிகள், சமயபுரத்தம்மையை நம்பி சக்கையாகாதே! உழைத்து உழைத்துப் பெற்ற பணத்தை ஊதாரித்தனத்துக்குச் செலவிடாதே! நடமாடும் கோயிலுக்குப் பூஜை செய், நயவஞ்சகர் காட்டும் பாதையில் செல்லாதே, என்று சண்டமாருதப் பிரசாரம்செய்து, என் பக்தர்களின் மனதைக் கலைத்து என் செல்வாக்கைக் கெடுத்து வருகிறார்கள் போலும், என்று எண்ணி, இதுதானா அம்மே! இன்றே ஒரு தடை உத்திரவுபோட்டு அந்தத் தான் தோன்றிகளைத் தாக்கித் தகர்த்துவிடுகிறோம் தாயே! அவர்களுடைய பேச்சு, எழுத்து, பாட்டு, கூத்து, எதையும் நாட்டிலே பரவாதபடி, 'வேலி' கட்டுகிறோம். விசாரத்தை விடு, என்று எனக்கு ஆறுதல்கூற முன்வராதீர்கள், ஐயன்மீர்! எனக்கு வந்துவிட்ட இடியும் இழிவும் சுயமரியாதைக் காரர்களால் ஏற்படவில்லை. எல்லாம் நம்மவர்கள் செய்கிற காரியமேதான். எனக்கு நாசம் விளைவிக்கும் பேர் வழிகள், பக்தி குறைந்தவர்களல்ல, பரமன் எங்கு இருக்கிறார் என்று கேட்பவர்களல்ல, பாடுபடாமல் வாழ எண்ணுபவன் பாமரரை ஏய்க்கக்கட்டிவிட்ட பொய்யும் புரட்டும்தான் புராண இதிகாசம் என்று பேசுபவர்களல்ல-எல்லாம் பக்தர்களால் வந்தவினை தானய்யா, பக்தர்களால் வந்தவினைதான்!!

எவ்வளவோ கோலாகலமாக இருந்துவரும் எனக்கு மானநஷ்டம் ஏற்படும் விதமான செயல் பகிரங்கமாக நடைபெறுகிறது.

என் மகிமையைக் குறைத்து, என் புகழுக்குக் களங்கம் தேடும் காரியம் நடைபெறுகிறது. வெகு அருகாமையில், மிக ஜரூராக.

சமயபுரத்துக்குச் சிலகல் தொலைவிலே ஒரு பட்டிக்காடு-யாரும் அதன் பெயரைக் கேட்டிருக்க மாட்டார்கள்-ஒரு முக்கியத்துவமும் கிடையாது-

இப்போதோ அதன் பெயர், பிரக்கியாதியாகிவிட்டது-சமயபுரமாகிவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்களேன், வயறு எரிந்துதான் சொல்கிறேன்.

புறத்தாக்குடி என்பது அந்த குக்கிராமத்தின் பெயர். சேர்ந்தாற்போல் நூறு பேரைக்கூடக் காண முடியாது அங்கு. அப்படிப்பட்ட இடம் இப்போது திமிலோகப் படுகிறது! இருபது முப்பது மைல் சுற்றளவுக்கும் உள்ள சிற்றூர் பேரூர்களிலிருந்து திரள் திரளாக மக்கள் சென்ற வண்ணமிருக்கிறார்கள். ஆணும் பெண்ணும், காய்ந்ததும் மினுக்கித் தெரிவதும், கால்நடையாகவும் காரிலும், கையில் காசு உள்ளதும் வயிற்றுப்பசி கொண்டதும் பறட்டைத் தலையும் பகட்டு நடையும், எல்லா 'ரகமும்' புறத்தாக்குடி! புறத்தாக்குடி!! என்று செல்வதைக் காண்கிறேன்.

ஆஹா! என்ன மகிமை, என்ன மகிமை! எப்படிப் பட்ட சக்தி! எப்படிப்பட்ட சக்தி! என்று பேசுகிறார்கள், என் காது குடைகிறது, கண் கசிகிறது.

கண் பார்வையைத் திரும்பப் பெற்றான்! கோர்ட்டில் வழக்கு கெலித்தது! குழந்தை, இருபது வருஷமாக இல்லாமலிருந்தவருக்குப் பிறந்தது, இத்தனைக்கும் புருஷனுக்குக் கொடிய குலைநோய் கொல்லுகிறது! புதையல் கிடைத்தது, மேகம் பறந்தது, குஷ்டம் மறைந்தது! காலிழுப்பு கைவலிப்பு, எல்லாம் தீர்ந்தது என்று கதை கதையாகப் பேசுகிறார்கள்-புளுகுதான், ஆனால் அது இன்று பஞ்சாமிர்தமாகிவிட்டது.

என் கண் எதிரில், என் அரசு நடைபெறும் இடத்துக்கு அருகே, என் மகிமையை, அருளைப் போற்றிப் புகழ்ந்து, வாழ்த்தி, வணங்கிக் கொண்டிருந்த அதே மக்கள், செச்சே! என்ன மதியீனம், எவ்வளவு மனக்குழப்பம், எத்துணை நன்றி கெட்டதனம், இப்போது அதே மக்கள், என்னை எவ்வளவு பக்தியுடன் நாடி வந்தார்களோ,

அதேவிதமாக, புறத்தாக்குடி செல்கிறார்கள்! எங்கும் என் நாமமே நாதமாக இருந்துவந்தது; இன்றோ எங்கும், எவரும் புறத்தாக்குடி, என்று புகழ்பாடி ஆடுகிறார்கள். கண்டால், வேதனை எவ்வளவு ஏற்படும் எனக்கு!

யாரோ ஒரு சாமியாராம்-ஆயிரம் ஆயிரம் சாமியார்கள் என் அடிபணிந்து நான் இட்ட பிச்சையை உண்டு வாழ்ந்தார்கள்-அவனை ஒரு பூனை கடித்ததாம்; அவன் இறந்துபோனானாம்-அவனைச் சாகடித்த பூனையை ஒரு நாய் கடித்திருந்ததாம், அந்த நாய் வெறி பிடித்ததாம்-கதையைக் கேட்டாலே, கேவலம் தோன்றும்-வெறிபிடித்த நாயிலிருந்து கதை ஆரம்பமாகிறது. நாய் பூனையைக் கடிக்க, பூனை சாமியாரைக் கடிக்க, சாமியார் இறந்துபட, அந்தச் சாமியார் இறந்த இடத்திலே இருக்கும் 'சாம்பலை' எடுத்துப் பூசிக்கொண்டால் சகல சித்தியும் கிடைக்கிறது என்று நம்பிக்கொண்டு, துளியும் தெளிவு இல்லாமல் கும்பல் கும்பலாகப் புறத்தாக்குடி செல்கிறார்கள், இந்த பக்தர்கள்!!

ஒரு முக்கியமான சர்க்கார் அவசரமாகக் கவனிக்க வேண்டிய தகவல் இதிலே தொக்கி இருக்கிறது-என் செல்வாக்கைச் சிதைக்கும் விதமாக முளைத்துள்ள இந்தப் புது புனிதஸ்தலத்துக்குக் காரணமாக இருந்த சாமியார் கிருஸ்தவர், இந்து அல்ல! உடனே இதைக் குறித்துக் கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன். புறத்தாக்குடிக்குப் புற்றீசல்போலச் செல்பவர்கள், இந்துக்கள்-அங்கே இறந்து இன்று என்னை இம்சிக்கும் நிலையை உண்டாக்கி விட்டவர், கிருஸ்தவர். இந்து மதம் நமது சொந்த மதம் புராதனமதம், மூவாதி தேவர்களால் தரப்பட்ட மூலமதம், அவதாரங்களைக் கொண்ட மதம், ஆழ்வாராதி நாயன்மார்களைக் கண்டமதம், அப்படிப்பட்ட மதம் இருந்தும், அதிலே பிறந்து வளர்ந்தவர்கள், ஒரு கிருஸ்தவச் சாமியாரின் சாவிடத்தைப் புனித இடமாகக் கொண்டு,

புறத்தாக்குடி செல்கிறார்கள், பொறுத்துக் கொள்ளக் கூடியதுதானா இனி!

நல்லவேளை, அந்த நாயையும் பூனையும் மறந்து விட்டார்கள்-சாம்பல் அளவோடு நிற்கிறார்கள்!!

என்னை நாடி, என் புகழ் பாடி, என் மகிமையைப் பேசி, என் செல்வாக்கு என்றும் அழியாதது என்று நான் பரிபூரணமாக நம்பும்படி இது நாள் வரையில் நடந்து கொண்டு வந்தவர்கள், இன்று ஏன் புது இடம் செல்கிறார்கள், புறத்தாக்குடி ஓடுகிறார்கள்.

"நல்ல டாக்டரை அழைத்து வந்து காட்டப் போகிறேன்" என்று வைத்யம் பார்த்துவரும் டாக்டரிடம் கூறினால், என்ன பொருள்? கேவலப்படுத்துவதுதானே!

அழகான பெண் கிடைக்கவில்லையா? என்று நண்பனிடம் அவன் நண்பன் கேட்டால் என்ன பொருள், இருப்பவள் அவலட்சணம் என்பதுதானே!

சமயபுரத்தாள் நானிருக்க, சகலருக்கும் தாயாக நானிருக்க, வேண்டும் வரம் அருள நான் இருக்க, நெடுங்காலமாக நான் இருக்க, நேற்று முளைத்த இடத்துக்கு, மந்தை மந்தையாகச் செல்வதா! அக்ரமல்லவா?

சமயபுரத்தாளைத் தொழுது வந்தோம், ஒரு பலனும் இல்லை; சகல சக்தியும் படைத்தவள் என்று நம்பினோம், ஒரு குறையும் தீரவில்லை, வீண்வேலை இந்தப் பூஜை, வெட்டி வேலை அங்கு செல்வது, கால் கடுப்பும் பொருள்இழப்பும்தான் கண்ட பலன், புறத்தாக்குடி என்றோர் இடத்திலே புதுமை ஒன்று நடைபெறுகிறதாம், அங்கு காலமான சாமியாருடைய சாம்பல், சகல நோயையும் போக்கி, சகலமும் சித்திக்கும்படி செய்கிறதாம். இனி அங்கு செல்வோம், நமது குறையைத் தீர்த்துக்கொள்ள என்று எண்ணித்தானே இந்த மக்கள், அங்கு செல்கிறார்கள்.

என்மீது நம்பிக்கை இல்லை என்று தானே பொருள்? என் மகிமை வெறும் கட்டுக்கதை, கவைக்கு உதவாது என்றுதானே அவர்கள் கூறாமற் கூறுகிறார்கள்! எப்படி இருக்கும் என் மனம்,நீங்களே சொல்லுங்கள். என்னமோ கடவுள் விஷயம், நமக்கென்ன தெரியும் என்று சொல்லிவிடாதீர்கள். எனக்கு வந்த கஷ்டம்போல் உங்களுக்கும் நாளை வரக்கூடும். ஆகவே சிந்தனை செய்யத்தான் வேண்டும்.

திருவல்லிக்கேணி கடற்கரையில் அலங்கார மேடை அமைத்து ஆயிரம் விளக்கு போட்டு, அன்பர்காள்! நண்பர்காள்! என்று நீவிர் பேச ஆரம்பித்த காலை, பதினாயிரக் கணக்கிலே கூடி இருந்த மக்கள், எங்கோ ஒரு மூலையில் எவனோ ஒருவன் அன்புகெழுமிய தோழர்களே! என்று பேசத் தொடங்கியதும், உங்கள் எதிரே இருந்த கூட்டம் எழுந்து அங்கு சென்றால், உங்களுக்கு உள்ளம் எப்படி இருக்கும்? கடல் பொங்கி இந்தக் கருத்தற்றவர்களை மூழ்கடிக்காதா, கடுங்காற்றுக் கிளம்பி, இதுகளின் கண்களிலே மணலை இறைத்து ஒழிக்காதா, என்றுகூட எண்ணுவீர்களல்லவா!

இப்போது எண்ணிப் பாருங்கள், புறத்தாக்குடி சம்பவம், என் மனதை என்ன பாடுபடுத்தி இருக்கும் என்பதை.

மானமே பறிபோகிறது, நான் வாழ்ந்துவந்த வாழ்வே நாசமாகிறது, என் கீர்த்தி கரைகிறது, செல்வாக்கு சிதைகிறது. புதிதாக முளைத்த இடம், புண்ய ஸ்தலமாம். என் சமயபுரத்தின். மகிமையைக் கெடுப்பதா, அதைச் சகித்துக்கொண்டு நானும் 'தேவி' யாக இருப்பதா! பக்தியின் மேம்பாடு தெரிந்தோரே! பழமையைப் போற்றும் சீலர்காள்! புராண காலத்தைப் பொற்காலம் என்று கூறும் புண்யர்காள்! இது என் பிரச்னை மட்டுமல்ல, நன்றாக எண்ணிப் பாருங்கள். இது பொதுப் பிரச்சனை, நாம்

அனைவரும் கூடிப் பேசிப் பரிகாரம் கண்டாகவேண்டிய, சிக்கலான பிரச்னை.

புது இடம் தேடுகிறார்கள் என்றால், பழைய இடத்திலே நம்பிக்கை நசிந்துவிட்டது என்றுதானே பொருள்-இவ்வளவு காலமாக ஏமாந்தார்கள் என்பதுதானே இதன் பொருள்-என்று பேசுகிறார்கள்-அவர்கள் தானய்யா, சு.ம.க்காரர்கள்.

இது எத்தனை நாளைக்கோ? இன்னொன்று முளைக்கும் வரையிலும்!! என்று ஏளனம் செய்கிறார்கள்.

அவ்வளவும் புரட்டு, ஒவ்வொன்றாக அம்பலாமாகிறது என்று இடித்துரைக்கிறார்கள்!

எது அப்பா! மகிமை மிகுந்த இடம், சமயபுரமா? புறத்தாக்குடியா? என்று கேட்டுக் கேலிபேசுகிறார்கள். உண்மையான பக்தியும் கடவுள் நம்பிக்கையும் கொண்டவர்கள் இப்படியா சட்டை மாற்றுவதுபோல தொழுகை இடத்தை மாற்றிக்கொண்டிருப்பார்கள்? தெளிவு இருந்தால், இவ்வளவு காலத்துக்குப் பிறகா சமயபுரம் இவ்வளவுதான் என்ற புத்தி பிறக்கும்!-என்றெல்லாம் பேசுகிறார்கள்.

வீணாக அவர்கள்மீது கோபித்துக்கொண்டு பயன் இல்லையே! நானிருக்க, இன்னொரு அற்புதவான் கிளம்பலாமா? இப்படிப் போட்டியும் பொறாமையும், பொச்சரிப்பும் பூசலும் இருந்தால், அவ்வளவும் புரட்டு என்றுதானே, அவர்கள் பேசுவார்கள்.

ஆகவே, ஐயன்மீர்! என் செல்வாக்கைச் சிதைத்து, மதிப்பைக் குலைத்து, மகிமையைப் பழித்து, மதத்தின்மீதே மக்களுக்குச் சந்தேகம் பிறக்கும் விதமாக, புறத்தாக்குடி நடைபெறுவதால், மதத்தைக் காப்பாற்றவும், என் மகிமையைப் பாதுகாக்கவும், உடனே, ஒரு தடை உத்திரவு

பிறப்பித்து, புறத்தாக்குடியை மூடிவிடவேண்டும். இல்லையானால் எனக்கும் இழிவு, உங்களுக்கும் கேவலம்.

உற்பத்தியைப் பெருக்கு என்பது இன்றைய சர்க்காரின் கொள்கை, வேறு எதிலே உற்பத்தியைப் பெருக்க முடியவிட்டாலும், புண்யஸ்தல உற்பத்தியை யாவது பெ்ருக்குவது சரிதானே, என்று நம்மவர் சிலர், விஷயமறியாமல் வாதாடுகிறார்களாம்.

இந்தத் துறையில் உற்பத்தி பெருகப் பெருக, ஏற்கனவே உள்ளவைகளின் மதிப்பு மடிகிறது என்று பொருள், மொத்தத்திலே இந்தத் துறையின் மதிப்பே கெடும்.

மேலும், புறத்தாக்குடிக்குக் காரணம், கிருஸ்தவர் அதனை மறவாதீர்! சத்யமேவஜெயதீ! ரகுபதி ராகவ ராஜாராம்! இவை நமது மந்திரங்கள், கவனமிருக்கட்டும்.

நிலைமையின் நெருக்கடியையும், பிரச்சினையின் பயங்கரத்தையும் உணர்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால், புறத்தாக்குடியானும், அவனுக்கு உடந்தையாக நீங்களும் இருந்துகொண்டு என் மானத்தைக் கெடுக்கிறீர்கள் என்று குற்றம் சாட்டி, மானநஷ்ட வழக்குத் தொடுக்கத் தீர்மானித்துவிட்டேன். பூஜாரி, வெற்றி என் பக்கம் நிச்சயமாக இருக்கும் என்று உறுதி அளிக்கிறான். எனக்கே கூடத் தெரியும், என் சன்னதிக்கு எத்தனையோ ஜட்ஜுகள் வந்து போயிருக்கிறார்கள்.

என்னமோ எழுதினேன் என்று பராமுகமாக இருக்கவேண்டாம். உடனே பரிகாரம் தேடித்தரவும்.

இங்ஙனம்,
பலகாலமாக மகிமையுடன்
வாழ்ந்துவரும்
சமயபுரத்தம்மை.

குறிப்பு: அரசியல் காரியம் அதிகமாக இருக்கிறது என்று சாக்குக் கூறிவிடாதீர்கள், நமது அரசியலே மதத்தின்மீது கட்டப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்குக் கவனப்படுத்துகிறேன். மேலும் இப்போது, காங்கிரசை எதிர்த்த உழைப்பாளி கட்சி போன்றவை களைக்கூட பதவி கொடுத்துச் சரிப்படுத்தி விட்டதால், சர்க்காருக்கு தொல்லையே கிடையாது என்று பூஜாரி கூறுகிறான். புதிய மந்திரி பக்திமானாம்-இங்கே வருகிறாரோ, புறத்தாக்குடி போகிறாரோ, தெரியவில்லை. என் விஷயத்தை உடனே கவனித்து ஆவன செய்யவும்.

சமயம்மை.

☆ ☆ ☆

திருச்சி, மே 2-தங்கள் தீராத நோய்கள் தீருமென்ற நம்பிக்கையில் நூற்றுக்கணக்கான நோயாளிகள் இங்கிருந்து 12 மைல் தூரத்திலுள்ள புறத்தகுடி கிராமத்துக்கு வந்தவண்ணமிருக்கின்றனர்.

திருச்சி-சென்னை பிரதான சாலையில் புறத்தகுடி இருக்கிறது. அங்கு வாழ்வோர் பெரும்பாலும் ரோமன் கத்தோலிக்கர்கள். ஹிந்துக்கோயில் மாதிரி நூறு வருஷத்துக்கு முன் கட்டப்பட்ட ஒரு மாதா கோயில் இவ்வூரில் இருக்கிறது. மாதா கோயிலை ஒட்டியுள்ள மயானத்தில் பல வருஷங்களுக்கு முன், அருகிலுள்ள அருங்கலூர் கிராமத்தில் வசித்த பூஜ்யர் முடியப்பர் அடக்கம் செய்யப்பட்டார்.

கடந்த சில தினங்களாகப் பெரும்பாலும் ஹிந்து, முஸ்லீம் பெண்கள் உள்பட ஏராளமான நோயாளிகள் மாதாகோயிலுக்கு வந்தவண்ணமிருக்கின்றனர். நோயாளி களில் பலர் துர்த்தேவதைகளால் பீடிக்கப்பட்டவர்களாம்.

அடைப்புள்ள ஒரு இடத்தில், நோயாளிகள் உட்கார வைக்கப்படுகின்றனர். கொஞ்சநேரம் கழித்து அவர்கள்

வெளியே வருகின்றனர். அவர்களைப் பீடித்துக் கொண்டுள்ள துர்த்தேவதைகள் பறந்துவிடுவதாகக் கூறியதாக நோயாளிகள் தெரிவிக்கின்றனர். தேவதைபோய் விடுவதாகக் கூறியது பற்றி மூன்று முறை பிரமாணம் செய்யுமாறு நோயாளிகளிடம் மாதா கோயிலைச் சேர்ந்தவர்கள் கையில் தீச்சட்டி வைத்துக் கொண்டு கேட்கின்றனர்.

பின், நோயாளி அருகிலுள்ள பனந்தோப்புக்கு ஓடி, அங்குள்ள மரத்தில் தலையால் முட்டுகிறார். கோயிலைச் சேர்ந்தவர் நோயாளியின் தலை உரோமத்தைக் கொஞ்சம் கத்தரித்து மரத்தில் கட்டுகிறார். இத்துடன் சிகிச்சை முடிகிறது. துர்த்தேவதை நோயாளியைவிட்டு நீங்கி விட்டதாகக் கருதப்படுகிறது.

குஷ்டம், பார்வைக் குறைவு போன்ற நோயுள்ளவர்களும் இங்கு வருகின்றனர்.

எனினும் சிகிச்சை உண்மையானதுதான் என யாரும் உத்தரவாதமளிக்க முன் வரவில்லை. ஆனால் ஜனங்கள் பெருவாரியாக வந்தவண்ணமிருக்கின்றனர். இதனால், போக்குவரத்து, சுகாதாரப் பிரச்சனைகள் வேறு தோன்றியுள்ளன.

- தினமணி (5.5.54)

❋ ❋ ❋

அறிஞர் அண்ணாவின்

கடவுள் தண்டிப்பார்

ISBN : 978-93-80219-96-7

நூல் கிடைக்குமிடம் :

GO 644

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

www.gowrabookfair.com

கௌரா ஏஜென்ஸீஸ்
10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
gowra09@gmail.com

ரூ.